Registered as a News Paper

# ஈழநாதம்


விலை: 15.00
பக்கம் : 20

வெள்ளிநாதம் Weekly

நாதம்-14 | வெள்ளி-40 | 28-04-டிசம்பர்-2003



# பந்து சிங்களக்கட்சிகளிடம்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 28 .11. 2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# பந்து சிங்களக்கட்சிகளிடம்

தெற்கில் அரசியல் கொந்தளிப்பு கொதிநிலையில் இருக்கும் இன்றைய தருணத்தில் மாவீரர் தினத்தன்று தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் உரை மிகுந்த அரசியல் முக்கியத்துவம் மிக்கதாக எதிர்பார்க்கப்பட்டது.

நோர்வேத்தரப்பு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள அனுசரணைப் பாத்திரத்தின் வெற்றிடத்தில் அரச தரப்பில் பொறுப்புச் சொல்ல ஆளற்றிருக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டை விடுதலைப் புலிகள் பின்பற்றுவரா? இணக்கம் காணமுடியாமல் இழுபடும் கொழும்பு அதிகார மையங்களின் இழுபறிக்கு முடிவில்லாமல் விடுதலைப் புலிகள் சமாதானத்தைத் தொடர்ந்து பேணவும் தக்கவைக்கவும் முன்வருவார்களா? என்ற பலவித கேள்விகளுக்கு பதிலை தலைவர் பிரபாகரனின் உரையில் கேட்டுவிட அனைத்துத் தரப்பும் ஆவலாக இருந்தது.

அவர் தனது உரையில் இலட்சியத்துக்கான தியாகங்கள் வீண் போவதில்லை என உணர்வு பூர்வமான தொனியில் உரையின் ஆரம்பப் பகுதியில் குறிப்பிட்டு, இன்றைய தெற்கின் அரசியல் குழறுபடிகள் சிங்கள ஆளும் வர்க்கத்தின் அசிங்கமான முகம் உலகத்தின் முன் அம்பலப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறார். மேலும் சமரசப்பாதையில் இருந்து தமிழீழம் என்னும் இறுதித் தெரிவிற்கு தம்மைத் தள்ளி விடவேண்டாமென சிங்கள அரசியல் தலைமைகளிடம் வேண்டுகோள் விடுக்கிறார்.பூடகமான உணர்த்தல்களை விடுத்து இம்முறை தனது உரையில் நேரடியாக தமது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறார்.

வோஷிங்டன் மாநாட்டிற்கு தம்மை அழைக்காததன் மூலம் இரு தரப்பு என்ற சமநிலை உடைக்கப்பட்டு தாம் சிறுமைப்படுத்தப்பட்டதையும், ரணிலின் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் பேச்சின் இலக்கை திசைமாற்றி விட்டதையும், ரோக்கியோ மாநாடு சமாதானபேச்சு செல்ல வேண்டிய வழிபற்றிய வரைபடத்தை தயாரித்து வைத்திருந்தது பற்றியும் அனுசரணைத் தரப்பிற்கு இதில் இருக்கக் கூடிய பங்கு பற்றியும் தமக்கிருந்த அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்; சாடியிருக்கிறார்.

யுத்த நிறுத்த காலத்தில் அரசதரப்பின் யுத்த நிறுத்த மீறல்களால் தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள், ஆத்திரமூட்டல்களை பொறுமையோடு சகித்துக் கொண்டதில் இருந்து சமாதானத்தைப் பாதுகாப்பதில் தமக்கு இருந்த அக்கறையை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

சமாதான காலம் சிங்கள மக்களுக்கு போர்ஓய்ந்ததற்கான பலாபலன்களை அடைய வைத்ததே தவிர, தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினையை தீர்ப்பதை பின்தள்ளி விட்டு இராஜதந்திர முயற்சியில் பொருளாதார மறுசீரமைப்பு, சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் என்பவற்றை முன்நிறுத்திச் செயற்பட்டதன் விளைவுகளால் எழுந்த சூழல் பேச்சை இடைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை அதற்கான புற நிலைகளாக உருவாக்கிவிட்டதை தெளிவுபடுத்துகிறார்.

மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பும் இணங்கிய போதும் அது திசைமாறாமல் இருப்பதற்கு தமிழ் மக்களுக்கான அவசர பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு இடைக்கால அதிகார அலகை தாம் கோரியதையும், அரசு முன்வைத்த யோசனைகள் போதிய அதிகாரத்தைத் தர மறுத்ததையும், மாற்றீடாக தாம் ஒரு யோசனையை முன்வைப்பதன் மூலம் பயன்பொருத்தமான வழியில் பேச்சை முன்னெடுத்துச் செல்ல வகை செய்யலாம் என்பதை தாம் வெளிப்படுத்தியதையும் எடுத்தியம்புகிறார்.

இறுதியில் தமது திட்டவரைபு ஏற்படுத்தியிருக்கும் கொந்தளிப்பும், தெற்கின் அரசியல் குழறுபடிகளும் காலம் காலமாக சிங்கள அரசியல் கட்சிகளிடமிருந்து தமிழ் மக்கள் பெற்ற கசப்பான அனுபவ வரலாற்றின் தொடர்ச்சியே எனச் சாடுகிறார்.

சிங்கள அரசியல் கட்சிகள் அவ்வப்போது எழுந்த புறநிலைகள் கருதி சமாதானத்திற்கு வந்த போதும் அவை தீர்வு என்ற இலக்கைக் கொண்டிருக்கவில்லை. தீர்வை முன்வைப்பதில், அல்லது விட்டுக்கொடுப்பை செய்வதில் எதிர்க்கட்சியை காரணம் காட்டி தமது நெருக்கடி காலத்தை சமாளித்து விடவே முயன்றன. அதே நேரம் பேச்சின் முறிவில் சமாதான விரோதிகளாகவும் வன்முறைப்பிரியர்களாகவும் விடுதலைப் புலிகளை சுட்டுவதில் அவை வெற்றி பெற்று வந்தன.

இம்முறையோ புலிகள் ஒரு இடைக்கால திட்டவரைபை முன்வைத்து அது உலகின் பல நாடுகளால் வரவேற்கவும் பட்டிருக்கும் சூழலில் ஜனநாயக நீரோட்டத்தில் கலப்பதற்கு தாம் எதிரானவர்கள் அல்லர் என்பதை வெளிப்படுத்தி அதற்கு வாய்ப்பும் கேட்டிருந்த சமயத்தில் தென்னிலங்கை அரசியல் கொந்தளித்து ஐம்பது வருட இனவாத அரசியல் மெய்மையை வெளிப்படுத்தியிருக்கின்றன.

இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தீர்மானித்த இருபெரும் அரசியல் கட்சிகளின் அதிகார இழுபறி அவரவர் முகங்களை உலகத்திற்கு காட்டி நிற்கிறது. தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று பிறப்பதற்கான வங்குரோத்துத் தனத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது.

பிரதமர் ரணிலோ பாகனின் கைகளிலேயே அங்குசம் இருக்கவேண்டும் என்கிறார். சந்திரிகா அம்மையாரோ எதிர்க்கட்சியில் ரணில் இருந்தபோது தேசிய அரசுக்கு அழைப்பு விடுத்தார். இப்பொழுது அதற்கான அவசர தேவை வந்து விட்டது தேசிய அரசு அமைக்கலாம் வாருங்கள் எனகிறார்.

தலைவர் பிரபாகரனோ புலிகள் ஜனநாயக விரோதிகள் என்றும் வன்முறை விரும்பிகள் என்றும் பிரிவினைவாதிகள் என்றும் காலம் காலமாலக கூறி வந்த, சர்வதேசத்தை நம்புவித்து வந்த அதே கட்சிகளின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார்; முடிந்தளவிற்கு சமாதானத்தைப் பாதுகாப்பதில் நாம் முயற்சித்து வருகிறோம் எம்மைப் பிரிவினைக்குத் தள்ளிவிடவேண்டாமென்று. அரசியலில் எதிர் மறையான காட்சிகள் அரங்கேறி கடந்துபோன வரலாற்றையும் தோலுரித்துக் காட்ட சர்வதேசம் வாயடைத்து பார்த்திருக்கிறது.

சர்வதேசத்தின் முன் சமாதானப் பாதையை அடைத்தும் பிரிவினையை தூண்டியும் வற்புறுத்தியும் வருபவர்களை முன்நிறுத்தி அடையாளம் காட்டியிருக்கிறது தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரையும் அதில் விடுக்கப்பட்ட வேண்டுகோளும்.

சிங்கள தேசத்தின் தமிழர்கள் பற்றிய வெட்கம்கெட்ட பிரச்சாரம் வெட்கித் தலை குனிந்து போய் நிற்கிறது. இப்போது பந்து அவர்களிடம்.

# சுதந்திரத்துக்காக தம்முயிரை ஈகம் கொடுத்த மாவீரர்கள்

விடுதலை என்பது அக்கினிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்: தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்குத் தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள் என்கிறார் தமிழீழத் தேசியத் தலைவர்.

சங்கரும், செல்லக்கிளியும், மில்லரும், அன்னை பூபதியும், கிட்டண்ணாவும், தியாகி திலீபனும், வானதியும் இன்னும் ஏராளமான அத்தனை தியாக தீபங்களும் எங்களுக்கு எச்சங்களாக தங்கள் தியாகங்களைத் தான் விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்கள் அத்தனை பேருமே இறந்தது எமக்காக. எமக்காக என்ற ஓர் பன்மைப் பதத்தைப் பாவிப்பதை விட, எனக்காக என்ற ஓர் ஒருமைப் பதத்தை ஓங்கி ஒருமுறை சொல்லிப் பார்ப்பது பொருத்தமானது.

வாழ்க்கையைத் தீர்க்க தரிசனமாகப் புரிந்துகொண்ட இவர்கள் இதயம் மிகவும் மென்மையானது. ஆனால் உறுதியானது. வீரத்தையும், தியாகத்தையும் தம் குருதியில் நிறைத்துக் கொண்டவர்கள் இவர்கள்.

ஹிட்லரின் அட்டூழியத்தில், எதிர்ப்புக்காட்டாத ஒரு இனத்துக்கு இழைக்கப்பட்ட கொடிய அநீதி, எமது தியாக வீரர்கள் எதிர்ப்புக் காட்டியதால் விளைந்த நன்மையை நியாயப் படுத்துகிறது. இதோ அந்தக் கோர வரலாற்றிலிருந்து ஒரு பகுதி:-

"அவுஸ்விச்" ஜேர்மனியின் ஒதுக்குப்புறமான பகுதியொன்றில் அமைந்திருந்த சிற்றூர். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் எந்தவித பிரபலமுமற்றுக் கிடந்த இந்தச் சிற்றூர் போர் முடிந்தபின் - நரகலோகத்தின் ஒருபெரும் நகரமாக, உலகமாந்தரால் சித்தரிக்கப்பட்டது.

ஜேர்மனியின் ஆட்சியாளனாக அடொல்ப் ஹிட்லர் தெரிவு செய்யப்பட்டவுடன் யூதர்களைப் பூண்டோடு ஒழிக்கும் தனது பகிரங்கக் கொள்கையை அமுல்படுத்தத் தொடங்கினான். இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும் ஜேர்மனியிலும் நாஜிப் படைகளால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய நாடுகளிலும் வசித்த யூதர்கள் சுற்றிவளைக்கப்பட்டு தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இலட்சக்கணக்கில் கைது செய்யப்பட்ட யூதர்களை விரைவாகவும், செலவு குறைவாகவும் கொன்றொழிப்பதற்காக விஷவாயுக் கூடங்களை அமைக்க "ஹிட்லர்" உத்தரவிட்டான்.

இவ்விதம், நச்சுவாயுக் கூடத்துடன் நிறுவப்பட்ட பாரிய தடுப்பு முகாம்களில் ஒன்று "அவுஸ்விச்". மொத்தம் 60 இலட்சம் யூதர்கள் நாஜிகளால் கொல்லப்பட்டனர். இவர்களில் 40 இலட்சம் மக்களின் உயிர்கள் "அவுஸ்விச்" இல் வைத்துத்தான் அழிக்கப்பட்டன.

"அவுஸ்விச்" கொலைக் களத்தின் பிரதம அதிகாரி "டாக்டர் ஜோசப் மெஞ்சேல்" என்பவன். இவனும் ஒரு மருத்துவ நிபுணனாவான். இவனை கிரிமினல் டாக்டர் என்றே நூலாசிரியர் வர்ணிக்கின்றார். யூதர்கள் மேல் விஞ்ஞானப் பரிசோதனைகளை நடாத்தி, யூத இனம் தொடர்பான ஹிட்லரின் இனக் கொள்கை சரியானது என்பதை நிரூபிக்கும் உயிர்க்கூற்று ஆதாரங்களை நாஜித் தலைமைப் பணிமனைக்கு அனுப்புவது இவனின் முக்கிய பணி. இந்த மருத்துவப் பணிகளைச் செய்துகொடுத்து உதவும் கட்டாய பணியே நூலாசிரியரின் சிறைப்பணியாகும்.

"ஒருநாள் முதுகு கூனலான தந்தையையும், ஒரு கால் ஊனமான மகளையும் எனது சத்திரசிகிச்சை மேசைமுன் கொண்டு வந்து நிறுத்தினர்" ஒருகோர நிகழ்ச்சியை நூலாசிரியர் கூறத் தொடங்குகின்றார். "இவர்களுடைய அங்கவீனத்திற்கு என்ன காரணமென்று மருத்துவ அறிக்கை தருமாறு நாஜி அதிகாரி கேட்டான். அந்த அப்பாவித் தந்தையையும் மகளையும் மேசை மீது படுக்கவைத்துப் பரிசோதித்து முடித்தேன். பின்னர் இருவரையும் அடுத்த அறைக்கு நாஜி அதிகாரி கூட்டிச சென்றான். அங்கே உடைகள் களையப்பட்டு பின் தலையில் சுட்டு இருவரையும் சாகடித்தான். செத்த இருவரது பிணங்களும் மேசையில் கிடத்தப்பட்டன. பிணத்தை அறுத்து அங்கவீனத்துக்கான உட்காரணிகள் யாவை என அறிக்கை தருமாறு கேட்டார்கள். சற்று நேரத்தில் "அவுஸ்விச்" சின் தலைமையதிகாரி நாஜி அங்கே வந்தான். இரண்டு பிணங்களையும் பார்த்து விட்டு, "அவற்றை எரிக்காது எலும்புக் கூடுகளாக மாற்றி பேர்லினிலுள்ள மானுடவியல் நூதனசாலைக்கு காட்சிப் பொருளாக அனுப்ப வேண்டும்" என்றார். தகுந்த இரசாயான பொருட்கள் இல்லாததால் பிணங்களை பாரிய அண்டாவுக்குள் போட்டு நீர் ஊற்றி அவிக்கும்படி கூறினேன் 5மணி நேரமாக அவித்தபின் தசைகள் பெரும்பாலும் எலும்பை விட்டு கழன்றுவிட்டன. எனினும் குளிர்வடையும் போதே மிகுதியும் சுலபமாகக் கழரும் என்ற காரணத்தால் நான் சற்று சரிந்து ஓய்வெடுத்தேன்."

இவ்வாறு வர்ணித்துச் சென்ற நூலாசிரியர், அருவருப்பூட்டும் அவலமொன்று திடீரென அங்கே நடந்தேறிய விதத்தையும் விளக்குகின்றார். "அப்போது எனது உதவியாள் ஓடிவந்து "டாக்டர்" அந்த அவிச்ச பிணங்களின் தசைகளை போலந்துக்காரர்கள் தின்னுறாங்கள்" என்றார்.துள்ளி எழுந்த நான் காலிடற அடுப்பு நோக்கி ஓடினேன். எலும்பும் தோலுமாகக் காட்சியளித்த இரண்டு கைதிகள் இறைச்சி சமைக்கப்படுகின்றது என நினைத்து பசியில் மனிதத் தசைகளை உண்டுகொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து உண்மையை நான் கூறியபோது அவர்கள் பயந்து வாந்தி எடுத்து செயலிழந்து நின்றார்கள். மண்ணெய்யில் எலும்புக்கூடுகள் கழுவப்பட்டு எனது சத்திர சிகிச்சை மேசையில் இரண்டு எலும்புக்கூடுகளும் வைக்கப்பட்டன.

கல்நெஞ்சங்களையும் உருகச்செய்யும் இந்த கொடூர சம்பவத்திற்கு நூலாசிரியர் இப்படி முத்தாய்ப்பு வைக்கின்றார்.

"காலையில் உயிருடன் பரிசோதித்த தந்தையும், மகளும் சிறிது நேரத்தில் அதே மேசையில் பிணங்களாகக் கிடத்தப்பட்டனர். இப்போது மாலையில் அவர்கள் எலும்புக்கூடுகளாக அந்த மேசையில் கிடக்கிறார்கள்.

இப்படியே நாம் கூற, நீங்களும் கதை கேட்டுத் திகிலடைகிறீர்கள் அல்லவா. இது எங்கள் மண்ணிலும் நடந்தேறியிருக்கும். மறந்து விடாதீர்கள். வைத்தியர்கள் எம் உடலை அவித்து எலும்பை எடுக்காவிட்டாலும், 77இலும் 83இலும் துடிக்கத் துடிக்க எரியும் தார்ப் பீப்பாக்களில் எறிந்ததை எப்படி நாம் மறக்க முடியும். குழந்தையொன்றை அடுப்பிலிருந்த எண்ணெய்ச் சட்டியில் எறிந்ததையும், இன்னுமொரு குழந்தையை உயிரோடு இரண்டாகப் பிய்த்து எறிந்த கோரங்களையும் எப்படி நாம் மறக்க முடியும்.

ஹிட்லரின் கொடூரங்களும் நிச்சயம் எங்கள் மண்ணில் நடந்தேறி, எம் பிரதேசமே, 'அப்பே ஈலம' என்ற பெயரில் புதிய சிங்கள தேசமாக காட்சி தந்திருக்கும். யாருக்காவது சந்தேகமிருந்தால், கிருஷாந்தி, சாரதாம்பாள் இன்னும் அழித்துக் கொல்லப்பட்ட செம்மணி உடல்கள், நெடுந்தீவுக் கடலின் பயங்கரம், பஸ்ஸில் பயணித்தவர்களெல்லாம் அழிந்துபோன உண்மைகள், இனக் கலவரங்களில் அழிந்துபோனவர்கள், வெலிக்கடை உட்பட பண்டாரவளை மற்றும் அனைத்துச் சிறைகளிலும், பூசா போன்ற தடுப்பு முகாம்களிலும் வதையுண்டு இறந்துபோன தமிழ் மக்கள், குமார் பொன்னம்பலம் போன்ற பலமான எதிர்ப்புக் குரல்களையெல்லாம் நினைத்துப்பார்த்தால், எமது மண் அப்படியே இல்லாமல் போய், புதிதாக எழுதப்பட்ட மகாவம்சத்தில், 'சிறீலங்கா' ஆயிரம் ஆண்டுகளாய் சிங்களக் குடியேற்றம் கண்ட பூமி என்று எழுதப்பட்டிருக்கும். இது சரி என்று படுகிறதா? இல்லை என்று பட்டால், இந்த அழிவைத் தடுத்தவர்கள் யாரென்றும் புரிந்திருக்கும்.

வேறுயாருமல்ல. எமக்காக தம்மைக் கொடுத்த மாவீரர்கள்தான். அவர்களின் ஈகத்தினால்தான் எம் இருப்பை நாம் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளோம். ஓடி ஒழிந்து இங்கே வாழும் நாமோ, நம் வசதிகளோ, உதவிகளோ, ஊடகங்களோ அல்லது வேறு எந்த உந்து சக்திகளோ எம் மண் அழிவை தடுத்து நிறுத்தவில்லை. எம் மண் அழிவைத் தடுத்தவர்கள் இந்தத் தற்கொடையாளர்களே! இவர்களின் விழுதுகளில்தான் நாம் தொங்கிக்கொண்டிருக்கிறோம். தலைவனின் நெஞ்சுரத்தில் தான் இவர்கள் குருதி மீண்டும் மீண்டும் தமிழீழ இலக்கைப் பிரசவித்து நிற்கிறது. இவர்கள் தியாகங்கள் கார்த்திகை 27க்கு மட்டும் சொந்தமானவை அல்ல. வருடத்தின் 365 நாட்களும், நாம் வாழும் காலமனைத்தும் எம்மில் அனுமானிக்கப்பட்டு, தியானிக்கப்பட்டு ஜீரணிக்கப் படவேண்டியவை.

சத்தியத்தை நேசிக்கும் உறுதிபூண்ட நெஞ்சம் இவர்களுடையது. இவர்களுடைய தியாகத்திலே நிறைந்திருப்பது எல்லாம் தமிழின விடுதலை ஒன்று மட்டும் தான்.

"அடிமை சனத்திடம்" ஆக்ரோஷத்தைக் கொடுத்து தட்டிக் கேட்கும் குரலைக்கொடுத்த தலைவனின் கைகளைப் பலப்படுத்தி தொடர்ந்து நடப்போம். வெற்றி என்பதே எமது இலக்காக இருக்கட்டும்.

— சுதந்திரன்

துவேஷம், அறியாமை பெற்றெடுத்த குழந்தை. - வில்லியம் ஹேஸ்லிட்

# தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 2003ம் ஆண்டு மாவீரர் நாள் உரை


## சத்திய இலட்சியத்திற்கான தியாகங்கள் வீண்போவதில்லை

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

இன்றைய நாள், வணக்கத்திற்குரிய புனித நாள். இன்று, தமிழீழ தேசம் சுதந்திர தாகம் கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகஞ்செய்த எம்மினிய வீரர்களை எமது இதயக் கோவில்களில் நாம் நெஞ்சுருகிப் பூசிக்கும் திருநாள்.

அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும் அயலவருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடை பெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச்



சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலக மயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழிதழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற் காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை.

எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்ற வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடு தலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூக மாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங் களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றுதிரளவைத் திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத் தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதார சக்தியாக விளங்குகின்றன.

## கொழும்பு அதிகார இழுபறியால் அமைதிச் சூழலுக்கு ஆபத்து

எனது அன்பான மக்களே!

சிங்கள தேசத்தில் இன்று அரசாங்கம் என்று கருதக்கூடிய ஓர் ஒழுங்கமைவான கட்டமைப்பு இயங்கவில்லை. அரச அதிகாரமானது, இரு பெரும் சிங்களக் கட்சிகளின் தலைமைகள் மத்தியிற் பிளவுபட்டுக் கிடக்கிறது. பாராளுமன்ற ஆட்சியும் சனாதிபதி ஆட்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதும் நிலையில் உள்ளன. பாதுகாப்பு, உள்துறை, ஊடக அமைச்சுகளை சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக் கொண்டதால் ரணில் விக்கிரம சிங்காவின் ஆட்சி பீடம் அதிகார வலுவிழந்து முடங்கிக் கிடக்கிறது. இரு தலைவர்களுக்கும் மத்தியிலான இந்த அதிகார இழுபறியால் அரசகட்டுமானம் ஆட்டம் கண்டு உறுதிநிலை குலைந்துள்ளது. இந்த நெருக்கடி காரணமாகச் சமாதான முன்னெடுப்புகள் செயலிழந்து போயின. இந்தக் குழப்பநிலையால் விரக்தியடைந்த நோர்வே அரசு தனது சமாதான முயற்சிகளை இடை நிறுத்தியுள்ளது. தென்னிலங்கையில் திடீரென உருவாகியுள்ள இத்தகைய நிலைமைகள் காரணமாக அமைதிச் சூழ்நிலைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. சமாதான வழியிலான பேச்சுக்கும் சமரசத் தீர்வுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந் நெருக்கடி நிலைமை தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சமாதானத்தை விரும்பும் சர்வதேச நாடுகளுக்கும் கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது.

கொழும்பில், திடீரென இந்த அரசியற் பூகம்பம் ஏற்பட்டதன் காரணமென்ன? ஏற்கனவே இரு துருவங்களாக முரண்பட்டிருந்த அரச அதிகார மையத்தில் திடீரென விரிசல் விழுந்ததன் காரணமென்ன? போர்ஓய்வைப் பேணி அமைதியைக் காப்பதற்கு அத்தியாவசியமான பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளைச் சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக்கொண்ட புறநிலைக் காரணி என்ன?

தனது தலையீட்டுக்கு இரண்டு காரணங்களை முன்வைக்கிறார் சந்திரிகா. ஒன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் தனது இராணுவக் கட்டமைப்பைப் பலப் படுத்திப் போருக்கான ஆயத்தங் களைச் செய்து வருவதால் இலங்கையின் பாதுகாப்புக்கும் இறை மைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பது. அடுத்தது, ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்குப் பெரிய அளவிற் சலுகைகளை வழங்கி வருகிறது என்பதாகும். இந்த இரண்டு குற்றச் சாட்டுகளிலும் எவ்வித உண்மையுமில்லை என்பதை நான் இங்கு திட்ட வட்டமாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். எமது விடுதலை இயக்கத்தைக் களங்கப்படுத்தும் குறிக்கோளுடனும் தற்போதைய சமாதானச் சூழ்நிலையைக் குழப்பிவிடும் நோக்கத்தோடும் கட்டவிழ்த்துவிடப்பட்ட புரளிகள் இவை.

## ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் சகித்து அமைதி காத்து வருகின்றோம்

எமது இயக்கமுஞ்சரி, மக்களுஞ்சரி போரை விரும்பவில்லை. வன்முறைப் பாதையை விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். சமாதான வழியில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றோம். சமாதான வழிமுறையில் நாம் ஆழமான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகவே அமைதி நிலைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாத வண்ணம் போர் நிறுத்தத்தை நாம் இறுக்கமாகவும் உறுதியாகவும் பேணி வருகின்றோம். இப் போர்நிறுத்தத்தை எமது இயக் கமே முதலில் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப் படைகளின் ஆத் திரமூட்டும் நடவடிக்கைகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு நாம் அமைதிகாத்து வருகின்றோம்.

நாம் பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போருக்கான ஆயத்தங்களைச் செய்துவருகின்றோமென சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது அபாண்டமான பொய்யாகும். அமைதி காக்கும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோமே தவிர போருக்கான ஆயத்தங்கள் எதையும் செய்யவில்லை. எமது நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு ஆட்பலம் தேவை என்பதால் சிறிய அளவில் ஆட்சேர்ப்புச் செய்து வருகின்றோம் என்பது உண்மை. இதனைத் திரிவுபடுத்தி, பெரிதுபடுத்திப் போருக்கான முன்முயற்சியெனச் சிங்கள மக்க ளுக்குப் பூச்சாண்டி காட்டுகிறார் சந்திரிகா.

## போர்நிறுத்தப் பயன்களை சிங்கள தேசமே அனுபவிக்கிறது

இப் போர்நிறுத்தத்தால் தமிழர் தாயகத்தில் முழுமையான அமைதிநிலை ஏற்படவில்லை. இயல்பு நிலையும் திரும்பவில்லை. அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளான அவலவாழ்க்கையே தொடர்கிறது. சிங்கள இராணுவம் போர் நிறுத்த விதிகளையும் கடப்பாடுகளையும் நிறைவு செய்ய மறுத்து வருகிறது. உயர் பாதுகாப்பு வலையங்கள் என்ற போர்வையிற் கணிசமான குடியிருப்பு நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்வதால், இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் திரும்பமுடியாது அவலப்பட்டு வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்கள் அடிக்கடி தலைதூக்கி வருகின்றன. இதனால் தமிழ்ப் பொதுமக்கள் சதா துன்பத்திற்கும் இம்சைக்கும் ஆளாகிவருகின்றனர். போருக்கு ஓய்வு ஏற்பட்ட போதும் எமது மக்களுக்கு இன்னும் ஓய்வு கிட்டவில்லை. முழுமையான அமைதியையும் இயல்பான வாழ்வையும் எமது மக்கள் இன்னும் அனுபவிக்க முடியவில்லை. அதேவேளை, போர் நிறுத்தத்தாற் சிங்கள தேசத்தில் முழுமையான அமைதியும் இயல்பு நிலையும் நிலவுகிறது. பொருளாதார வாழ்வும் மேம்பட்டு வருகிறது. போர் நிறுத்தத்தின் ஆக்கபூர்வமான பயன்களைச் சிங்கள தேசமே அனுபவித்து வருகிறது. ஆனால் தமிழர்களின் அவலநிலை தொடர்கிறது. இதுதான் இன்றைய யதார்த்தமெய்நிலை.

இரண்டு ஆண்டுகளாக நீடிக்கும் போர்நிறுத்த காலத்தில், சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது போல, எமது இயக்கத்திற்குப் பெரும் சலுகைகள் வாரி வழங்கப்படவில்லை. மாறாக, இழப்புக்களையே நாம் சந்தித்திருக்கிறோம். போர்நிறுத்தக் காலத்தில் எமது இயக்கத்திற்குச் சொந்தமான இரு பெரும் வணிகக் கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பிற் கடற்படையினரால் தாக்கி அழிக் கப்பட்டன. எமது மீன்பிடிப் படகுகளும் நாசமாக் கப்பட்டிருக்கின்றன. இச் சம்பவங்களின் விளைவாக, மூத்த உறுப்பினர் பலர் உட்பட கடற்புலிப் போராளிகள் இருபத்தாறு பேரை நாம் இழந்தோம். பொறுமையின் எல்லைக்கு எம்மைத் தள்ளிய இந்த ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் சகித்துக் கொண்டு நாம் அமைதியைப் பேணிவந்தோமென் றால் அது சமாதானத்தில் எமக்குள்ள உறுதியையே எடுத்துக் காட்டுகிறது.

## தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை பேச்சின் இலக்கு திசைமாறியது

எமது விடுதலை இயக்கத்திற்கும் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுக்கும் மத்தியிற் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், தாய்லாந்தில் ஆரம்பித்த பேச்சுக்களில் உருப்படியான, ஆக்கபூர்வமான முன்னேற்றம் எதுவும் காணப் படவில்லை. ஆறுமாத காலத்திற்குள் நிகழ்ந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் முடிவுகளும் நிறைவேற்றப்படவில்லை. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்கும் இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து போயின. அரசுடன் பேசி எமது மக்கள் எதிர்கொண்டு நின்ற பூதாகரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது, இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, போரால் அழிவுற்ற கட்டுமானங்களை மீளமைப்பது, அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது போன்ற எமது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்துவிட்டு, அரச தரப்பும் அனுசரணையாளர்களும் மனித விழுமியங்கள் பற்றியும் இறுதித் தீர்வுக்கான வழிமுறைகள், வரைபடங்கள் பற்றியுமே முக்கிய கவனம் செலுத்தினர். இதனாற் பேச்சுவார்த்தை, மக்களது பிரச்சி னைகளுக்கும் அபிலா சைகளுக்கும் அப் பால் வேறு திசை யில் நகர்ந் தது.



## சர்வதேசத் தலையீடுகள் அதிகரிப்பு எதிர்மறை விளைவைத் தந்தன


இது இவ்வாறிருக்க, சமாதானப் பேச்சுக்களை ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டி, உலக நாடுகளிலிருந்து உதவியையும் கடனையும் பெற்று, போரினால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ரணிலின் அரசு அதீத அக்கறைகாட்டியது. அத்துடன் உலக நாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஒரு சர்வதேசப் பாதுகாப்பு வலையத்தை நிறுவிவிடவும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டது. ரணில் அரசின் இத் தந்திரோபாயம் காரணமாகச் சமாதான முயற்சியிலும் பேச்சுக்களிலும் உலக நாடுகள் பலவற்றின் அக்கறையும் தலையீடும் அதிகரித்தன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகைய வரையறைக்குள் தீர்வுகாணப் படவேண்டும் என்பதையும் சில நாடுகள் வலியுறுத்திக் கூறின. இவ்விதம் சர்வதேசத் தலையீடுகள் அதிகரித்ததன் எதிர்மறை விளைவாகச் சமாதானப் பேச்சு மேலும் சிக்கலடைந்தது. இந்தச்

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

தாமதம் அனைத்தும் வெறுக்கத்தக்கதே; ஆனால், அது விவேகமும் ஊட்டும். - புப்லிலியஸ் ஸைரஸ்

# நறுக்கென...

## புஷ் வாணமாகிவரும் 'புஷ்'மானம்



'ஆழம் தெரியாமல் காலைவிடுதல்' என்றொரு பழமொழி தமிழில் உண்டு. அமெரிக்க அரசின் சர்வதேச சமூகம் மீதான அதிகார ஆளுமையின் அத்துமீறல்களுக்கு இப்பழமொழி வெகுவாகப் பொருந்தும்.

அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாத நாடும் அதுவாகத்தான் இருக்கும்.

'உலகப் பொலிஸ்காரன்' அல்லது 'உலகச்சண்டியன்' என்ற மேலாதிக்க சிந்தனையுடன் கூடிய கௌரவமற்ற தகுதி நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக தனக்குப் பிடித்தமான தனக்குக் கீழ்ப்படிந்து 'ஆமாசாமி' போடக்கூடிய நாடுகளைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டு, தனக்கு மடங்காத அல்லது தனது கைக்குள் போட்டுக்கொள்ளவேண்டும் எனத் தான் இலக்குவைத்து காத்திருக்கும் நாடுகள் மீது அச்சுறுத்தல் விடுத்து சீண்டிப்பார்ப்பதும், அதற்கு மடங்காவிட்டால் அந்த நாடுகளை அடித்து ஒடுக்கி தன்வசமாக்க முயல்வதும் அதன் பாரம்பரிய சுயநல சுபாவமாக இருந்து வந்துள்ளதை சரித்திரத்தின் பல அத்தியாயங்கள் வெளிக்கொணர்வதாக உள்ளன. இங்கே முக்கியமான விடயம் 'சண்டியாய் எழுவான், நொண்டியாய் விழுவான்' என்ற தத்துவத்திற்கு ஏற்ப அமெரிக்காவின் அத்துமீறல்களின்போது அது அவ்வப்போது மூக்குடைபட குத்துவாங்கும். குத்துச்சண்டைவீரனின் நிலையில் அவலப்பட்டாலும், அவமானப் பட்டாலும், 'விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்ற கதையாக அடுத்த உதைவாங்க லுக்கும் ஏதோ ஒரு வகையில் தயாராவதேயாகும்.

வியட்நாமில் பட்டபாடு உலகம் அறிந்த ஒன்றே! - இப்போது ஈராக்கில் அதே நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அமெரிக்காவுக்கு.

தினமும், ஈராக்கில் அமெரிக்க படைகள் எதிர்கொள்ளும் அவலங்கள் அமெரிக்க எதிர்ப்பு உலகத்தால் மௌனமாக ரசிக்கப்பட்டும், பரவலாக விமர்சிக்கப்பட்டுவரும் விடயங்களாகிவிட்டன.

சதாமின் புதல்வர்களை படுகொலை செய்து தனது பதாகையை உயர்த்திய அமெரிக்காவால் தனது புதல்வர்கள் பலர் அன்றாடம் மூடப்பட்ட பெட்டிகளில் சடலங்களாக வந்திறங்குவது சகிக்கவே முடியாத விடயமாகும். ஆனாலும் இந்த அவலம் அன்றாட தொடர் நிகழ்வாகி 'புஷ்' நிர்வாகத்தின் காற்றை 'புஸ்ஸென' இறக்கிக் கொண்டு வருகிறது.

சதாமின் படைகளின் பழிவாங்கல் இன்னும் எந்தெந்த வடிவங்களில் வருமோ என அமெரிக்கப் படையினர் தூக்கமும் நிம்மதியுமின்றி ஈராக்கில் தமது நாட்களைக் கழித்து வருகின்றனர்.

பின்லேடன் பிடிக்க ஆப்கானில் ஒரு காலை விட்டு எடுக்க முடியாது திணறும் நிலையில், சதாமைப் பிடிக்க ஈராக்கில் மறுகாலையும் விட்டு தடுமாறும் புஷ் நிர்வாகம் ஈராக் மக்களிடம் ஆட்சியை ஒப்படைக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த உத்தரவு விடுத்துள்ளது.

"அளவற்ற அதிகாரம் அளவற்ற அவமானத்தையே சுமக்க வைக்கும்" இது அமெரிக்கா இன்னமும் அறியாது இருக்கும் அவசரப் பாடம். புஷ்ஷின் இந்த உத்தரவு அமெரிக்க படையினரின் உயிர்களைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சியே தவிர, ஈராக் மக்களின் உரிமைகளைக் கொடுக்கும் முயற்சியல்ல என்பதும் உலகம் அறிந்த ஒன்றே!

## தமிழகத் தலைவியின் மறுமுகம்



அயலகத் தமிழ் நாட்டின் 'முடிசூடா' அதிகார அம்மணி ஜெயலலிதா, சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகாவுக்கு எல்லா வகையிலும் சளைத்த ஒருவரல்ல.

அவர் ஆரவல்லி என்றால் இவர் சூரவல்லி. அவ்வளவுதான் ( ஆரவல்லி, சூரவல்லி கதையை வீட்டிலுள்ள பழம் பெரும் மக்களிடம் கேளுங்கள் சுவையாக இருக்கும்.)

இங்கே ஆரவல்லியின் அதிகார ஆட்டத்தின் அதிரடி அதிர்வுகள் அரசாங்கத்தையே ஆட்டம் காணவைத்துள்ள நிலையில் அங்கே சூரவல்லியின் அகங்காரம் வேகம் கொண்டுள்ளது.

சகல சட்டத்தையும் தனக்கு சாதகமாக்கி, தன் அரசியல் மற்றும் சகலதுறை எதிரிகளையும் கதிகலங்க வைத்துவரும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் எல்லை மீறி வருவதாகக் கூறப்படுகிறது.

ஹிட்லர் மற்றும் முஸோலினியை விடவும் அவர் மோசமாக செயற்பட்டுவருகிறார் என அவரது முன்னாள் சகாவான பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளமை இதனை தெளிவாக விளக்கும்....

இது மட்டுமல்ல இடிஅமீனை விடவும் கூட அவர் மோசமான சர்வாதிகாரியாக விளங்குகிறார் என்றும் வர்ணித்துள்ளார்.

ராமதாஸ் மட்டுமல்ல பாகிஸ்தானின் - அதாவது இராணுவ சர்வாதிகார ஆட்சி நடக்கும் பாகிஸ்தானின் - வெளியுறவுத்துறை அமைச்சர் கூட தமிழகத்தில் ஜெயலலிதாவின் அகங்கார ஆட்சி குறித்து கருத்து வெளியிடுகையில், தமிழகத்தில் பேச்சு சுதந்திரம், எழுத்துரிமை, எதுவும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்....!

என்னடா இந்தத் தமிழகத்திற்கும், தமிழனுக்கும் வந்த சோதனை என்று நினைக்கிறீர்களா?

இதனைவிட பலகோடி பெறும்தியான ஊழல்களில் சிக்கியுள்ள போதிலும் ஜெயலலிதா அவை தொடர்பான வழக்குகளில் இருந்து எப்படியோ தப்பி வருகிறார்.

அண்மையில் உச்சநீதிமன்றம் அவருக்கு எதிரான வழக்கொன்றில் இருந்து அவரை விடுதலை செய்துள்ளபோதும், தீர்ப்பு வழங்கிய நீதிபதி அவர் மீது கடுமையான வார்த்தைகளுடன் கூடிய கண்டனத்தையும் வெளியிடவே செய்துள்ளார்.

கௌரவமிக்க ஒரு பொறுப்பான பதவிக்கு தகுதியுள்ளவராக ஜெயலலிதா நடந்துள்ளதாகவும், சரியான ஆதாரமில்லாததால் அவர் வழக்கிலிருந்து விடுதலையாகி விட்டதாகவும் அவர் கூறியுள்ளமை தமிழக மக்கள் தமது தலைமைகளை தேர்வு செய்வதில் தவறுவிட்டுள்ளமையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சினிமா கலாச்சார மாயையில் இருந்து தமிழகம் எப்போது விடுதலை அடையும்?

## ரணிலைக் காப்பாற்றிய சந்திரிகாவின் சதி



சிறிலங்காவின அரசியலமைப்பு தனக்கு வழங்கியுள்ள அளவற்ற அதிகாரங்களுள் மிகக்குறைந்த அளவான அதிகாரங்களையே தான் பயன்படுத்தியுள்ளதாக சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருக்கிறாராம். அவர் கூறியதை வைத்துப் பார்க்கும்போது தான் இனிமேல்தான் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தப் போகிறேன் என முன்னெச்சரிக்கை செய்வது போலில்லையா?

சரி மீதியுள்ள பெருமளவிலான அதிகாரத்தை சந்திரிகா அம்மா எப்படிப் பயன் படுத்தப்போகிறாராம்?

ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணில் நாட்டில் இல்லாதவேளை சட்டரீதியான அரசியல் சதியொன்றை மேற்கொண்டு ஐ.தே.முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறிமுதல் செய்துகொண்டதன் மூலம், ரணில் தனது சமாதான முயற்சிகளில் எதிர்கொள்ளவிருந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இருந்து அவரை காப்பாற்றிவிட்டார்.

இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபினை புலிகள் கையளித்ததைத் தொடர்ந்து அது குறித்து சாதகமாகவா பாதகமாகவா முடிவெடுப்பது என்ற நெருக்கடியான நிலையில் ரணில் தவித்த வேளையில், சந்திரிகா தனது அதிகாரக்கணை மூலம் அவரை தப்ப வைத்துவிட்டார்.

இல்லையேல் ரணில் சிக்கல்களுக்குள்ளாகி, அவர் தொடங்கிய சமாதானத்தை அவரே போட்டுடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான திட்டவரைபு குறித்து புலிகளுடன் பேச நேர்ந்து, அதை ஏதாவது ஒருவகையில் நிறைவேற்ற நேரின் பேரினவாத பௌத்த மதவாத சக்திகளின் எதிர்ப்புகளை தாங்கமுடியாது போயிருக்கும். அந்த நிலையில் பண்டா - செல்வா உடன்பாட்டுக்கு நேர்ந்த அவலமே இந்த சமாதான நகர்வுகளுக்கும் ஏற்பட்டிருக்கும்.

அந்த திட்டவரைபை அவர் நிராகரிக்க நேர்ந்தால் புலிகள் சமாதான முயற்சிகளில் இருந்தும் மேலும் பின்வாங்க நேர்ந்திருக்கும். அப்படிப் பின்வாங்க அவர்களுக்கு நியாயமான காரணமும் இருந்திருக்கும்.

இது அதுவரை சமாதானம் பற்றிய பேச்சுக்கள் மூலமே எதிர்க்கட்சிகளை அடக்கிவைத்து தன் பதவிக்காலத்தை பாதுகாப்பாக சர்வதேச அனுசரணையுடன் நகர்த்தி வந்த ரணிலுக்கு ஒரு பெரும் அரசியல் தோல்வியாகவும் மாறியிருக்கும். இந்த நெருக்கடிகளுக்குள் சிக்கி ரணில் அவலமுறாது காத்த பெருமை சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கைக்கே சேரும்.

இப்போது ரணில் தனது அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டதைக் காரணம் காட்டி சமாதானப் பொதியை சுமக்கும் பொறுப்பை சந்திரிகாவின் தலையில் மிகவும் சாமர்த்தியமாக சுமத்திவிட்டு ஆறுதல் பெருமூச்சை விட்டுள்ளார். இது சந்திரிகாவின் புத்திசாதுரியமின்மையை தொலைநோக்குத் திறனற்ற அரசியல் ஞானத்தை புலப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அவர் தனது அதிகாரத்தை எந்தவகையில் பயன்படுத்தினாலும் அது அவர் தனக்கு தானே தலையில் மண்ணள்ளிப் போடுவதாகவே அமையும்

இதற்கெல்லாம் சந்திரிகாவின் ஆலோசகர்களின் - அதாவது கதிர்காமர் மற்றும் அநுரா ஆகியோரின் - பொருத்தமற்ற ஆலோசனைகளும் காரணமாக இருக்கும்.

## போருக்கான அரசியலும்; அரசியலுக்கான சமாதானமும்



வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து பிரதான கட்சிகளுக்கிடையில் இணக்கம் வேண்டும் என்று ரணில் கூறியுள்ளார். அது சரிதான்;

ஆனால் அந்த இணக்கம் எப்படி ஏற்படவேண்டும் என்று அவர் துலக்கமாக, சுற்றிவளைக்காது கூறவில்லையே !

புலிகளின் யோசனையை ஏற்றுக்கொள்வது குறித்தா? அல்லது நிராகரிப்பது தொடர்பாகவா?

முன்னது குறித்து என்றால் சமாதானம் சாத்தியம். பின்னது குறித்தென்றால் சமாதானம் பூச்சியம்.

ரணில் வலியுறுத்தும் சமாதானத்தை சந்திரிகா முழுமையாக ஒருபோதுமே ஏற்கப் போவது கிடையாது.

இதுவரை ரணில் மேற்கொண்ட சமாதான நகர்வுகள் மற்றும் உடன்படிக்கைகள் அனைத்துமே சட்டபூர்வமற்றவை எனவும் அதில் எதுவும் தனது அங்கீகாரத்தை பெறவில்லையென்றும், தான் நினைத்தால் அவையனைத்தையும் செல்லுபடியற்றதாக்கிவிட முடியும் என்றும் அச்சுறுத்தல் அறிக்கைகளை விடுத்துவரும் சந்திரிகா நிச்சயமாக விடுதலைப்புலிகள் முன்வைத்த திட்டவரைபிலிருந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கமாட்டார்.

அதற்கு அவரது கூட்டணிக்குள் ஒன்றிணைய முயலும் ஜே.வி.பி. உட்பட அனைத்துக் கட்சிகளும் சம்மதிக்கப் போவதுமில்லை.

அந்தக் கட்சிகளின் சம்மதமின்றி, அவற்றை எதிர்த்துக்கொண்டு, எதையும் செய்ய முடியாத நிலை சந்திரிகாவுக்கு...

தனது அதிகாரத்தை தக்கவைக்கவும், அடுத்த ஒரு தேர்தல் வந்தால் அதனை எதிர்கொள்ளவும், அந்த சமாதான விரோத சக்திகளின் ஆதரவு அவருக்கு மிக மிக அவசியம்.

ஆகவே சமாதானத்தை யுத்த வழியில் எட்டமுயன்ற சந்திரிகாவினால் சமாதானத்தை சமாதான வழியில் கிட்டவே முடியாது.

சமாதானத்தை எதிர்க்கும் சக்திகளினதும், மகாசங்கத்தினதும் எதிர்ப்பை சந்திக்கும் துணிச்சலும் சந்திரிகாவுக்கில்லை.

இது ரணிலுக்கும் நன்கு தெரியும்.

இதனால்தான் இணக்கப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தி அறிக்கை விடுகிறார். நிச்சயமாக ரணிலின் சமாதானத் திட்டங்களுடன் சந்திரிகா இணங்கிப்போகும் சாத்தியமேயில்லை.

இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல - யுத்தமூலம் தீர்வுகாணவும் முடியாது என வலியுறுத்தும் ரணிலாலும் நிலையான, நீதியான சமாதானத்தை ஏற்படுத்திவிடவும் முடியாது. அதற்கான வலிமையும், அதிகாரமும் அவருக்குமில்லை, அதனால்தான் சாத்தியமேயல்ல. பிரதான கட்சிகளுக்கு இடையேயான இருதரப்பு இணக்கம் பற்றி துணிந்து பேசியிருக்கிறார்.

போன பொ.ஐ.முன்னணி அரசு போரை முன்வைத்து அரசியலை நடத்தியது. இப்போதைய ஐ.தே.முன்னணி அரசு அரசியலை நடத்த சமாதானம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது.

அவ்வளவுதான் இருதரப்பினருக்கும் வித்தியாசம்.

**செங்குட்டுவன்**

விலை கொடுக்காமல் பெற இயலாத ஒரு பொருள், அனுபவம். - யாரோ



# யாரைத் திருப்திப்படுத்த வரவு – செலவுத்திட்டம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தற்போது அது தொடர்பான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொதுவாக ஐக்கியதேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத் திட்டம் பெரும் சாதனைகளை படைக்கப்போகும் ஒரு மாய திட்டம் ஒன்று என்பது போலவே அது தொடர்பான எதிர்பார்ப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

சனாதிபதி சந்திரிகாவினால் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுப்பொறுப்புக்களை கையகப்படுத்தி, நாடாளுமன்றத்தை ஒருவார காலத்திற்கு ஒத்திவைத்திருந்த நிலையில் வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் சொக்சியினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதை தடுப்பதும் ஒரு நோக்காக கொண்டிருந்தென தெரிவிக்கப்பட்டது.

இதைவிட இவ் வரவு செலவுத்திட்டம் தொடர்பாக பிரதி நிதி அமைச்சர் தற்போது சமர்ப்பிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் உள்ளடக்கங்களை விட அதிக மிகைப்படுத்தல்களோடு கருத்துக்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார்.


ஆனால் தற்போது இந்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பாக வெளிவரும் கருத்துக்கள் அவ்வளவு நல் அபிப்பிராயங்களைக்கொண்டதாகவே இல்லை.

காரணம் முதலீட்டாளர்களிற்கும், வர்த்தக சமூகங்களிற்குமே அதிக நன்மை பயக்கத்தக்கதாக இந்த வரவு செலவுத்திட்டம் உள்ளதென குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அதாவது ஐக்கிய தேசிய முன்னணி அரசை அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் நிதி நெருக்கடி எதுவுமின்றி நகர்த்திச்செல்லத்தக்கதாக தயாரிக்கப்பட்டுள்ள ஒரு வரவு - செலவுத்திட்டம் என்றே இதனை குறிப்பிடவேண்டும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, ஓய்வூதியர்களுக்கான சம்பள உயர்வு என்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் சாதாரண பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் எவையும் வெளிப்படவில்லை.

இதைவிட அரச ஊழியர்களையும், ஓய்வூதியர்களையும் கவனத்தில் கொண்ட அரசு, இலங்கைக்கு பெரும் வருவாயை ஈட்டித்தரும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு ஏற்ற சிறிதளவான சம்பள உயர்வு கூட அளிக்கப்படவில்லை.



ஆனால் பல ஆண்டு காலத்திற்கு முற்பட்ட சிறு லயன்கள் என்றழைக்கப்படும் கொட்டகைகளில் வாழும் பெரும் தொகையான மக்களுக்கென குறிப்பிட்ட தொகை வீடுகள் அமைப்பதற்கான முன்மொழிவை அரசு வைத்துவிட்டு நழுவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமர்ப்பிக்கும் வரவு - செலவுத்திட்டம் ஒரு முன்னேற்றகரமான வரவு-செலவுத்திட்டம் எனக்கொள்ள முடியாது.

இதனைவிட இத்தனை காலமும் தொடர்ந்து யுத்தத்தின் பெயரால் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்குரிய எந்த வழி வகையும் இல்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

யுத்தம் தணிந்து தற்போது சமாதானம் நிலவுகின்ற இந்த காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டம் மூலம் பொதுமக்கள்

**சிறி. இந்திரகுமார்**

தமது வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கு ஏதுவாக வரவு செலவுத்திட்டத்தில் வழி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில் வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு எந்த மார்க்கத்தையும் அரசு முன் வைக்கவில்லை

. அந்த வகையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இந்த வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு நன்மை பயக்காத ஒரு வரவு - செலவுத் திட்டம் என்றே கூறவேண்டும்.

ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்க முடியாத இந்த அரசு, பாதுகாப்புச் செலவீனத்திற்கான ஒதுக்கீட்டை எப்போதும் போலவே ஏறுவரிசையில் இருந்து இறங்குவரிசைக்கு மாறிவிடாமல் பாதுகாத்துக்கொண்டுள்ளது.

இந்த வகையில் அரசு இந்த சமாதான காலத்தில் மக்களின் வாழ்க்கை நிலைக்கு ஏதுவாக ஒரு வரவு - செலவுத்திட்டத்தை தயாரிப்பதில் கவனம் செலுத்தியது என்பதை விட படைத்தரப்பை திருப்திப்படுத்தும் வகையிலே வரவு-செலவுதிட்டத்தை தயாரிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது என்பதே உண்மை.

இவற்றைவிட இந்த வரவு செலவுதிட்டத்தை தயாரிப்பதற்கு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்த யுத்தத்தின் அழிவுகளையும் தமிழ் மக்களின் பொறுமைமிகு சமாதான நல்லெண்ணத்தையும் ஈடாகவைத்து திரட்டிக் கொண்ட நிதியின் பயனாகவே வரவு - செலவுத்திட்டத்தைத் தயாரித்துள்ளது.

இந்த வகையில் வடக்கு - கிழக்கு பிரதேசத்திற்கு எனஒதுக்கப்பட்டுள்ள எண்ணூறு கோடி என்பது ஒரு திருப்திகரமான ஒதுக்கீடு என கொள்ளமுடியாது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமர்ப்பித்திருக்கும் இந்த வரவு செலவுத்திட்டம் என்பது எல்லா காலங்களிலும் சமர்ப்பிக்கப்படும் ஒரு வரவு - செலவுத் திட்டம் போன்றே இதுவும் ஒன்றெனக்கொள்ளலாம்.

மற்றும் படி இந்த வரவு - செலவுத்திட்டத்திற்கான நிதி என்பது தமிழ் மக்களின் சமாதான பொறுமையின் பயனாக கிட்டியது. வசூள் என்பதைவிட வேறு எந்த வித்தியாசமும் இல்லை. ●

## ஓகோ! அப்படியா!



பலாங்கொடை நிகழ்வில் திலக்மாரப்பன

எம்மை 10 நாட்களுக்குள் அகற்றக் கோரிய முகாமை சனாதிபதி இன்னும் அகற்ற வில்லை.

### ஓகோ !அப்படியா!

செய்தியாளரிடம். மகிந்தராஜபக்ஷ.



இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கு மத்தியஸ்தம் வகிக்க இந்தியாவே சிறந்தது.

### ஓகோ !அப்படியா!



கண்டியில், சந்திரிகா.

இலங்கையின் பாதுகாப்பிற்கு பக்க பலமாக இந்தியா இருக்கிறது.

### ஓகோ !அப்படியா!

அலுத்கம கூட்டத்தில், ரட்ணசிறி விக்கிமநாயக்கா



நாங்கள் வீதியில் இறங்கினால் புலிகள் இ.த.அ. வரைபை மாற்ற வேண்டிவரும்.

### ஓகோ !அப்படியா!



மகிந்த சமர சிங்க தனியார் தொலைக் காட்சிப் பேட்டியில்

ஆட்சியை மாற்றுவது. இன்னொரு ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதெல்லாம் அரசியலில் புதிய விடயமல்ல. அதுதான் அரசியல்.

## மதவடி மயிலர்



**செய்தி :** *ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதற்கு சுதந்திரக் கட்சியின் குழு தீர்மானம். சில தினங்களில் ஒப்பந்தம் கைச்சாத்து.*

**மயிலர் :-** கெடுகுடி சொற்கேளாது பாருங்கோ...கெட்டுக் குட்டிச் சுவராய் போறதெண்டு நாண்டு கொண்டு நின்றால் யார்தான் என்ன செய்யமுடியும் பாருங்கோ... அநுராவின் ஆலோசனையால் அக்காதான் கஷ்டப்படப்போறா... தேர்தலின் பின்னர் தேறுதல் சொல்லப்போறதும் அருமையான ஆலோசகர்தான்... நான் சொல்லுறது விளங்குது தானே...!

**செய்தி :** *ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதைப் போன்றதே ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக்கட்சி யும் கூட்டுச்சேருவது என்கிறார் அநுரா பண்டாரநாயக்கா.*

**மயிலர் :-** அப்ப கலியாணம் நடக்கப் போகுது எண்டு அநுரா சொல்லுறார்போல கிடக்கு... அப்ப விவாகரத்து எப்ப எண்டும் யோசிக்கத் தோன்றுகிறதெல்லே.. வேண்டாப் பெண்டாட்டியும் விரும்பாப் புருஷனும் எத்தனை நாளைக்கு கூடிவாழமுடியுமாம்? இந்தக் கூட்டுச் சேர்விலை சமாதானக் குழந்தை பிறக்குமோ சண்டை பிறக்குமோ...? யாமறியோம் பராபரமே...

**செய்தி :** *மேற்குலகின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டிய நிலையில் சனாதிபதி இருக்கிறார்.*

**மயிலர் :-** பிக்குகளின் நம்பிக்கையை பெறவேண்டும்... பேரினவாதிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நம்பிக்கையைப் பெறவேண்டும்... மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்... இந்தியாவின் நம்பிக்கையைப் பெறவேண்டும்... அதோடை மேற்குலகின் நம்பிக்கையைப் பெறவேண்டும். அடேயப்பா... சந்திரிகாவுக்கு தன்னம்பிக்கை அதிகம் தான் பாருங்கோ. ஆனால் சமாதானத்தின் மீது தான் சந்தேகம் பாருங்கோ!

**செய்தி :** *ஆப்கானில் அமெரிக்க ஹெலி வீழ்ந்து நொருங்கியது: ஐந்து படையினர் பலி - ஏழுபேர் படுகாயம்...*

**மயிலர் :-** அமெரிக்க படையினரையும் ஹெலிகளையும் ஏழரைச்சனி கடுமையாய்ப் பிடிச்சிருக்கு போலை... பாவியார் போறஇடம் பள்ளமும் திட்டியும் எண்டது மாதிரியெல்லே அமெரிக்காவின்ர பாடு இருக்கு... ஈராக்கிலைதான் குழப்பம் என்றால் ஆப்கானிலுமெல்லே சிக்கல்... சதாமும் பின்லேடனும் தான் தலை மறைவெண்டால்... போறபோக்கைப் பார்த்தால் புஷ்சும் தலைமறைவார்போல கிடக்கு....!

**செய்தி :** *அரசின் வரவு செலவுத்திட்டத்தால் உலக வங்கி மற்றும் அமெரிக்காவுக்கே திருப்தி.*

**மயிலர் :-** ஆரைத் திருப்திப்படுத்த வேண்டுமோ அவையளத்திருப்திப்படுத்தியிருக்கினம் அவ்வளவுதான். கடன் வாங்கிறவன் கடன் தருபவனை திருப்திப் படுத்தாமல் என்ன செய்யமுடியும் பாருங்கோ... எடுக்கிறது பிச்சை உடுக்கிறது பட்டா இருக்கமுடியுமே...!

**செய்தி :** *தமிழ்மக்களை இந்த அரசு ஏமாற்றிவிட்டதால் 2004 ஆம் ஆண்டு சனவரியில் பதவிவிலகுவேன் என்கிறார் அமைச்சர் மகேஸ்வரன்...*

**மயிலர் :-** சனவரியில் பதவி விலகினால் தான் நல்லது என ஆரும் சாத்திரிமார் மகேஸ்வரனுக்கு சொன்னவையாமே! கெட்டது என்றால் வெட்டென மற... அதைவிட்டிட்டு தவணை போடுறதும் ஒரு தந்திரம் தான் பாருங்கோ... மகேஸ்வர தந்திரம் மற்றவையளுக்குத் தான் மந்திரம்... பொதுமக்களுக்கல்ல... பாருங்கோ...!

☞ அன்பான இதயமே, உண்மை மிக்க அறிவு. – சார்ல்ஸ் டிக்கன்ஸ்

நேர்நோக்கு

# சிங்கள தேசத்துக்கே அவமானம்

தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டுமல்ல தமிழ்மக்கள் வாழும் நாடுகளிலெல்லாம் எழுச்சியுடனும் உணர்வு பூர்வமாகவும் கடைப்பிடிக்கப்படும் ஒரு முக்கிய நாள் மாவீரர் நாளாகும். எமது தேசத்தின் சிற்பிகளாக பலரால் நினைத்தும் பார்க்க முடியாத ஈகத்தின் சிகரங்களாக, விளங்கும் தமது இரத்த உறவுகளை நினைவுகூரும் நாளாக இந்த நாள் விளங்குவதால் அதற்கு ஒரு தனிச் சிறப்பு தமிழீழமக்கள் மத்தியிலே உள்ளது.

இந்த நாளையும் சரி இதனோடு ஒட்டிய எழுச்சி நாட்களையும் சரி தமிழீழ மக்கள் புனிதமான நாட்களாகவே கடைப்பிடித்து வருகின்றனர். அத்துடன் மாவீரர் தொடர்பான அனைத்துமே தமிழ்மக்களைப் பொறுத்தவரை புனிதமானவையே.

அவ்வாறு தமிழ் மக்கள் புனிதமானவையாகக்கருதும் புனிதச் சின்னங்களை உலக அறத்திற்கு மாறாக அழிக்கும் நடவடிக்கையில் சிறிலங்கா படைகள் ஈடுபட்டுவருகின்றமை சிறிலங்கா படையினருக்கு மட்டுமல்ல, அந்தப் படையால் பாதுகாக்கப்படும் சிறிலங்கா என்ற நாட்டுக்கும் சிறிலங்கா மக்களுக்குமே அகௌரவம் இழைக்கும் விடயமாகும்.

ஆனால் சிறிலங்காவின் அதிகாரவர்க்கம் என்றுமே சிறிலங்காவிற்கு அபகீர்த்தி உண்டாக்கும் விடயங்களையே மேற்கொண்டுவருகின்றமை புதியதொரு விடயமல்லத்தான். தமிழீழ விடுதலைக்காகத் தன்னுயிரீந்த பொன். சிவகுமாரனுக்கு வைக்கப்பட்ட சிலையை பலதடவைகள் இழுத்து வீழ்த்தியிருக்கின்றன சிறிலங்காப படைகள். 4வது உலகத்த மழாராச்சி மாநாட்டின் போது சிறிலங்கா படையினரின் அடாவடியால் உயிர் நீத்த 10 தியாகிகளின் நினைவுத் தூண்களை அப்படைகள் பெயர்த்திருக்கின்றன. ஏன்? தமிழறிஞர்களுக்கு மட்டுமல்ல மகாத்மா காந்திக்கும் யாழ் நகரில் வைத்த சிலைகளின் தலைகளை திருகி உடைத்திருக்கின்றன இப்படைகள்.

எனவே தமிழ் மக்கள் மதிப்பளித்து நிறுவிய நினைவுச் சின்னங்கள், சிலைகள் என்பனவெல்லாம் இவ்வாறு சிங்களப் படைகளால் அழிக்கப்பட்டதே வரலாறு. இவை எல்லாவற்றுக்கும் உச்சமாக, மாவீரர்களின் கல்லறைகளை உழுதுபாழடித்த கறைபடிந்த வரலாறும் சிறிலங்காப் படைகளுக்கு உண்டு. இவை எல்லாம் சிங்களப்படைகளின் ஆற்றாமையின் வெளிப்பாடே என்பதில் எதுவித சந்தேகமுமில்லை



இதேவேளை, இந்த நடவடிக்கைகளுக்கு சிங்கள அதிகாரவர்க்கத்தின் அனுமதியும் ஆசியும் உண்டு என்பதிலும் எதுவித சந்தேகமும் இல்லை.

அத்துடன் இப்பொழுது மாவீரர்கள் தொடர்பாகவும் மாவீரர் நாள் எழுச்சிநிகழ்வுகள் தொடர்பாகவும்படையினர் நடந்து கொள்வதில் இன்னொரு விடயமும் உண்டு. அதாவது இதனை விரக்தியின் வெளிப்பாடு என்றும் கூடக் கூறலாம்.

இன்று தமிழீழ மக்கள் மட்டுமல்ல உலகமெங்கும் வாழும் தமிழுணர்வாளர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்பாலும் அதற்குத் தலைமை தாங்குகின்ற தமிழீழ விடுதலைப்புலிகள் பாலும் வைத்திருக்கின்ற பற்றும்,பாசமும், நம்பிக்கையும் சிறிலங்காவிலுள்ள ஆட்சியாளர்கள், இனவாதிகள், படையினர் மத்தியில் பெரும் பொறாமையைத் தூண்டி விட்டிருக்கின்றது. புலிகளின் நன்மதிப்பு உலகளாவிய ரீதியில் வளர்ந்துவரும் போக்கில் செல்வதும் இவர்கள் மத்தியில் பெரும் கிலேசத்தை - அச்சவுணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

சிறிலங்காவின் ஆளும் வர்க்கமும் அதிகாரப்போட்டியால் பிளவுண்டு நாடே இயக்கமற்று - செயலற்று இருக்கையில் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து ஒரே தலைமைத்துவத்தின் கீழ் நிற்பது இவர்களுக்குச் சகிக்க முடியாதிருக்கிறது.

இதற்கும் கூட சிறிலங்காவின் அதிகாரவர்க்கம், ஒருவர் மீது ஒருவர் குறை கூறுவதில் ஈடுபட்டிருக்கிறதே தவிர, இதில் உள்ள அடிப்படையை - அதாவது தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத்தன்மையை உருவாக்குவதில் இவர்கள் எவ்வளவு பங்களித்துள்ளார்கள் என்பதைப் புரிந்துகொள்ள மறுத்துவருகின்றது.

இது ஒரு புறமிருக்க விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் போரிட்டு வந்த படைத் தரப்பு தமக்கு பதவி உயர்வுக்கும் சேவைநீடிப்புக்கும் கூட கட்சிப் போட்டிக்குள் சிக்கித்தவித்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை. இந்நிலையில் இப்போரில் உயிரிழந்த படையினர்குறித்தோ அங்கவீனமுற்றோர்குறித்தோ கவலைப்பட எவருமில்லை. எனவே அவர்களின் உயிருக்கும் சிந்திய இரத்தத்திற்கும் நாட்டில் மதிப்பளிப்போர் எவருமில்லை என இவர்களின் நலன்களைக் கவனிக்கும் படை அதிகாரி ஒருவர் அண்மையில் கவலை தெரிவித்திருந்தார்.

ஆனால் மறுதரப்பிலோ, விடுதலைப்புலிகளுக்கு மக்கள் கொடுக்கும்மதிப்பு, மாவீரர்களை மக்கள் போற்றும் பாங்கு இவற்றைப் பார்க்கும்போது படையினரின் மனோநிலை பெரும் தாக்கத்துக்கு உள்ளாகின்றது. இவற்றின் விளைவையே கடந்த வாரத்தில் மிகவும் செறிவாக யாழ்.குடாநாட்டில் பார்க்க முடிந்தது.

இவற்றைத் தணிக்க ஆட்சியாளர்களும் எதுவிதத்திலும் முயலவில்லை. ஏனென்றால் அவர்களுக்கும் அதனை சரியான வழியில் திருப்ப விருப்பமில்லை. தமக்கில்லாத மரியாதை படையினருக்குக் கிடைத்துவிட அவர்கள் ஒரு போதுமே விரும்பமாட்டார்கள். ஏனெனில் ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டியிடக்கூடிய மற்றொரு தரப்பாக படைத் தரப்பை மாற்ற அவர்கள் விரும்பமாட்டார்கள்.

அத்துடன் மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் சரியான நடத்தையின் மூலமே உருவாக்கப்படவும் முடியும். ஆனால் மதிப்பும் மரியாதையும் உருவாக்க படையினர் கடைப்பிடிக்கும் வழி என்றுமே உதவப் போவதில்லை என்பதை யாழ் குடாநாட்டில் உளவியல் யுத்தம் புரிய முயலும் படை அதிகாரிகள் இதுவரை விளங்கிக்கொள்ளாமையே படையினரின் முக்கிய தோல்வியாகும். அத்துடன் என்னதான் கற்றுத்தேர்ந்து வந்தாலும் அடிமன ஆழத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான குரோத உணர்வைக்கொண்டுள்ள இவர்களால் பெரிதாக எதனையும் சாதித்துவிடவும் முடியாது.

இவர்கள் தமிழ்மக்களின் மனங்களை வெல்ல முடியாவிட்டாலும் சிங்கள தேசத்தினதும் மக்களினதும் மானத்தை யாவது போக்காதிருந்தால் அதுவே சிறந்ததாக இருக்கும்.

வேலவன்

# சமாதானத்தை விரும்பாத சக்திகள்


ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிரிஸ் பட்டனின் இலங்கை விஜயத்தையடுத்து தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பு தொடர்பாக தென்னிலங்கை இனவாதிகள் மத்தியிலிருந்து பெரும் எதிர்ப்புகள் கிளப்பிவிடப்பட்டிருந்தன.

கிரிஸ் பட்டன் தலைவர் பிரபாகரன் சந்திப்பு தொடர்பாக தென்னிலங்கை இனவாத சக்திகளுக்கு அப்பால் பிராந்திய வல்லரசும் கூட விரும்பவில்லை எனவும் தகவல்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் வடகிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பான நியாயப்பாடுகள் சர்வதேச சமூகத்தின் உயர் பீடங்களின் செவிகளை எட்டுவதை இந்த சக்திகள் விரும்பவில்லை என்பதையே இச்செயல்கள் உணர்த்துகின்றன.

இவ்வாறு தான் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கொபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்தமையும் அவர் வன்னிக்கு விஜயம் செய்து, தலைவர் பிரபாகரனை சந்தித்து விடக்கூடும் எனவும் தென்னிலங்கை இனவாத சக்திகள் மட்டுமன்றி ஐக்கிய தேசிய முன்னணி அரசு கூட விரும்பவில்லை என செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தன.

இவையெல்லாம் சர்வதேச சமூகத்தின் உதவியோடு தமிழ் மக்களை ஏதாவது ஒரு வகையில் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நிலை, அல்லது யுத்தமற்ற சூழ்நிலை ஒன்றே தேவை மற்றும்படி தமிழ் மக்களிற்கு சர்வதேச சமூகத்தின் உயர்பீடங்களுடனான இராஜீக தொடர்புகள் ஏற்படுவது தமிழ் மக்களுக்கான அங்கீகாரத்தை வழங்கிவிடும் என அஞ்சுவதன் விளைவே இவர்களின் இத்தகைய கூக்குரல்கள்.



ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினையையும், தமிழ் மக்களின் தலைமையையும் இலங்கையின் உக்கிர போரின் காரணமாக பொருளாதாரம் அதல பாதாளத்தை அடைந்தபோது நாடுகள் தோறும் இலங்கை பிச்சைப் பாத்திரங்களை ஏந்த தொடங்கியபோதே இந்த சர்வதேச இராஜீக தொடர்புகள் ஏற்பட்டுவிட்டதை தென்னிலங்கை சமூகத்தின் வரட்சி மண்டைகளுக்கு புரியவில்லைப்போலும்.

அத்தோடு கிரிஸ் பட்டன் போன்ற உயர் தலைவர்களின் விஜயங்களும் தமிழ் மக்களுடன் அவர்கள் ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் தொடர்புகளும் தமிழ் மக்கள் உயர்வாக வெளிபபடுத்திய பலத்தினாலும் சமாதானத்தின் மீதுகாட்டிய அக்கறையினாலுமேயாகும்.

இந்த வகையில் இனவாதிகளின் கூச்சல்களுக்கு மத்தியிலும் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுடனும், தமிழ் மக்களின் தலைமையுடனும் ஏற்படுத்திக்கொள்ளுகின்ற தொடர்புகள் தமிழ் மக்கள் பெற்ற அரசியல் ரீதியிலான வெற்றி என்றே கூற வேண்டும்.

ஆகவே கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் எழும் எதிர்ப்பினை புறந்தள்ளுவதன் மூலம் அவர்களுக்கு சர்வதேச சமூகம் மதிப்பளிக்க. தயாரில்லை என்பதை வெளிப்படுத்துவதை புரிந்துகொள்ளலாம்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் தலைமை சமாதானத்தின் மீதான தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் வரை சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளின் விஜயங்களும் நடைபெற்றுக்கொண்டே இருக்கப்போகின்ற நிலையில் இத்தகைய சமாதான விரோதிகளின் கூக்குரல்களும் கேட்டபடியே இருக்கும்.

இந்தக் கூக்குரல்களுக்கு பொதுவாக சர்வதேச சமூகம் மதிப்பளிக்காது விட்டாலும் கூட இலங்கையில் நிலவும் தமிழ் மக்களுக்கான இத்தகைய சக்திகளின் காழ்ப்புணர்ச்சியை இவர்களால் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதன் மூலம் நிரந்தரமான ஒரு தீர்வை தமிழ்மக்கள் எட்டுவதற்கு அத்தகைய எதிர்ப்புக்களையெல்லாம் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

இந்த நிலையில் கிரிஸ் பட்டன் மட்டுமன்றி சர்வதேசத்தின் உயர் தலைவர்கள் வன்னிக்கு விஜயம் செய்வதையோ தமிழ்த்தலைமையினை சந்திப்பதையோ விரும்பவில்லை என்றால் அது இலங்கையில் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு எதுவும், நியாயங்கள் எவையும் எட்டிவிடக்கூடாது என்பதன் வெளிப்பாடுகள் தான். இது பிராந்திய வல்லரசாக இருந்தால் கூட பொருந்தும்.

அண்மைக்காலமாக சமாதானம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் பிரச்சினையோடு சம்மந்தப்பட்ட விவகாரங்களாக இருந்தாலும் சரிதான். பிராந்திய வல்லரசு அவ்வளவு ஆரோக்கிய முறையில் செயற்படுவதாக தகவல்கள் வெளியாகவில்லை.

அந்த நிலையில் நீண்ட கொடிய யுத்தத்திற்கு முகம்கொடுத்து தற்போது ஒரு அரசியல் ரீதியாக தீர்வுக்கு முயன்றுகொண்டிருக்கும் ஒரு இனத்தின் விடிவுக்கு தடையை ஏற்படுத்துவதோ அல்லது தடையாக இருப்பதோ உலக ஒப்பந்தத்திற்கு ஒத்திசைவான செயலாக இருக்கப்போவதில்லை.

இத்தகைய நடவடிக்கை வெகு விரைவிலேயே தனது இலக்கை எட்டாமல் தோல்வியைத் தரும் நிலையையே ஏற்படுத்தும்.

இதுவே வரலாற்றின் ஓட்டத்தில் உலகில் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்களாகவுள்ளன.

சீலன்

**மாங்குளம் இராணுவ முகாம் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் உருவச் சிலையினை திரைநீக்கம் செய்து வைத்து, 23.11.2003 அன்று மாங்குளத்தில் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் ஆற்றிய உரையின். தொகுப்பை இங்கு தருகிறோம்.**

# எதிரிக்கு மிகவும் சாதகமான இடத்தில் மாங்குளம் இராணுவமுகாம் இருந்தது

## கேணல் பால்ராஜ்



இன்றைய நாள் மிகவும் முக்கியமான நாள் - இந்த நாளை நாம் பல நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். வன்னியின் மையப் பகுதியில் எமக்கு சவாலாக அமைந்திருந்த மாங்குளம் இராணுவமுகாமை 1989ம் ஆண்டு இந்தப் பெரும் படை முகாமை சுற்றி நான்கு பகுதிகளிலும் எமது படைப்பிரிவுகள் வேலி போட்டன. அதிலிருந்து தொடர்ச்சியாக 1990ம் ஆண்டு வரை எதிரியுடன் போர் நடந்துகொண்டே இருந்தது.

எமது போராளிகள் தொடர்ந்து இந்த இராணுவ முகாமை சுற்றி அவர்களுக்கு உதவி கிடைக்காத வகையில் முற்றுகையிட்டிருந்த காலம். அவ்வேளை கடுமையான ஒரு தாக்குதல் தொடுக்கப்பட்டது. அதில் எதிரிக்கும் இழப்பு, எமக்கும் இழப்பு ஏற்பட்டது. அத்துடன் நாம் சற்று பின்வாங்கி மீண்டும் இந்த வேலியைப் பலப்படுத்திக்கொண்டோம். அதனடிப்படையில் 1990 ஆம் ஆண்டு இந்த பெருந்தளத்தை முற்றுகையிட வேண்டும், இதை இதில் விடக்கூடாது. இதனால் எமது மக்கள் நடமாட முடியாது. இதனால் இந்தத் தளத்தை அழிக்க வேண்டும் என எமக்கு தலைவர் அவர்கள் உடனடியாக வேவுப்பணிகளை வேகப்படுத்தி இந்த முகாமை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கட்டளையிட்டிருந்தார். அதற்கமைவாக இங்கே மாங் குளத்தைச் சுற்றி எமது படையணிகள் நடவடிக்கையில் இறங்கின. குறிப்பிட்ட காலத்தில் நாலு பக்கமும் வேவு நடவடிக்கைகளில் இறங்கிய எமது அணிகள் வேவை பூர்த்தி செய்தன.

அதனடிப்படையில் தலைவர் அவர்கள் இந்த இராணுவ நடவடிக்கையினுடைய வேவுத் தரவுகளை பார்த்துவிட்டு, இந்த முகாமை முற்று முழுதாக அழிக்க வேண்டும் என முடிவெடுத்தார். அதனடிப்படையில் என்னையும் தளபதி சொர்ணம் அவர்களையும் இந்த தாக்குதலை மேற்கொண்டு முகாமை முற்று முழுதாக அழிக்கும் திட்டத்திற்காக நியமித்தார்.

இந்த முகாமை அழிப்பதற்காக தலைவர் தீர்க்கமான திட்டத்தை வகுத்திருந்தார். 1990ம் ஆண்டு பெரிய இராணுவ முகாமை அழிப்பதற்கு திட்டமிட்டிருந்தோம். இதில் இராணுவத் தளபதி தவலகலவினுடைய தலைமையில் 500க்கு மேற்பட்ட படையினர் நிலைகொண்டிருந்தனர். பரந்து விரிந்த பெரும் நிலப் பரப்பை ஆக்கிரமித்து இறுக்கமான படை நிலைகளையும் கண்ணி வெடி வயல்களையும் முள்வேலிகளையும் மிகவும் பலமாக அமைத்திருந்தனர். முழுமையாக சொல்வதானால் மாங்குளம் படைமுகாமை சுற்றி ஒரு பெரும் வெட்ட வெளிப் பிரதேசம்.

இந்த சாதக நிலையை பயன்படுத்தி அவர்கள் எம்மீது சினைப்பர் மற்றும் நீண்ட தூர ஆயுதங்களால் எம்மை தாக்கிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் எமது திட்டத்தின்படி இங்கே எமது தயாரிப்பான பசீலன்- 2000. இந்த ஆட்லறிப் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்ட ஒரு வித்தியாசமான முதலாவது சண்டை. எம்மிடம் பதின்மூன்று ஆட்லறிகளை தலைவர் தந்துவிட்டு சொன்னார், இந்த ஆட்லறிகளை வைத்து இப் படை முகாமை நீங்கள் தகர்த்து கைப்பற்றவேண்டும் என்றார்.

இந்த அடிப்படையில் திட்டத்தின் படி மகளிர் படைப்பிரிவையும் ஆண் போராளிகளையும் நாங்கள் இணைத்து தீர்க்கமான பயிற்சிகளை வழங்கினோம்.

தலைவரின் திட்டப்படி முல்லைத்தீவுப் பக்கமாக மூன்று ஆட்லறிகளை நிறுத்தினோம். முல்லைத்தீவு வீதிக்கும் கிளிநொச்சி வீதிக்கும் இடையில் இரண்டு ஆட்லறிகளை நிறுத்தினோம். மாங்குளச்சந்தியில் நான்கு ஆட்லறிகளை நிறுத்தினோம். றெயில்வே ரக்பக்கமாக இரண்டு ஆட்லறிகளை நிறுத்தினோம். இத்தனை ஆட்லறிகளுடன் சேர்த்து வவுனியா பக்கமாக மேலும் மூன்று ஆட்லறிகளை நிறுத்தினோம். மொத்தமாக பதின்மூன்று ஆட்லறிகள் இந்த முகாமைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன.

தலைவரின் திட்டப்படி நான்கு ஆட்லறிகளை பிரதான முகாமுக்கு வைக்குமாறு கூறினார். அப்போது எனக்கொரு யோசனை எதற்காக நான்கு ஆட்லறிகள் பிரதான முகாம் நோக்கி நிறுத்துமாறு கூறுகின்றார் என்று. அப்போது தலைவர் சொன்னார் படை முகாமின் கட்டளைத் தளபதி கொமாண்ட் குடுக்கக்கூடாது. அதுக்கமைவாக நீங்கள் இந்த நான்கு ஆட்லறிகளையும் வைத்து கட்டளை மையத்தின் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தவேண்டும். அப்போது அங்கு ஒரு நிலை குலைவு ஏற்படும். அந்த இடை வெளிக்குள் நீங்கள் தாக்குதல் அணிகளை உள்ளுக்குள் அனுப்பவேண்டும்.

முல்லைத்தீவுப் பக்கமாக இரண்டு அணிகள், முல்லைத்தீவு வீதிக்கும் மாங்குளம் வீதிக்கும் இடையால் இரண்டு பக்கத்தால் அணிகள், கத்தோலிக்க மடத்தை நோக்கி இரண்டு அணிகள். கோயில் அரணை நோக்கி இரண்டு அணிகள் முல்லைத்தீவு வீதிப் பக்கமாக இடது பக்கமும், வலது பக்கமும இரண்டு அணிகள். றெயில்வே ரக்குக்கும் பிரதான வீதிக்கும் இடையாக ஒரு அணி றெயில்வே ரக் பக்கமாக இரு அணிகள், வவுனியா பக்கமூடாக மூன்றணிகள் என மொத்தமாக மூன்று படைப்பிரிவுகள் இந்த இராணுவ முகாமைச்சுற்றி முற்றுகை இடுவதற்கு ஆயத்தமாக நிறுத்தப் பட்டிருந்தன.

22ம் திகதி இரவு 7.00 மணிக்கு தலைவர் அவர்களின் திட்டத்தின் படி மாங்குளம் இராணுவ முகாம் மீது பசீலன் -2000 ஆட்லறித்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக பதின்மூன்று ஆட்லறிகளும் முகாம் மீது செல்களை ஏவிக்கொண்டிருந் தன. எதிரியும் தொடர்ச்சியாக எம் மீது தாக்குதலை நடத்திக்கொண்டே இருந்தான்.

நேரம் சரியாக 11.30 மணி இராணுவ முகாம் முற்றாக நெருப்புப் போன்று காட்சியளித்துக் கொண்டிருந்தது. எதிரி அடிக்கும் செல், ரவுன்ஸ் நாங்கள் அடிக்கும் செல் இத்தனையும் சேர்ந்து பெரும் நெருப்பாக தோற்றமளித்தது.

இவ்வேளை எங்களது படைப்பிரிவுகள் இராணுவ முகாமுக்குள் நுழைய ஆரம்பித்தன. அப் பெரும் சண்டை தொடங்கியது. பல முட்கம்பி வேலிகளை தாண்ட வேண்டியிருந்தது. கண்ணி வெடி வேலிகளைத் தாண்ட வேண்டியிருந்தது. எதிரியின் இறுக்கமான காவலரண்களைத் தாண்ட வேண்டியிருந்தது.

நேரம் சரியாக மூன்று மணி. இவ்வாறாக இறுக்கமான இராணுவ நிலைகளைத் தாண்டி கத்தோலிக்க மடஅரண் பிடிபட்டது. கோயில் அரண் பிடிபட்டது. அடுத்தது பிரதான வீதி முல்லைத்தீவு வீதி அரண் பிடிபட்டது. அதேபோல வவுனியா பக்கமாக தளபதி சொர்ணம் தாக்குதலை வழிநடத்திக் கொண்டிருந்தார். அந்தப் பக்கமாக இறங்கிய மூன்று அணி களும் தற்போது பொலிஸ் நிலையம் அமைந்திருக்கின்ற இடத்தில் இருந்த அரணைக் கைப்பற்றிவிட்டார்கள்.

இத்தனை அரணையும் கைப்பற்றியதுடன் நாங்கள் எமது ஆட்லறித் தாக்குதல்களை நிறுத்தி விட்டோம். ஆட்லறி சண்டையை நிறுத்திவிட்டு கைகலப்புத் தொடங்கியது. விடிய விடிய தொடர்ச்சியாக சண்டை மிகவும் இறுக்கமாக நடந்தது, இவ்வாறு தொடர்ந்த சண்டை விடிந்தும் நடந்தது.

விடிய எம்மால் விநியோகம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் வவுனியாப் பக்கமாக நாம் கைப்பற்றிய அரணை சற்று பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. காப்பரணிலிருந்து பின்வாங்கினோம். தற்காலிகமாக இரண்டு அணிகளை பின்வாங்கினோம். எமது மற்றய அணிகளை வைத்து நாங்கள் அடிபட்டு சண்டையை தொடர்ந்தோம். அந்தச் சண்டையில் கோயில் அரணை நாங்கள் முழுமையாக பிடித்து விட்டோம்.

இப்போது கெலி இறங்கு தளத்திற்கான சண்டை நடக்கிறது. அவனுக்கு கெலிதான் உயிர்நாடியாக இருந்தது. கெலியை விட்டால் தரை வழியாக அவனுக்கு உணவில்லை. மருத்துவ உதவி ஆயுத உதவி ஆளணி உதவி எதுவுமே தரைவழியாக எதிரி பெறமுடியாது. அவனுக்கு எல்லாமே கெலிதான். இந்த வகையில் நாம் கெலி இறங்கு தளத்துடன் மிகவும் மூர்க்கமாக மோதிக்கொண்டிருந்தோம்.

அப்போது விடிந்துவிட்டது. எதிரிக்கு உதவியாக அனைத்து திசைகளிலும் இருந்து விமானங்கள் வந்து எம்மீது தாக்குதலை தொடுத்தன. இந்நிலையில் எங்களது போராளிகளுக்கு விநியோகம் வழங்க முடியாத நிலை. வீரச்சாவடைந்த, காயமடைந்த எங்கள் வீரர்களை களமுனையில் இருந்து பின்னுக்கு எடுக்கமுடியாத நிலை. இச்சூழலில் மிகவும் இறுக்கமான சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்நிலையில் நேரம் 12மணியை அண்மிக்கின்றது. முகாமிற்குள் இருக்கின்ற ராணுவத்திற்கு உதவியாக இறக்குவதற்கு பதினைந்து கெலிகளில் இராணுவ கொமாண்டோக்களை கெலி இறங்கு தளத்தில் இறக்கு வதற்காக மேலே சுற்றிக்கொண்டே இருக்கின்றது. இந்த வேளையில் கெலி இறங்கு தளத்தை பிடித்தால் தான் கொமாண்டோசை இங்கே இறக்க முடியும்.

இந்தக் கட்டத்தில்தான் எமக்கிடையில் வாழ்வா சாவா என்கின்ற நிலையில் உக்கிரமான சண்டை வெடித்தது. சரியாக ஒரு மணி இருக்கும். கெலி இறங்குதளத்தை பிடிப்பதற்காக எமது முழுப்பலத்தையும் பயன்படுத்தி எமது அணிகள் அனைத்தையும் பயன்படுத்தி மிகவும் இறுக்கமான தாக்குதலை வாழ்வா? சாவா? அவர்களா? நாங்களா? என்கின்ற நிலையில் மிகவும் ஆவேச மான சண்டையை ஆரம்பித்தோம்.

பகல் ஒரு மணி எமது போராளிகளுக்கு உணவு கொடுக்கவில்லை. தண்ணீர் கொடுக்கவில்லை. முதல் நாள் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. காயக்காரரை என்ன செய்வது, வீரச்சாவடைந்தவர்களை என்ன செய்வது என்று களத்தில் நின்று கொண்டு கேட்டார்கள். அப்போது நாங்கள் குறிப்பிட் டோம், எதிரியிடம் கைப்பற்றிய பங்கருக்குள்ள வைத்துவிட்டு நீங்கள் அடியுங்கள். இதில நாங்கள் விட்டோமானால் நிலமை தலைகரணமாக மாறும். அதனால் நீங்கள் அடிபடுங்கள் என கட்டளை இட்டோம்.

இந்தப்போரில் இந்தக் கட்டமே மிகவும் இறுக்கமான கட்டம். ஒரு தளம்பல் நிலை. இதில் நாங்கள் கெலி இறங்கு தளத்தை விடுவோமாக இருந்தால் உடனடியாக கொமாண்டோஸ் இறக்கப்பட்டிருக்கும், இருநூறுக்கும் மேற்பட்ட கொமாண்டோக்கள் இறக்கப்பட்டிருக்கலாம். அன்று நிலமை சிலவேளை தலை கீழாக மாறியிருக்கலாம்.

சண்டை ஆரம்பமாகியிருந்தது. முதல் பன்னிரெண்டு மணிவரை நாற்பதுக்கு மேற்பட்ட போர் வீரர்கள் வீரச்சாவடைந்திருந்தனர். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர். இந்த நிலையிலும் சண்டை மிகவும் இறுக்கமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த கட்டத்தில் என்ன நடக்கும் என்று எங்களுக்கு தலைவர் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தார். அப்போது எங்களுக்குத் தலைவர் குறிப்பிட்ட அந்த விடயங்கள் தான் ஞாபகத்துக்கு வந்தது.

சரி, தலைவர் இப்படிச் சொன்னவர், இவ்வளவெல்லாம் நடந்திருக்குது, என்னும் இருக்கு, சரிஅவர் கூறியதின்படி நாங்கள் தொடர்ந்து சண்டை பிடிக்கலாம். தலைவர் சொன்னார் கண்டிப்பாய் அந்தக் கட்டத்தில் நீங்கள் யோசிக்க வேண்டாம். நாங்களா அவர்களா வாழ்வா சாவா எண்டு கண்டிப்பா நீங்கள் அவங்கட பக்கம் தோல்வியை ஏற்படுத்தவேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)



# அறிவியல் உலகில் உலாவரும் புத்தகத் திருடர்கள்

அன்பரசு

வாழ்நாளில ஒரு முறையாவது புத்தகம் திருடாதவர்கள் இருந்தால் கையை உயர்த்துங்கள் என்றார் பல்கலைக் கழகத்தில் வகுப்பு நடத்தும் பேராசிரியர். ஒருவருமே கையுயர்த்தவில்லை. நானும் கையை உயர்த்தவில்லைப் பார்த்தீர்களா என்று சிரித்துக்கொண்டே அவர் கூறினார். புத்தகத் திருட்டு என்பது பரவலாக நடக்கும் செயற்பாடு. இதற்கான காரணங்கள் தான் வேறுபடுகின்றன. புத்தகம் வாங்கப் பணமில்லை என்பதற்காகவும், இருந்தாலும் திருட்டு மூலம் இலவசமாகக் கிடைக்கிறதே என்ற காரணத்திற்காகவும் பெரும்பாலானோர் திருட்டில் இறங்குகின்றனர். இதைவிடப் புத்தகங்களை திருடும் மனநோயாளர்கள் இருப்பதாகவும் உள வியல் நிபுணர்கள் கருதுகின்றனர். விற்றுப்பணமாக்குவதற்காக, அதாவது வர்த்தக நோக்கில் புத்தகம் திருடுவோரும் உளர். அது பற்றிப்பிறிதோர் இடத்தில் பார்ப்போம்.

உளவியல் நோய் காரணமாகப் புத்தம் திருடுவோரைப் பீடித்துள்ள நோயை 'பிபிளியோமேனியா' (BIBLIO-MANIA) என்று வகைப்படுத்துகிறார்கள். கிரேக்க மொழியில் பிபிளியா என்றால் புத்தகம் என்று பொருள். பைபிள் என்ற வேதநூல் கூட புத்தகம் என்ற அர்த்தத்தில் இப்பெயரைப் பெற்றுள்ளது. பிபிளியா என்ற கிரேக்க வேர்ச் சொல்லில் இருந்து பல ஆங்கில மொழிச் சொற்கள்பிறந்துள்ளன. புத்தகங்களின தோற்றம், அச்சேறிய விபரம், எழுதியோர் யார், எத்தனை பதிப்பைக் கண்டுள்ளது போன்ற விடயங்கள் அடங்கிய கற்கை பிபிளியோகிராபி (BIBLIOGRAPHY) எனப்படும்.இது சம்பந்தமான பல பிபிளியோகிராபி நூல்கள் பிரசுரமாகின்றன. 'புக்' (BOOK) என்ற ஆங்கிலச் சொல்லும் பிபிளியாவிலிருந்து பிறந்தது.



புத்தகங்களை இறைவனின் வடிவமாக உருவமித்து வணங்குவோர் உளர். பன்னிரு திருமுறைகளை வணங்கும் சைவசித்தாந்திகளும், ஆழ்வார்களின் பாசுரங்களை வணங்கும் வைஷ்ணவர்களும் இன்றும் வாழ்கின்றனர். கம்பராமாயாணத்தில் சுந்தரகாண்டத்தை பூஜை அறையில் வைத்துப்பூசிக்கும் ராம பக்தர்களும் உளர். புத்தகங்களை தெய்வமாகக்கருதி விக்கிரகத்துக்குச் செய்ய வேண்டிய பூசை புனஸ்காரங்கள், ஆராதனைகளைச் செய்வோரை 'பிபிளியோலேற்றர்கள்' (BIBLIOLATERS) என்று அழைக்கிறார்கள். இஸ்லாமிய வேத நூலான அல்குரானுக்கும் இதேவகை வணக்கம் செலுத்தப்படுகின்றது. சீக்கிய மதத்தினர் கிரந்த சகிப் என்ற மத நூலை வணங்குகின்றனர்.

புத்தகங்கள் மீது மிதமிஞ்சிய காதல் கொண்டு அவற்றை தன்வயமாக்க வேண்டும் என்ற பேரவாவில் திருட்டு உட்படப் பற்பல குற்றச்செயல்களைச் செய்யத்தூண்டும் உளநோய்க்கு பிபிளியோமேனியா என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளதை இதன் மேற்பகுதியில் பார்த்தோம்.இத்தலைச்சொல்லின் முதல் பாதி புத்தகத்தையும் இரண்டாம் பாதி பைத்தியம் என்பதையும் குறிப்புணர்த்துகின்றன. மேனியா என்றால் பைத்தியம் என்றும் மெனியாக் (MANIAC) என்றால் பைத்தியக்காரன் என்றும் பொருள் கொள்க. மேற்கின் இலக்கியத்தில் பல சுவையான புத்தகப் பைத்தியங்களை நாம் சந்திக்கமுடிகின்றது. புத்தகத்திருட்டைக் கருப்பொருளாகக்கொண்ட ஆசிய இலக்கியங்களைக்காணமுடிவதில்லை.

குஸ்தாவ் புளாபேயர் (GUSTAVE FLAUBERT) என்ற பிரெஞ்சு மொழி நாவலாசிரியர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் உள்ளதை உள்ளவாறு கூறும் இலக்கிய மரபில் மிக முக்கியமானவர். இவர் பிரசுரித்த முதலாவது புனைகதையில் ஒரு கிறிஸ்தவ துறவி பற்றிய வியப்பூட்டும் செய்தி காணப்படுகின்றது. பெருந்தொகையான அரிய நூல்களைச் சேகரித்து வைத்திருக்கும் இத்துறவி பிறிதோர் அரிய நூலைத் தேடி அலைகிறார். இறுதியில் அந்த நூல் யாருக்குச் சொந்தமானது என்று அறிந்து, அதைத்தனக்குத் தரும்படி அவரிடம் மண்டாடுகிறார். புத்தகத்துக்குச் சொந்தமானவர் அதைக்கொடுக்க மறுத்தபோது கடுஞ்சினம்கொண்ட துறவி அவரைக் கொலைசெய்துவிட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொள்கிறார். 1836ல் எழுதப்பட்ட இக்கதை இன்றும் புத்தகப் பைத்தியத்துக்கு முன்னுதாரணமாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

1933ல் பிறந்து இன்றுவரை எழுதிக் குவித்துக்கொண்டிருக்கும் அமெரிக்க நாவலாசிரியர் பிலிப் றொத் (PPHILLIP ROTH) எழுதிய 'கட்டவிழ்த்துவிடப்பட்ட சுக்கர்மான்' (ZUCKERMA NUNBOUND) என்ற நாவலில் வரும் கதாநாயகனின் தம்பிக்கு என்ன நடக்கிறதென்று பார்ப்போம். இந்த அப்பாவி தனது பெறுமதிமிக்க புத்தகத்தை ஒரு பருவப் பெண்ணுக்குக் கடனாகக்கொடுத்து விடுகின்றான். பல காலம் சென்ற பின்பும் அவள் அதைத் திருப்பிக்கொடுக்காமல் இழுத்தடிக்கிறாள். புத்தகத்தை மீளப் பெறும் நோக்கில் அவன் அவளைப் பின் தொடர்ந்து திரிகிறான். ஆனால் பயனில்லை. தனது புத்தகத்தை மீளப் பெறவேண்டுமாயின் அவளைத் திருமணம் செய்வது தான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்து அப்படியே செய்கிறான். இந்த இருவரில் யாருக்கு புத்தகப் பைத்தியம் என்பதை வாசகர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

பல கடன் கொடுக்கும் நூலகங்கள், தமது புத்தகங்களையும் அவற்றை கடன் வாங்குவோரையும் கண்காணிப்பதற்காக நன்கு பயிற்சி பெற்ற நிபுணர்களைப் பணிக்கமர்த்துகின்றன. திருப்பிக்கொடுக்காதவர்களையும் புத்தகங்களைத் திருடுவோர்களையும் கண்காணிப்பது தான் இவர்களுடைய முழுநேரப் பணி. இப்படியான நிபுணர்களுக்கே 'டிமிக்கி' கொடுக்கும் வாசகர்கள் இருக்கிறார்கள். நியூயோர்க் நகரின் பொது நூலகத்தின் நெடுங்கால வாடிக்கையாளரான ஒரு மூதாட்டியின் வீட்டில் 800 புத்தகங்கள் அண்மையில் மீட்கப்பட்டுள்ளன. இவற்றைத் திருப்பிக்கொடுக்காமல் எப்படி நூலகப் பொறுப்பாளரை ஏமாற்றினார் என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

இன்னும் சில நூலக வாடிக்கையாளர்கள் தாம் கடன் வாங்கும் புத்தகங்களின் படங்களையோ, ருசியான பாகங்களையோ எடுத்துக்கொண்டு புத்தகத்தைத் திருப்பிக்கொடுப்பார்கள். நூலகர்களுக்கு மிகப்பெரிய தலைவலி கொடுப்பவர்கள் இவர்கள் தான். மீளப்பெறும் புத்தகங்களைப் பிரட்டிப்பார்க்கவேண்டிய மேலதிகப் பொறுப்பை எப்படித்தான் மேற்கொள்வது. சில மனநோயாளர்கள் தமக்குத் தேவையானவற்றை வெட்டி எடுக்க மாட்டார்கள். புத்தகத்தின் கட்டை அவிழ்த்து வேண்டியதை எடுப்பார்கள். பின்பு வேறு உதாவாக்கரைப் புத்தகத்தின் அதே எண் பக்கங்களை வைத்து மீண்டும் கட்டிவிடுவார்கள். படங்களுக்குப் பதிலாகவும் இதையொத்த உத்தியை கையாள்வார்கள். ஆனால் என்றோ ஒரு நாள் அகப்படுவார்கள்.

**புத்தகத் திருட்டு வரலாற்றில் சாதனை படைத்தவர் ஸ்ரீபன் பூளும் பேர்க் [STEPHEN BLUMBERG] என்ற அமெரிக்கர். இவர் 327 நூலகங்களில் இருந்து 22,000 கிடைத்தற்கரிய மிகவும் பெறுமதி வாய்ந்த நூல்களைத் திருடி வைத்துள்ளார். அவர் திருடிய நூல்களின் மொத்தப்பெறுமதி 40 மில்லியன் டொலர்கள்.**

புத்தகத் திருட்டு வரலாற்றில் சாதனை படைத்தவர் ஸ்ரீபன் பூளும் பேர்க் (STEPHEN BLUMBERG) என்ற அமெரிக்கர். இவர் 327 நூலகங்களில் இருந்து 22,000 கிடைத்தற்கரிய மிகவும் பெறுமதி வாய்ந்த நூல்களைத் திருடி வைத்துள்ளார். அவர் திருடிய நூல்களின் மொத்தப்பெறுமதி 40 மில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்படுகின்றது. இவற்றைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பொருத்தமான ஒரு பழைய வீட்டையும் அதற்குள் 180 புத்தக இறாக்கைகளையும் அமைத்துள்ளார். தரையில் இருந்து கூரைவரை இந்த இறாக்கைகள் உயர்ந்து நின்றன. இவரைக் கைதுசெய்த அமெரிக்கப் பொலிசார் அவர் மீது கோட்டில் வழக்குத்தாக்கல்செய்து சிறைத்தண்டனை பெற்றுக்கொடுத்தனர். இவருக்காக ஏற்பட்ட வழக்கறிஞர்கள் இவர் புத்திசுவாதீன மற்றவர் என்று வாதிட்டனர். நீதிமன்றம் அவர்கள் வாதத்தை ஏற்கமறுத்ததோடு தண்டனையும் விதித்தது.

பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வரை மாத்திரம் படித்த பூளும் பேர்க் ஒரு பேராசிரியர் போன்று நடிக்கக் கற்றுக்கொண்டார். ஒரு ஆராய்ச்சியாளனாக நூலகங்களுக்குள் நுழைவது அவருடைய வழமை. புத்தகங்களை மறைத்து எடுத்துச் செல்வதற்குகந்த விசேட ஆடைகளை அவர் அணிவார். நூலகங்களில் அவர் இரவு நேரங்களில் பிடிபடாமல் தங்கியிருந்து தனக்குத் தேவையான புத்தகங்களைத் தேடி எடுப்பார். காலையில் நூலகம் திறக்கப்பட்டதும் மெதுவாக வெளியேறி விடுவார். இவர் திருடிய புத்தகங்களைப் படிப்பதில்லை. அவற்றை வைத்திருப்பதில் மாத்திரம் அவர் திருப்தி கண்டார்.

**ஒரு உன்னதமான உயிரியின் குருதியும் ஆத்மாவுமாகப் புத்தகங்கள் இடம்பெறுவதாக ஆங்கிலக் கவிஞர் ஜோன் மில்ரன் கூறுகிறார். அதற்காகத் திருடவேண்டு மென்றில்லை. புத்தகங்கள் தொழிற் கருவியாகவும் உயர்வுக்கு வழி காட்டியாகவும் அமைகின்றன.**

ஒரு உன்னதமான உயிரியின் குருதியும் ஆத்மாவுமாகப் புத்தகங்கள் இடம்பெறுவதாக ஆங்கிலக் கவிஞர் ஜோன் மில்ரன் கூறுகிறார். அதற்காகத் திருடவேண்டுமென்றில்லை. புத்தகங்கள் தொழிற் கருவியாகவும் உயர்வுக்கு வழி காட்டியாகவும் அமைகின்றன. பல்கலைக் கழக நூலகங்களில் நடக்கும் புத்தகத் திருட்டுக்களை நிறுத்தமுடிவதில்லை. தேர்வுகள் நெருங்கும்போது திருட்டுக்கள் உச்சம் அடைகின்றன. மாணவர்களும், ஆசிரியர்களும் இவ்வகைத்திருட்டில் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சக மாணவர்களிடம் தமது கைவரிசையைக் காட்டும் மாணவர்களும் இருக்கிறார்கள். ஒரு கல்விச் சமுதாயத்தின் ஒழுக்கக் கேடுகளாக இவை பார்க்கப்படுகின்றன.

அரிய புத்தகங்கள் பெறுமதி வாய்ந்தவை என்ற காரணத்தால் அவற்றிற்கு சந்தைவாய்ப்புக்கள் நிறைய உண்டு. அரிய புத்தகங்களை அரும்பொருள் காட்சியகங்களும், பெருநிதி படைத்த கோடீஸ்வரர்களும் பெரும் விலை கொடுத்து வாங்குகின்றனர். இதை எப்படிப் பெற்றீர்கள் என்ற கேள்வியை அவர்கள் விற்பனை செய்பவரிடம் கேட்பது மிகவும் அரிது. அரிய புத்தகங்கள் அந்தஸ்தின் அடையாளமாகவும், முதலீடாகவும் கருதப் படுகின்றன. காலம் செல்லச்செல்ல அவற்றின் பெறுமதி உயர்கின்றது. 'றெயர் புக்ஸ்' (RARE BOOKS) என்று குறிப்பிடப்படும் அரிய நூல்கள் பற்றி இனிப்பார்ப்போம்.



பதினைந்தாம் நூற்றாண்டில் யோகான் கூற்றென்பேர்க் (JOHANN GUTENPERG) என்ற ஜேர்மனியர் நவீன அச்சுக் கலையின் முன்னோடி எந்திரத்தைக் கண்டுபிடித்தார். அவருடைய கண்டுபிடிப்புக்கு முன் வெளிவந்த நூல்கள் யாவும் கையால் எழுதப்பட்டன. இவை எண்ணிக்கையில் மிகக் குறைவு, ஆனால் மிகச் சிறந்த கலையுணர்வுடன் அவை தயாரிக்கப்பட்டன. சில கையெழுத்து நூல்கள் இன்றும் ஐரோப்பிய மடாலயங்களிலும், அரும்பொருள் காப்பகங்களிலும் இருக்கின்றன. இவற்றின் பெறுமதியை அளவிட முடியாது. அண்மையில் ஸ்பேயின் நாட்டின் கிறிஸ்தவத் துறவிகள் வாழ்விடத்தில் வைக்கப்பட்டிருந்த கையெழுத்து நூல்களின் சில முக்கிய பக்கங்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றின் விலை சில கோடிகளைத் தாண்டும். அரிய புத்தகங்களைத் திருடும் கும்பல்களின் சதிவேலையாக இத் திருட்டு கருதப்படுகின்றது.

அச்சுக்கலை பிறந்தபின் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வெளிவரும் முதல் பதிப்புக்கள் அரிய நூல்களாகக் கணிப்பிடப்படுகின்றன. கலையம்சத்துடன் கட்டப்பட்டுள்ள பழைய அச்சடித்த நூல்களுக்கும் நல்ல பெறுமதி உண்டு. பிரபல எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகள், கையால் எழுதப்பட்ட கடிதங்கள், கையொப்பங்கள் நல்ல விலை போகின்றன.அரிய நூல் வாணிபம் பிற வர்த்தக முயற்சிகளைத் தீர்மானிக்கும் நியதிகளுக்கு உட்படுகின்றன. எது அரிதாக இருக்கின்றதோ அது விலை கூடியதாகவும், எது பெருமளவில் கிடைக்கின்றதோ அது விலை குறைந்ததாகவும் காணப்படுகின்றது. அரிய நூல்கள் மிகவும் பழமையானதாகவும், அரிதாகவும், மனிதனின் எழுத்தார்வத்தின் வெளிப்பாடாகவும் அமைவதால் அவை பெறுமதியுள்ளனவாக அமைகின்றன. அரிய நூல்கள் சந்தைக்கு வரும் வாய்ப்புக்கள் குறைவு. அவை இடைத்தரகர்கள் மூலம் விற்பவர் யார், வாங்குபவர் யார் என்று அறியப்படாத விதத்தில் மிகவும் இரகசியமாக விற்பனையாகின்றன. ஒருவகையில் இது புத்தகத் திருடர்களுக்குச் சிறந்த பாதுகாப்பாக அமைகின்றது.

அன்பான இதயமே, உண்மை மிக்க அறிவு. – சார்ல்ஸ் டிக்கன்ஸ்.

# தொடர்கதை

## பகுதி — 03

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

இப்போதெல்லாம் நினைத்தவுடன் பரந்தனுக்கோ கிளிநொச்சிக்கோ போய் வந்து விட முடியாது. எங்கும் எதிலும் நிறைந்து போய் நின்ற இந்திய ராணுவம் தங்களுடைய வசதிப்படி சனங்களை நடு ரோட்டில் இருத்தி வைத்தோ வாகனங்களை மறித்து வைத்தோ இளம் வயதுள்ளவர்களை விசாரணை செய்ய என்று அழைத்துச் சென்றோ தம் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தில் பிரயாணங்களையே மக்கள் தவிர்க்க முயற்சித்துக்கொண்டிருந்தார்கள். ஆறு மணிக்கே ஊர் அடங்கிப்போனது.

இந்திய ராணுவத்தின் கெடுபிடிகள் அதிகரித்த பிறகு மாறன் ஆட்களை சிவம் காணவில்லை. உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் மாறனையும் வேறு தெரிந்த போராளிகளையும் பார்த்து கதைத்ததாக சிதம்பரி சொன்னார். நடுவீதியில் ரத்தம் பெருக கிடந்த கார்த்திக்கின் சாவின் துன்பம் இன்னும் ஆறாமலே இருந்தது.

"ஏற்கனவே கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கிற பிள்ளையள். இப்ப காட்டுக்க இருந்து கஸ்ரப்படுகுதுகள்."

"சதாசிவத்தாற்ர பெடியன் இரவு வந்து தாய் தேப்பனை ரகசியமாய் பார்த்திட்டு போறான். தருமலிங்கத்தின்ர பெடியன் போய் ரெண்டு வருசம் தாய் தேப்பன் காணேலை. எங்கயோ பயிற்சிக்கு போயிட்டானாம்."

எல்லோருக்குள்ளும் இருக்கிற தவிர்ப்பு இது,

அவர் காண வளர்ந்த பிள்ளைகள்.

பொழுது நன்றாய் சரிந்து இருள் வந்து கொண்டிருந்த நேரம் அவர் அப்போதுதான் வயலிலிருந்து திரும்பியிருந்தார். வீட்டின் பக்க முற்றத்தில் மாறனுடன் நாலைந்து பேர் நின்றிருந்தார்கள். நான்கு நாளுக்கு முன் முருகானந்தனிட மிருந்து வாங்கிப் போன மோர்ட்டார் சைக்கிளை மாறன் தர வந்திருந்தான்.

"சேர்.மோர்ட்டர் சைக்கிளை விட்டிருக்கு." என்று திறப்பை முருகானந்தனிடம் கொடுத்தான். மாறனின் தலைமயிர் கலைந்திருக்க, முகம் களைத்து போய் இருந்தது. எங்கோ தொலைதூரம் பயணம் செய்து வந்திருக்கிறான்.

"பரந்தன் சந்தியில ஆமி நிற்கின்றாங்கள். தம்பியவை கவனம்" மாறன் தன்னுடன் நின்றவர்களை இவன் வசந்தன்,இவன் இளங்கோ, இவன் ஆசாத் என்று ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அறிமுகப்படுத்தினான். அந்த மங்கலான பொழுதில் வசந்தனைப் பார்த்தவருக்கு அவனது முகத்தை எங்கோ பார்த்தது போல தோன்றியது. மெல்லிய உயரமான தோற்றத்தில், நீளமான முகத்தில் ஒரு சிரிப்புடன் நின்றவனைக் கூர்ந்து பார்த்தார். ஊர் பேர் கேட்டால் இவர்களின் அநேகம்பேர் சொல்லுவதில்லை. எனினும் ஆவலோடு கேட்டார்.

"தம்பி எந்த ஊர் "

"நான் உங்கட ஊர் தான். நடராசுவின்ர மகன்"

'அட அப்படியே. அவன்ர முகம் இருக்குதான். சின்னப் பிள்ளையில கண்டது. நிண்டு சாப்பிட்டிட்டு போங்கோவன்.

"இல்லை ஐயா, சாப்பிட இன்னொரு நாள் வாறம், இப்ப அவசரமாய் பூநகரிக்குப் போக வேணும். ஓவசியர் சந்தியில ஆமி நிற்குது, சுத்தி உள்பாதையால தான் போகவேணும். இப்ப போயிட்டு வாறம்."

அவர்கள் இருட்டுக்குள் நடந்து போனார்கள்.


## அத்தியாயம்-04

அன்று காலை பசளை ஏற்றி வர என்று கிளிநொச்சிக்கு போன மகேசன் மதியம் வரை வரவில்லை. கிளிநொச்சியில் என்ன தாமதமோ என்ற யோசனையில் பார்த்து வர அவர் கார் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். பரந்தன் சந்தியில் இந்திய ராணுவம் தெருக்கரையில் நிறைந்து போய் நின்றிருந்தார்கள். திலீபனின் ஓராண்டு நினைவு தினத்துக்காக இரவோடிரவாக பரந்தன் சந்தியில் கட்டப்பட்டிருந்த தோரணங்களையும் மஞ்சல்,சிவப்பு கொடிகளையும் மக்களைக் கொண்டே அவிழ்க்கச் செய்து கொண்டிருந்தார்கள். கயிறு அறுக்கப்பட்டு விழுந்த தோரணங்கள் தெருநீளத்துக்கு கிடந்தன.

பரந்தன் கடந்து கரடி போக்கு சந்தியை நெருங்கியபோது அங்கும் வாகனங்கள் வரிசையாய் நின்றிருந்தன. தொடர்ந்து நேரே செல்ல முடியவில்லை. உருத்திரபுரம் போகும் வீதியில் காரைத் திருப்பினார். சென்திரேசா பெண்கள் பாடசாலை கடந்து போக கணேசபுரம் குறுக்கு வீதி முகப்பில் விக்கினேஸ்வரனும் மரியதாஸ் மாஸ்டரும் கதைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து விட்டு காரை நிறுத்தினார். இரண்டு மாதத்துக்கு முன்னால் ராணுவம் வந்து அந்த சுற்றாடலை எரித்தபோது பக்கத்தே மரியதாஸ் மாஸ்டர் நடத்தி வந்த விஞ்ஞானக் கல்வி நிலையமும் முற்றாக எரிந்து போயிருந்தது. இப்போது அதை மறுபடி கட்டிக் கொண்டிருப்பதாக அறிந்திருந்தார்.

"என்ன தம்பி டியூட்டரி கட்டி முடிஞ்சுதோ.."

"கூரை வேலை நடக்குது. அங்க தமிழ் ஐயா நிண்டு செய்விக்கிறார். நான்



இதில வந்தாப் போல நிற்கிறன்."

"அப்ப கெதியாய் வகுப்புக்கள் தொடங்கியிடும்."

"வாற கிழமை தொடங்கும். அவங்கள் இடிச்சால் என்ன, எரிச்சால் என்ன மறுபடி கட்டத்தானே வேணும், ஏதோ பிரச்சினையல் ஒரு புறம், படிப்புக்கள் இன்னொரு புறம். எல்லாம் நடக்குது, பயம் எண்டு படிக்காமல் விட ஏழுமே."

"அது சரி தம்பி படிப்புத் தான் முக்கியம்" மரியதாஸ் மாஸ்டரைப்பற்றி அவருக்குத் தெரியும், மரியதாஸ் மாஸ்டரின் தந்தை அந்த நாட்களிலிருந்தே சிவத்துடன் சிநேகிதமாய் இருப்பவர். எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த கல்வி நிலையத்தை இவர் நடாத்தி வருவது பெரிய சாதனைதான், கிளிநொச்சியில் பலபேரின் கல்வி வளர்ச்சிக்கு இந்த கல்வி நிலையம் காரணமாய் இருந்திருக்கிறது.

'அப்பா சுகமாய் இருக்கிறாரே.'

"ஓம் இருக்கிறார். நீங்கள் எங்க இந்த பக்கம்"

"மகேசன் றக்ரரில காலமை பசளை ஏத்தப் போனவன் இன்னும் வரேலை." அவர் கவலையுடன் சொன்னார்.

ஆமி சரியான கோவத்தில நிற்குது. அவங்கட லெப்டினன்ட் ஜெனரல் கல்கட்



25ஆம் திகதி வரை யுத்த நிறுத்தம் அமுலில இருக்கும். அதுக்குள்ள போராளியல் ஆயுதங்களை ஒப்படைக்க வேணும் எண்டு சொன்ன வரல்லே, அவற்ர எண்ணப்படி எதுவும் நடக்கேலை எண்ட கோவத்தில எங்களை ஆடு மாடுகளைப் போல நடத்திறார்கள்"

"தங்கட காம்ப்புக்கு முன்னால ஆட்களை பிடிச்சு இருத்தி வைச்சிருக்கிறாங்களாம். அங்க பாருங்கோ. அவங்கட வாகனங்கள் ஆனையிறவிலயிருந்து கிளிநொச்சிக்கு வருகுதாம் என்று போற வாற எல்லா வாகனத்தையும் மறிச்சு வைச்சிருக்கிறதை."

இங்கே நின்று பார்க்கும் போதே கரடிபோக்கு சந்தி தெரிந்தது. கடைக் கட்டடங்கள் எல்லாம் கரிப் புகையுடன் தெரிந்தது. எரிக்கப்பட்டு மீண்டும் அரை குறையாய் எழுந்த கட்டடங்கள். கனரக வாகனங்களின் இரைச்சல்கள் வரவர அதிகமாயிற்று.

"ம். வாறாங்கள்."

வரிசையாய் பிரதான வீதியில் வாகனங்கள் கிளிநொச்சி நோக்கி போய்க் கொண்டிருந்தது.

விதம் விதமாக எத்தனை வாகனங்கள்.......

அவை கடந்து போகவே அரைமணி நேரம் எடுத்தது. பத்து நிமிடங்களின் பின் வீதியில் வாகனங்கள் போய் வரத் தொடங்கின.

"நான் வாறன், இப்பிடி சந்தி வழிய நிக்காதேங்கோ. உவங்களை நம்ப ஏலாது."

அவர் காரைத் திருப்பி எடுத்துக் கொண்டு போனார்.

பசளைக் கடையில் போய் விசாரித்தபோது பத்துமணிக்கே பசளைகளை உழவியந்திரத்தில் ஏற்றிக் கொண்டு மகேசன் போய் விட்டதாய் சொன்னார்கள்.

இவன் எங்கே போனான்.......

நெஞ்சுக்குள் கலக்கம் எழுந்தது.

இந்தியராணுவம் தங்கியிருந்த பிரதான வீதியின் பக்கத்து முகாமைப் பார்த்தவருக்கு "பகீ" ரென்றது. முகாமின் முன்புறத்தில் நின்ற வாகனங்களுக்குள் அவரது உழவியந்திரம் பசளைகள் ஏற்றப்பட்ட பெட்டியுடன் நின்றது. அதன் பக்கத்தே வெய்யிலுக்குள் இருந்த ஆட்களுக்குள் மகேசனும் இருப்பதை பார்த்தார். கடவுளே என்று மனம் பதறியது .

அவர் காரைவிட்டு இறங்கி உள்ளே போக முயல வாசலில் நின்றவன் புரியாத மொழியில் ஏதோ சொல்லிக் கொண்டே தடுத்தான். தலைப் பாகைக்கும் தாடிக்கும் நடுவேயிருந்த முகங்களில் இருந்த இறுக்கம் அச்சத்தையே ஏற்படுத்தியது.

"அஞ்சு மணிக்கு பிறகு விடுவம் எல்லாம் போ"

உரத்தக் குரலில் அதட்டினார்கள்.

அவர் வேறு வழியின்றி வீட்டுக்கு வந்தார்.

மாலை ஆறுமணிக்கு மகேசன் பசளையுடன் வந்து விட்டான்.

"ஏனாம் மறிச்சு இருத்தினவங்கள்."

"மறிக்கிறதுக்கும் இருத்திறதுக்கும் எத்தினையோ காரணங்கள் அவங்களுக்கு. இண்டைக்கு திலீபன்ர நினைவு நாள்தானே, எதுவும் தாக்குதல் நடந்தாலும் எண்டு ஆட்களை மறிச்சு தங்களோட இருத்தி வைச்சிருந்தவங்கள். தேவையெண்டால் எங்களில நாலைஞ்சு பேரை சுட்டுப் போட்டு படமெடுத்து புலியெண்டு ரீவியில் காட்டலாமல்லே, இப்ப எங்களை விட்டிட்டு இனிபோய் வாற ஆட்களை பிடிச்சு இருத்தி வைச்சிருப்பாங்கள்."

"பகல் முழுக்க இருந்திட்டு வாறாய். கால் முகம் கழுவியிட்டு சாப்பிட்டு போ மோனை"

மகேசன் கிணற்றடிக்கு போய் முகம் கழுவிவிட்டு வர பராசத்தி சாப்பாட்டை தட்டில் போட்டுக் கொடுத்தாள் அவசரமாய் அள்ளி அள்ளி சாப்பிட்டான்.

"காலமை போனவனை காணேலை எண்டு வீட்ட தேடப் போகினம். காலமை எத்தின மணிக்கு வாறது."

"சிதம்பரியின்ர மூண்டு ஏக்கர் வயல் உழவேணுமாம். காலமை யோகன் வருவான் அவனோட போய் உழுது குடு"

"சரி-வெள்ளன வாறான்"

மகேசன் போய்விட்டான்.

"நான் இவனை அவங்கட காம்புக்குள்ள பார்த்திட்டு ஒரு நிமிசம் பயந்தே போயிட்டன். என்ன நெஞ்சிடியப்பா" அவருக்குள் இன்னமும் அந்தக் கணம் பட்ட பதட்டம் தணியவில்லை.

அடுத்து வந்த நாட்களில் கவலைக்குரிய நிகழ்வுகள்தான் எவ்வளவோ நடந்தேறின. கணேசபுரத்து கிளாக்கற்ர மகளை இந்திய ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டுதாம் என்ற பதறல் அடங்கமுன்னரே வட்டக்கச்சியை சுத்தி வளைச்சு இளவயதுப் பெடியல் பதினைந்து பேர்வரை பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம் தாய் தேப்பன் அழுதுக் குளறிக் கொண்டு காம்ப் வாசலிலயே இருக்குதுகளாம்" என்ற செய்தி பரவியது. அது பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோதே றக்ரரில வந்த நாலு போராளிப் பிள்ளையளை தருமபுரம் சந்தியில வைத்து ஆமி சுட்டுப் போட்டுதாம். ஆரெண்டு பார்க்கக் கூட ஒருதரையும் விடேலையாம்" என்ற செய்தி வந்தது. யார் பெற்ற பிள்ளேகளோ என்று மனம் அலை பாய்ந்தது. "இலங்கை ஆமி ரோட்டுக்கரையாலதான் திரிவான். இந்திய ஆமி உள்ளுக்க ஊர் வழிய வந்திட்டான். உவங்கள் என்ன கொடுமைக்கு வந்தவங்களாக்கும், இவ்வளவு அநியாயம் செய்யிறாங்கள் தட்டிக் கேப்பார் ஒருவருமில்லை" கார்த்திகேசுவிற்கு தலைக்கு மேல் கோபம்.

அன்றைக்கு சாவகச்சேரியிலயிருந்து வரும்போது ஆனையிறவில் ஐந்து மணித்தியாலம் வெயிலுக்குள் இருக்க விட்டுவிட்டாங்களாம், "இப்ப ஆனையிறவில இலங்கை ஆமி உள்ளுக்க இருக்க இவங்கள் தான் செக் பண்ணுறாங்கள். மாறி மாறி வந்து மனிசரைக் கொல்லுறாங்கள்.

பொழுது சாயும் நேரம் கண்ணாடி சந்திரன் சைக்கிளில் களைத்துப் போய் வந்தான்.

"நெடுங்கேணியில் வைச்சு எங்கட 4 போராளியளை ஆமி சுட்டுப் போட்டான். நான் மயிரிழையில் தப்பியிட்டன். எங்களுக்கு கொஞ்ச நாளைக்கு உங்கட றக்ரர் வேணும் ஐயா" என்றான். "நெடுங்கேணியில் இருந்து சைக்கிளிலயே வாறாய்த் தம்பி." "ஓம் ஐயா இந்த சைக்கிள் இல்லையெண்டால் நடைதான்" அவர் அவனையும் சைக்கிளையும் மாறி மாறிப் பார்த்தார். சந்திரன் முதல் தடவையாய் கிளிநொச்சிக்கு வந்த நாட்களில் வீடு வீடாய் போய் மக்களை சந்தித்த காலத்தில் வேலாயுதம் அவனுக்கு என்று வாங்கி கொடுத்தது இந்த சைக்கிள்.

"பாருங்கோ ஐயா, எங்களுக்கு வேலாயுதம் ஐயா புது சைக்கிள் வாங்கித் தந்திருக்கிறார் என்று அப்போதே கொண்டுவந்து காட்டியிருந்தான். இந்த சைக்கிள் கூட இல்லாவிட்டால் காடு மேடெல்லாம் நடந்து தானே திரிய வேண்டியிருக்கும். போற போக்கைப்பார்த்தால் இனி காடுகளுக்கத்தான் பெரும் சண்டை நடக்கப் போகுது. உவங்களை விடுறதில்லை இருந்து பாருங்கோ.. சந்திரன் சைக்கிலை உழவியந்திரப் பெட்டியில் போட்டுக் கொண்டு போனான்.

என்ன நடக்கிறது இங்கே என்று புரியவில்லை. ஆனாலும் ஏதோ ஒரு வளையத்துக்குள் அகப்பட்டு மூச்சுத்திணறும் நிலை வந்திருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.

(தொடரும்)

விலை கொடுக்காமல் பெற இயலாத ஒரு பொருள், அனுபவம். — யாரோ




# மாரிகால இரவுகள்

**சி. மாதுளா**




**நாங்கள்** வன்னியில் விட்டு வந்த குடிசை வீட்டு வேலியில் கார்த்திகைக்கொடி அழகாக நெடிதுயர்ந்து என் அக்காவின் தலைமுடியைப் போல நெளிநெளியாய் அழகாகப் பூத்திருக்கும். அக்கா தனக்குப் பிடிச்சது என்பதற்காக தேடித்தேடி, கிள்ளிவரும் பனங்கீரையும் வீட்டின் கோடியில் தகதகவென வளர்ந்திருக்கும். கனகையா மாஸ்ரரின் ரோட்டு வேலியில் ஓங்கி வளர்ந்திருந்த விளாமரத்தின் பழங்கள், பொறுக்க யாருமின்றி சேற்றில் புதைந்திருக்கும். கல்லெறி வாங்காத ஆறுதல் பெருமூச்சின் பின், புளியமரமும் துளிர்விடத் தொடங்கியிருக்கும். அக்கா நட்ட ரோஜா பூக்கண்டுகள் மாடு தின்னாட்டில் இப்ப அக்காவின் மனம் போல வளர்ந்து இதழ்களை விரித்திருக்கும். இந்த மாதிரிப் பொழுதுகளில் பெய்யும் கடும் மழையில் அந்த ஊர் பச்சை ஆடை கட்டி மகிழ்ந்திருக்கும். எங்கள் காற்தடங்கள் எல்லாவற்றையும் ஓடிவரும் வெள்ளம் வயலை நோக்கி அள்ளிச் சென்றிருக்கும். நுளம்புகளும் மகிழ்வாக இன்னும் மகிழ்வாக இனம் பெருக்கி முகாரி இராகம் சுருதிகட்டி பாடத்தொடங்கியிருக்குங்கள்.

இன்று பெய்து விட்டுப் போன மழையின் பின் இப்படித்தான் எம் மனம் நேற்று வரையான நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றது. இடம் பெயர்ந்த, இடம் நீங்கி சொந்த ஊர் வந்தும் இன்னும் மூன்று மைல் தூரத்திலிருக்கும் என் ஊருக்கு என் வீட்டுக்குப் போவதற்கு, 'உயர் பாதுகாப்பு' வலயம் என்று வீட்டு முற்றத்தில் எழுந்த 'பாம்பு புற்று' கண்ணி வெடிகளை விதைத்து வேலி போட்டுத் தடுக்கிறது. சித்தியின் வீட்டில் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் தங்குவது? மாரி காலம் என்றால் எனக்கு கஸ்ரகாலம் என்பது அர்த்தமாகி விட்டதா? மிக் விமானம் வரப்போகும் அச்சத்தை விட இந்த மாரிகாலம் அதிக அச்சத்தைத் தருகிறதே. ஏன்..... ஏன் மாரிகாலம் என்னை வெறுக்க வேண்டும்? ஏன் நான் மாரி காலத்தை வெறுக்க வேண்டும். இளவேனில் தரும் பிள்ளையல்லவா மாரி. "மச்சான் மாரி காலம் வந்திட்டுது. இனியென்ன என் கவிதைப் புத்தகத்தின் மிகுதியையும் எழுதி முடிக்க வேண்டியது தான்." இப்படித்தானே சொன்னான் என் நண்பன் முகுந்தன். எல்லோருக்கும் கவிதை தரும் காலம் எனக்கு மட்டுமேன் இரவை நினைவூட்டி கனலை மூட்டுகிறது.....?

நான் முதன் முதலில் மாரி காலத்தை சின்ன வயதில் சந்திச்சது இப்பவும் நல்லாய் ஞாபகமிருக்குது.... உங்கள் எல்லோரையும் போல்தான் மழைக்காலங்களில் அம்மாவின் மடியை நனைத்து விடுவன். ஈரம் எனக்குக் கூடாது என அம்மா நினைச்சு, கத்தரிப்பூச் சோட்டியை மாத்தி மீண்டும் என்னை அணைத்துக் கொள்ளுவா, 'வெளியே போய் பெய்து விட்டு வா' என அம்மா ஒருக்காக் கூட கண்டிச்சதில்லை. மடியை நனைப்பது பிழையென சொல்லித்தராததன் விளைவு ஒரு நாள் பாலர் பள்ளியில் காச்சட்டையை நனைத்துப்போட்டன். நல்ல காலத்துக்கு என் அக்காவை ஒரு வயது வித்தியாசத்தில் அம்மாவும், அப்பாவும் பெத்ததனால் அக்காவும் நானும் ஒரே வகுப்பில் பள்ளியிலிருந்தோம். அன்று அக்கா மட்டும் இல்லாட்டி காச்சட்டையை கழட்டி பாக்கில் வைத்துக்கொண்டு பொடி நடையில வந்திருப்பன். (நேற்று பாலர் வகுப்பு ரீச்சர் ஊரில என்னைக் கண்டு சிரிக்க அந்த நினைவுதான் மன்னிச்சிது.) இரவானால் மாரித் தவளைகள் (பொக்கான்) பெரிதாய் குடல் கிழிய பல்வேறு ஒலி எடுத்துக் கத்துங்கள். எங்கட வீட்டுக் கறுத்தப் பூனையும், பக்கத்து வீட்டுப் பவளம் அன்ரியின் வெள்ளைப் பூனையும் இப்பத்தைய சினிமா பாட்டில் வருகிற இசைக்குக் கட்டுப்படாத குரல் மாதிரிக் கத்திக்கொண்டு வீட்டைச் சுத்திச் சுத்தி ஓடுங்கள். எங்கள் வீட்டின் கூரை 'சீற்' றினால் போடப்பட்டதனால் பெய்யும் மழையின் சத்தமும் இரட்டிப்பாகக் கேட்கும். இடி முழக்கத்திற்கும், வெட்டும் மின்னலுக்கும் எனக்குப் பயமூட்டி தவறாய் விளக்கம் தருவா அம்மா. ஆனால் நான் மாரி கால இரவுகளைப் பார்த்து பயப்படுகிறதே இல்லை. மழை பெய்யப் பெய்ய எனக்கு சிரிப்பும் கூத்தும், புளுகமும் ஏறிக் கொண்டே போகும். "சீ...... பள்ளிக்கூடத்தில நிக்கக்க மழை வந்திருந்தா கொப்பி ஒன்றையை கிழிச்சு ஓடம் விட்டிருக்கலாம்...." எங்கள் வீட்டுக் கிணற்று நீர் மட்டம் உயர்ந்திருக்கும். இப்படி நினைக்க நினைக்க நித்திரையும் வராது, இரவும் விடியாது.

என்ர கரச்சலைத் தாங்க முடியாத அம்மா "மியாவ் (பூனை) இந்தா, தம்பியை பிடிச்சுக்கொண்டு போ....." என்று எங்கட இலட்சுமி பசு அடித்தொண்டையால் கத்துவது மாதிரி கத்துவா. அம்மா கத்தியதும், ஆமிக்காரனுக்குப் பயந்து ஓடுவது மாதிரி பயந்தோடி அம்மாவின் மடிக்குள் புகுந்து கொள்ளுவாள் அக்கா. நானோ கடைசி வரைக்கும் பயப்படுகிறது இல்லை. வாசல் கதவைத் திறந்து எட்டிப்பார்த்த படியே "மியா இந்தா அம்மாவை வந்து பிடிச்சுக் கொண்டு போ..... கரைச்சல் தாறா...." என்று இலக்சுமி பசுவின் கன்றுக்குட்டி அடித்தொண்டையால் குரலெடுத்துக் கத்துவது மாதிரி கத்துவன். "ஆரின்ர பெடியன் என்று நினைச்சாய்'' எங்கட பூனைக்குட்டியை நாய்க்குட்டி சீண்டுவது மாதிரி அப்பா அம்மாவைச் சீண்டுவார். ...க்கு நித்திரை வந்ததும் அம்மாவின் மடியைப் பார்ப்பன். கங்காரு குட்டியின் பாதுகாப்பு உணர்வு முகத்தில் தெரிய அக்கா ஒய்யாரமாய்ப் படுத்திருப்பாள். "எப்படியாவது அம்மாவின் மடிக்குப் போய்விட வேண்டும் என்பதற்காக" அம்மா மியாவ், அம்மா மியாவ் தம்பியைப் பிடிக்கப் போகுது." என் தந்திரோபாயத்தைப் பாவித்து அம்மாவின் மடிக்குள் நான் புக அக்கா அப்பாவின் மடிக்குள் அடைக்கலம் தேடிக் கொள்வாள்.

"இப்ப மட்டும் எப்படியாம் மியாவைக் கண்டு பயம் வந்தது" அம்மா என் காதினை அப்பா தன் ரேடியோவின் மீற்றரை மெதுவாய் முறுக்குவது போல் முறுக்கி விட்டு பரிசாய் ஒரு முத்தம் தருவா. அம்மாவின் இணைப்புக்குள் சென்றதும் "விடியக்கூடாது... விடியக்கூடாது..." என விடிந்தும் என் வாய் முணுமுணுக்கும். விடியாமல் இருக்குமா என்ன?

ஆதவன் தன் காதற்பெண் மீதில் முத்தமிடத் தெறிக்கும் ஒளியில் பூமி மலரும். பூக்கள் விரியும்.... போர்வையைத் தூக்கி எறிந்து விட்டு ஈரமுற்றத்திற்கு ஓடி வருவேன். "செருப்புப் போடாமல் இறங்கிப்பார்... புளிக்கும்!" தேனீரை ஆத்தும் அம்மா கத்துவா. ஈரமண் என் பாதத்துடன், ஸ்பரித்து மெய்சிலிற்க இனிக்கும் உணர்வானது, அம்மா தன் மார்புடன் அணைத்து உயிர்க்கூட்டை இணைத்துத் தன் பாசத்தை எல்லாமே குழைத்துத் தரும் முத்தத்தை விட இனிப்பானதென்பதை அம்மா அறியா, வெறுங் காலுடனேயே இறங்குவேன். ஈரமண் தன்னுடன் ஈர்த்தெடுக்கும்.

இரவில் மலர்ந்து மணந்து நனைந்த மல்லிகைப் பூ களைத்து நிலத்தில் குப்புற விழுந்து கிடக்கும். அழகான ரோசா வளைந்து முற்றத்தை முத்தமிடுமாப்போல் இதழ் விரித்துத் தொங்கும், அதன் ஈரமான இதழ்களில் நீர்த்துளி சொட்டுச் சொட்டாய்ச் சொட்டும். தன் பிள்ளையின் சிந்தனையின் வீச்சை, இயல்பை அறியா அம்மா, என்னைச் 'சீமெந்து' நிலத்துக்கு துரத்துவதற்காக ஓடி வருவா... ரோசாப்பூ அவவையும் ஈர்த்து விடும். ரோசாப்பூவைப் போல் பூக்கும் நினைப்பில் அதன் இதழ்களைப் பிடிங்கி தன் பற்களினுள் வைத்து அரைத்து தன் 'அழகுப் பசிக்கு' உணவாக்குவா. எனக்கு வருமே கோபம் "எவ்வளவு அழகான பூக்களை ஏன் பிடுங்கி சாப்பிடிறியல், அப்பாதானே, அரிசியை மூட்டையாய் வேண்டிப் போட்டிருக்கிறார். சோற்றைக் காச்சிச் சாப்பிடுங்கோவன்" முதன் முதலாய் என் கோபம், அம்மாவை நல்லாய் ஏசியது, மாரிகால இளங்காலைப் பொழுதின், அழகை, கிறக்கத்தை, இரஞ்சிதத்தை என் மனதால் எப்படி இழக்க முடியும். இப்படித்தானே மாரிகாலம் எனக்கு அறிமுகமாச்சு.

என் பதினேழு வயதில் ஒரு மாரிப் பொழுதில் செம்மணி வீதியைக் கடந்து, கிளாலி ஏரியில் கண்ணீர் கலந்து வன்னியில் 'குடிசை' ஒன்றினுள் ஏதலியாப் புகுந்ததிலிருந்து தான். 'மாரிகாலம்' எனக்கு அச்சத்தை மட்டுமல்ல கூடவே மறக்கமுடியாத யாருக்குமே நிகழக்கூடாத சோகங்களையும் சேர்த்தே எடுத்து வருகிறதே. எங்கள் குடிசையைச் சுத்தி பெரும் வயல் வெளி நீர் நிரம்பி குடிசைச் சுவர்களை முட்டிப் பார்க்கும் - கடும் குளிர் வாட்டும். தடுப்பார் யாருமின்றி காற்றுப் பலமாய் வீசும். தூரத்தே கேட்கும் வெடி ஓசை, நடுக்கத்தை இன்னும் அதிகரிக்கும். நுளம்புகளுக்கு மட்டும் குதூகலம். தண்ணீருக்குள் கிடந்து தன் இனத்தை நன்றாய்ப் பெருக்கி கற்றை, கற்றையாய் அம்மா போடும் வேப்பிலை புகையை நோக்கி பறந்து வருங்கள். 'ஊழித்தீ' ஆடுங்கள் "நான் வெறும் உடம்புடன் படுத்தால் என் பிள்ளைக்கு நுளம்பு கடிப்பது குறைவாய் இருக்கும்" குறைந்த பட்ச எதிர்பார்ப்புடன் அப்பா முனகிக் கொள்வார். நுளம்பின் முகாரி இராகம் என்னை துயில அனுமதிக்கா, தவளையின் கத்தல் - நாயின் ஊளையிடல் அச்சத்தை இன்னும் அதிகரிக்கும். இசையைக் கூட வெறுப்பாக்கும் 'சூரியன்' எப்ப எழுவான்? என் மனம் துடித்துக் கொண்டிருக்க நான் எழுந்திருப்பேன்.

எங்கள் வீட்டில் கட்டில் மெத்தையில் கிடந்தும், குளிரின் சீட்டலைத் தாங்காது, போர்வைக்குள் சுருண்டு கொள்ளும் என் அக்கா, எங்கள் வீட்டு நாய்க் குட்டி 'வாசல் சாக்கில்' கிடப்பது மாதிரி, நெஞ்சுக்குக் குறுக்காக கைகளைக் கட்டி வெறும் சாக்கில் துயின்றது. என்னை உடைத்து அம்மனமாக்கியது. "என்வாழ் நாளில் நான் சந்திக்கும் 'பெரும்சோகம்' இது வன்றோ" என் ஏக்கத்தை பின் நாட்கள் பொய்யாக்கி என் உயிர்க் கூட்டை உலுப்பித்தான் விட்டதே.


அம்மா வேப்பிலைப் புகை போட்டுத்தான் என்ன? அப்பா வெறும் மேலுடன் படுத்துத்தான் என்ன? டெங்கு நுளம்புக்கு அக்கா இரையாகிப் போனாள். தன் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட துயராய், ஏற்படப்போகும் துயராய் ஊரவர் உணர்வுகள் பரிவைக் காட்டின. ஊருக்கருகிலேயே அக்காவைப் புதைத்து விட்டோம். புதைத்த அக்காவின் உடல் உருக்குலைவதைக் கற்பனை செய்து செய்தே அம்மா உருக்குலைந்து போனா. "டேய் குமார்,உன்ர அம்மாவின்ர நல்ல விசயங்களையும், அப்பாவின்ர நல்ல விசயங்களையும் எடுத்துத்தான்ரா கொக்கா பிறந்திருக்கிறா. நீயோ மாறி எடுத்திற்றாய் என்று என் நண்பர்கள் கிண்டலடித்து அந்த சோகத்திலும் என்னுள் இழையோடும். அம்மாவைப் பார்க்கும் போதெல்லாம் "சீ அக்காவின் உடலை எரித்திருந்தால் அம்மாவின் கவலை ஓரளவேனும் குறைந்திருக்கும்'' என மனம் சொல்லிக் கொள்ளும். "சீ பிள்ளையை விட்டு விட்டு நுளம்பு என்னைக் கொண்டு போயிருக்கலாமே" என அம்மாவும் "இனி நடக்க வேண்டியதைப் பார்ப்பம்" என அப்பாவும் சொல்லிக் கொண்டிருக்க, நானோ இந்த நுளம்புகளிலிருந்து எப்படி எங்களைப் பாதுகாப்பது என சிந்திக்கத்தொடங்க என் சிந்தனை, அம்மாவின் பூசணிக்கறி மாதிரி எனக்குப் பிடிக்காத விஞ்ஞானத் துறைக்குள் என்னைப் புகுத்திற்று. இலக்கியத்தில் நான் சாதிக்க வேண்டும் என்று கற்பனை பண்ணியதெல்லாம் நாம் குடிசை வீட்டில் விட்டு வந்த பனை ஓலைப் பாயைப் போல் விட விருப்பமின்றி விட்டு விட்டேன்.

அன்றைய துடிப்பு, ஆவல், உறுதி இன்றைய எம்.பி.பி.எஸ் பட்டத்தை தந்துவிட்ட போதும் இடியும் மின்னலும் போல தானே மாரிகாலம் இன்னும் நினைவில் விரிகிறது.

"தம்பி நான் டொக்ரர் ஆவன்...நீயோ இலக்கியப் படைப்பாய் உன் இலக்கியம் படித்து உனக்கு வைத்தியம் பார்க்கும் வரமும் எனக்கு கிடைச்சிருக்க பார்த்தியா?" இப்படித்தான் அக்கா கூறுவாள். அக்கா கூறியது கனவாகி அக்காவின் இறப்பால் நான் வைத்தியம் படித்து அக்காவின் கதையை இலக்கியமாகப் படைக்கும் இந்த துர்ப்பாக்கிய நிலையை 'மாரிகாலம்' தானா எனக்குத் தந்தது? கடந்த கால நிகழ்வுகள் என்னுள் உறைந்து கிடக்கிறதே எதிர்காலம் எப்படித் தான் மகிழ்வாய் அமையினும் சோகங்கள் கோர்வையாகி கல்லாய் மனதில் விழுந்து பழையதை மீட்டுகிறதே. என் மனதுக்குள் அமைதியைத் தேடிக்கொள்ள - எதனை உள்வாங்கி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வது?

அறம் இல்லாத இடத்தில், மாண்பு இராது. - ஜீன் லெஃப்ரான்க்.

# பன்முக விமர்சன மொழியை நோக்கி



ஓவியம், சிற்பம் குறித்து எழுதிவருகிற ஒரு கலை விமர்சகன் என்ற வகையில், குறிப்பிட்ட கலைஞனின் கலைப்படைப்பு என்பது என்னை எந்த விதத்தில் உள்வாங்கியது என்பதை ஆங்கிலத்தில் எழுதுகிற ஒருவனாகத்தான் எனது விமர்சனங்கள் அமைந்து வந்தன. இதன் அடுத்தகட்ட பரிணாமமாக தனிப்பட்ட ஓவியர்கள் குறித்து எனது அனுபவப் பகிர்தலைக் காட்டிலும், கலை வெளிப்பாட்டுப் பிரச்சினை சார்ந்த விமர்சனங்களாக எழுதத் தொடங்கினேன். எனது 'Aesthetics of Ambivalence' போன்ற கட்டுரைகள் இந்த வகையானவை. இன்றைக்கு எனது எழுத்து மட்டுமல்ல, என்னைப்போல எழுதுகிற எனது சகவிமர்சகர்களது விமர்சனங்களும்கூட தனிப்பட்டவர்களின் கலையைப் பற்றி அதிகமாகப் பேசுவதைக் காட்டிலும், கலை யோடு தொடர்புடைய பிற பிரச்சினைகள் குறித்தே அதிகமாகப் பேசுகின்றன. கீதா கபூர் (Geetha Kapoor), ரஞ்ஜித் ஹொஸ்கொட்டே(Ranjit Hoskote) போன்றவர்களின் எழுத்துக்கள் கருத்துகளின் மோதல்களாக அமைந்து, கலை குறித்த சிந்தனை சமூகத்தின் மையத்தை நோக்கி எப்போதும் நகர்ந்து கொண்டே இருக்கக்கூடிய ஒன்றாகச் செய்து விடுகின்றன.

இப்போது கலைப் படைப்புகளின் மதிப்புகள் குறித்த தீர்ப்புகளை நோக்கிய வாதப் பிரதிவாதங்களில் ஆர்வமற்றவனாகப் போய்விட்டேன். இத்தகைய தீர்ப்புகள் தற்காலக் கலைக்கு அதிக நன்மைகளைச் செய்யப் போவதில்லை என்றே தோன்றுகிறது. உதாரணமாக ந.முத்துசாமி பற்றி மிக உயர்வாகப் பேசிவந்த, தனக்கென்று தனிப்பட்ட பார்வை கொண்ட ஒரு விமர்சகர் இன்றைக்கு ந.முத்துசாமி தன்னைக் கண்டுகொள்வதில்லை என்றவுடன், அவரைக் கேவலமாகப் பேசும் விமர்சனத்தில் ஈடுபடுவதைச் சொல்லலாம்.

சரி, விமர்சனம் என்பது நல்ல படைப்புகள் அல்லது கெட்ட படைப்புகள் குறித்த தீர்ப்புகளைச் சொல்லுவதாக இல்லாது போகிற பட்சத்தில் அது எந்தத் திசையை நோக்கிப் பயணப்படவேண்டும்? ஓவியம் என்றுதான் நான் சொல்லவில்லை; நான் சொல்லிக் கொண்டு வருபவை சிற்பத்திற்கும், அச்சுப் பதிவுக்கலைக்கும், புகைப்படக் கலைக்கும் மட்டும் பொருந்தி வருபவை அல்ல. நான் சொல்லி வருபவை அனைத்தும் தமிழ்க்கவிதை விமர்சனம் குறித்ததும் ஆகும்.

ஒரு கவிதையைப் பற்றிய விமர்சனம் என் பது அந்தக் கவிதை தரும் அழகியல் அனு பவத்துடன் மட்டும் முடிந்து போவதில்லை. மாறாக அந்தக் கவிதை, காலம் காலமாக உள்ள இலக்கியத்தோடு, புவியியலோடு, வரலாற்றோடு, அரசியலோடு அல்லது கருப்பொருள் ரீதியான தொடர்போடு எந்தெந்தவகையிலெல்லாம் இணைகிறது அல்லது முரண்படுகிறது என்பவை குறித்த விமர்சனப் பார்வைகளைச் சகவாசகனுடன் பகிர்ந்து கொள்வது என்பதாகிறது. கவிதையின் செயற்பாடு, கடல் அலைகள் கடலுக்குள்ளேயே சமாதி ஆகி விடுவது போல கவிதைக்குள்ளேயே ஒடுங்கிப் போவது தற்காலத்துக்குப் பொருத் தமானது அல்ல.

எனவே, கனக்கும் பொறுப்பின் சுமைகளைத் தாங்கும் தூண்களுக்குச் சொந்தக்காரர்கள் மட்டுமே விமர்சனச் செயற்பாட்டில் இன்று ஈடுபடமுடியும். அதுவல்லாமல் தங்களது சொந்த சண்டை சச்சரவுகளின் அடிப்படையில் கவிதையை அல்லது கவிஞனை 'போற்றல் - தூற்றல் - சிந்தனைப் பள்ளிக்கேற்ப', எடுத்துப்பேசுவது என்பது இன்றைக்கு தேவைப்படாத விமர்சனச் செயற்பாடு ஆகும்.

ஏனெனில் ஒரு விமர்சகன் என்பவன் யாருடைய வேண்டுகோளையும் ஏற்று விமர்சனத் துறைக்கு வருவது இல்லை. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை அனுபவத்தை அல்லது உணர்ச்சியை என்னால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது என்பதினால் கவிதை எழுத வருவது மாதிரி, விமர்சகனும் ஒரு குறிப்பிட்ட கருத்தை மற்றவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அதை வெளிப்படுத்தாமல் இருக்கமுடியாது என்பதினாலேயே அவன் விமர்சனம் செய்யவருகிறான். எனக்குத் தெரிந்த வரையில், எந்த சிறுவனோ, சிறுமியோ தான் ஒரு டாக்டர் ஆகப்போகிறேன் அல்லது என்ஜினியர் ஆகப்போகிறேன் என்று சொல்வது போல, தானொரு விமர்சகனாகப் போகிறேன் என்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை.

சில நேரங்களில் கவிஞனே ஒரு விமர்சகனாகவும் செயற்படத்தொடங்கி விடுகிறான். டி.எஸ்.எலியட் கவிதை எழுதிக் கொண்டிருந்த அதே நேரத்தில், இலக்கிய விமர்சனத்திலும் ஈடுபட்டதை நான் இங்கு குறிப்பிடவில்லை. மாறாகக் கவிஞன் தனது கவிதையிலேயே விமர்சனச் செயற்பாட்டில் இறங்குவதைக் குறிப்பிடுகிறேன். இத்தகைய கவிதைகளை உபதேசங்கள் என்றும், பிரச்சாரங்கள் என்றும், அரசியல் என்றும் கூறி அவை கவிதைகள் அல்லவென்று நிராகரிக்கிறோம் என்றால் ஒரு கவிதைக்குள்ளிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் பல குரல்களுக்குள், ஒற்றைக் குரல் ஒன்றை மட்டும் அங்கீகரித்துவிட்டு, மற்றைய குரல்களை நிராகரித்தவர்கள் ஆவோம். எனவேதான் கவிதை விமர்சனம் செய்ய முனைபவர்கள் ஒரு கவிதைக் குள்ளிருந்து புலப்படும் பன்முகத் தன்மையை ஆராயத் தயாராக இருக்கவேண்டும்.

இன்றைய சமூகத்தின் சூழலைப் பயன்படுத்துகிற, அதில் பங்கெடுத்துக்கொள்கிற இலக்கிய விமர்சகன் தற்கால யதார்த்தங்களை மறுத்து, அவற்றைத் தூய கலையின் பெயரால் இலட்சியமயப்படுத்தக் கூடாது. இப்படி இலட்சியமயப்படுத்தும் விமர்சகர்கள் சகமனிதனிலிருந்து விலகி நிற்கிற, கலைத்தூய்மைக் கடவுள்களையும், இலக்கியத் திருவுருவங்களையும் கட்டி எழுப்பக் காரணமாகி விடுகிறார்கள்.

இறுதியாக ஒரு கவிதையை உன்னதமானதாக ஆக்குவது எது? கவிதை கையாளும் சிறந்த மொழிநடையா அல்லது கலைஞனின் அந்தரங்க அனுபவத்தைப் பேசும் செயற்பாடா? அல்லது பிரச்சினைகளை ஒரு கவிதை எந்தக் கோணத்தில் எதிர்கொள்கிறது என்பதைப் பொறுத்தா? அல்லது அந்தக் கவிதை எத்தனை லட்சம் வாசகனைக் கீறி உள் நுழைகிறது என்பதைப் பொறுத்தா? கவிதை என்பது பயன்படுத்தும் பேச்சு நடை எந்த குறிப்பிட்ட குழுவுக்கு உரியது என்பதைப் பொறுத்தா? இந்த வினாக்களுக்கு தீர்மானமான முடிந்த முடிவுகள் இருக்குமானால் இலக்கிய விமர்சனம் என்பது என்றைக்கோ ஒரு அறிவியலாக முடிந்து போயிருக்கும். இந்தக் கேள்விகளுக்கு தீர்மானமான முடிவுகள் இல்லாத காரணத்தால் தான் இலக்கிய விமர்சனம் என்பது இன்னமும் ஒரு கலையாக, ஒரு இலக்கிய வகையாக இருக்கிறது.

கவிதை என்பது எப்படி பன்முகப்பட்டதாக இருக்கிறதோ அதேபோன்று விமர்சனம் என்பதும் பன்முகப்பட்டதாகத்தான் இருக்க முடியும். இலக்கிய விமர் சனத்துக்கு என்று தர நிர்ணயம் செய்யப்பட்ட ஒற்றைத் தன்மை கொண்ட ஒரு கட்டளை மொழி (Standard Critical Language) ஒன்றை நாம் உருவாக்கவே முடியாது. ஏனெனில் ஒவ்வொரு கவிதையும் அதனது பண்புக் கூறுக்கு ஏற்றதான ஒவ்வொரு விதமான விமர்சன மொழியை எதிர்நோக்குகிறது.

இப்படிப் பொருத்தமான ஒரு விமர்சன மொழியைத் தேர்ந்தெடுக்கிறபோது இன்னொரு கேள்வி எழுகிறது. மார்க்சிய வாதிகள், அமைப்பியல் வாதிகள் போன்றவர்களிடம் காணப்படும் விசேஷமான மொழி நடையை (Technical language) விமர்சகன் தேர்ந்தெடுப்பதா அல்லது பெரும்பான்மை வாசகனைச் சென்றடையும் விமர்சன மொழியைத் தேர்ந்தெடுப்பதா? ஏனெனில் தமிழில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் அமைப்பியல் விமர்சனச் செயற்பாட்டில், சில விமர்சகர்களின் மொழிநடை என்பது மிகவும் Technical ஆக இருப்பதினால், அவற்றின் வாசகத்தளம் குறைந்த பரப்பளவு கொண்டதாகிவிடுகிறது. எனவே விமர்சகனின் நோக்கத்திற்கு ஏற்றவாறும், அவன் சுட்டிப் பேசும் கவிதையின் தன்மைக்கு ஏற்றவாறும் அவன் தனது விமர்சன மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்.

**இந்திரன்**
**நன்றி: கவிதையின் அரசியல்**

## இலட்சம் நம்பிக்கைகளோடும்...

புரிந்துணர்தல்கள் மரித்துப்போன
ஓர் சபிக்கப்பட்ட நரககாலத்தில்
மீண்டும் மீண்டும் தடக்குண்டு வீழ்ந்தது.
எங்களுக்குள்ளிருந்த ஐக்கியங்கள்.

உரசல்களின் வலிகளுக்கு
களிம்புதடவ மறந்துபோன
எங்களின் பதவிப்பிரியர்களால்
வாழ்வு சீழ்பிடித்துப் போயிற்று.

பரம்பரைப் பழக்கதோசத்தில்
எமக்குள்ளெழுந்த நகக்கிழிசல்களையெல்லாம்
சீண்டிச் சீண்டியே பெரிப்பித்தார்கள்
நாம் நம்பித்தேர்வு செய்த
எங்களின் "மேன்மைமிகு மனிதங்கள்"

நிலவாய் பளிச்சென்ற வாழ்வுமீது
இரத்தக்கறைகளை தேய்த்துவிட்டபடி
அழகாக சனநாயகம் பேசிக்கொண்டிருந்தன
அடுத்தடுத்து வாய்த்த வேதாளங்களெல்லாமே.

போரின் கோரப்பசி
உறவுகளை விழுங்க, விழுங்க
இலங்கைத் தீவு புனைபெயர் சூடிற்று
இரத்தத் தீவென.

முரண்பாடுகளின் மூலமறியாமல்
இந்த சமன்பாடுகள்
சமப்படுத்தப்படாமலேயே கிடந்தன
நேற்று வரை.

இன்று
இதயம் நிறைந்த எதிர்பார்ப்புக்களோடும்....
இலட்சம் நம்பிக்கைகளோடும்...
இமைக்காமலேயே பார்த்திருக்கின்றோம்
இழந்துபோன வசந்தங்களின்
விரைவான வருகையை.

யாழ்வீரன்.

## புதியதோர் பூமி வேண்டும்

அதிகார வர்க்கத்தின்
அட்டகாசமின்றி
மாற்றாரின் சுரண்டலின்றி
மதங்களின் சீண்டலின்றி
சாதி வேற்றுமையின்றி
நீதிக்காய் சிறைகளின்றி
சுதந்திரமாய்.
வாழ்வதற்கோர் பூமி வேண்டும்.
அதற்காய் வாரீர்

பணத்தின் தேவைகளின்றி
பசியின் கொடுமைகளின்றி
வாழ்விற்காய் போராடும்
வாழ்க்கையின்றி
பேராசையின்றி
பொறாமையின்றி
சுதந்திரமாய்
வாழ்வதற்கோர் பூமி வேண்டும்.
அதற்காய் வாரீர்.

ஊழலின்றி
ஊளைக் காதலின்றி
கயமையின்றி
காமமின்றி
புகையின்றி
சுமையின்றி
சுதந்திரமாய்
வாழ்வதற்கோர் பூமி வேண்டும்.
அதற்காய் வாரீர்.

ஏற்றத் தாழ்வுகளின்றி
ஏமாற்று வித்தைகளின்றி
ஏய்ப்பவர் யாருமின்றி
ஏதிலி நிலமையின்றி
எட்டாத கலைகளின்றி
எல்லோர்க்கும்
எல்லாம் கிடைத்து
சுதந்திரமாய்
வாழ்வதற்கோர் பூமி வேண்டும்.
அதற்காய் வாரீர்.

ஆண்டான் அடிமையின்றி
அனாதையாய் யாருமின்றி
அற்புதங்கள் படைக்கும்
புதியதோர் பூமி வேண்டும்.
அதற்காய் வாரீர்.

செ.நேசன்

# குழந்தைநாதம்

## சிறுவர் கதை

# முதலாளியும் முட்டாள் தொழிலாளியும்

கணபதி ஒரு கோதுமை வியாபாரி ஆவார். நகரத்தில் உள்ள சந்தையில் இவருக்கு கடை உண்டு, அவருக்கு ஒரு உதவியாளர் உண்டு. அவன் பெயர் வீரன். ஒரு நாள் கணபதி, ஒரு அவசரமான வேலையாக வெளியே செல்ல வேண்டி இருந்தது. வீரனிடம் கடையை ஒப்படைத்துவிட்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே வீரனிடம் தான் திரும்பி வரும்வரை கதவை நன்றாக கவனித்துப் பார்த்துக்கோள் என்று கூறிவிட்டு சென்றார். கணபதி சென்றதும் நகரில் ஒரு நடன நிகழ்ச்சி நடப்பது வீரனுக்கு தெரிய வந்தது. இளம் வயது என்பதால் வீரன் நடனத்தை போய் பார்க்கவேண்டும் என்று எண்ணினான். ஆனால் அவனது முதலாளி கடையின் கதவை கவனமாக பார்த்துக்கொள்ள சொல்லியுள்ளார். அவன் என்ன செய்வான்.. அவனது முதலாளி திரும்பி வரும் வரை அவன் அங்கேயே இருக்கவேண்டும். அதற்கு முன்னால் அவனால் எப்படி போக முடியும். அதற்குள் நடன நிகழ்ச்சியே முடிந்துபோய்விடும். திடீரென்று அவனுக்கு ஒரு திட்டம் தோன்றியது. அத்திட்டத்தின்படி அவன் அமைதியாக நடனத்தைக் கண்டு கழிக்கப்போனான். கணபதி தனது வேலைகள் எல்லாம் முடித்துக் கொண்டு திரும்பினார். அவரது கடை கொள்ளையடிக்கப்பட்டிருப்பதை கண்டு திடுக்கிட்டார்.

அவரது கடை உதவியாளர் வீரனைக் காணவில்லை. கடையின் கதவும் காணாமல் போய் இருந்தது. கணபதி தாங்க முடியாத கவலை அடைந்தார். அவர் வீரனுக்காகவும் கவலைப்பட்டார். சிலமணிநேரம் கழித்து வீரன் நடன நிகழ்ச்சி முடிந்து திரும்பினான். அவன் தலையில் கதவை சுமந்து கொண்டு வந்தான். இதைப் பார்த்ததும் முதலாளிக்கு எப்படி இருந்திருக்கும் வீரன் முதலாளி சொன்னபடி கதவை பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்தான்.

**எம்.நிதர்ஷா**



## வாரம் ஒரு குறள்

நாம் எல்லோரும் அறம் செய்கின்றோமா... என்றால் இல்லை என்று சொல்வதில்லை. ஏன் எனில் அறம் என்பது தர்மகாரியங்கள் செய்வது மட்டுமேதான் என்பது கணிப்பு.

உண்மையில் அறம் என்பதனுள் மட்டும் தர்மம் என்பது மட்டும் உள்ளடங்கி விடுவதில்லை. அதற்கப்பால் உயிர்களுக்கு தீங்கிழைக்காமை என்பதும் அறத்தினுள்தான் அடங்குகின்றது.

உயிர் என்றால் நாம் ஆறறிவுள்ள மனிதர்களை மட்டுமே நினைத்து விடுவது இயல்பு. உண்மையில் எவ்வகை உயிர்களுக்கும் தீங்கிழைக்காமையும் அறம்தான். சிறு உயிருக்கு செய்யும் துன்பம் தான். நாளை கொலை. கொள்ளை என்பவற்றிற்கு வழிகோலுவதாக அமைந்துவிடும். அதனால்தான் எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதீர்கள் என்பதை

*"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாம் தரும்."*

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 12

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ட | ர் | ர | ன் | ர் | கி |
| அ | வ | க | வ | ழி | க | மா |
| சி | ண | ர் | ர் | யி | ம் | க |
| கை | ப | மோ | த | டு | ட் | ள் |
| ந | மா | தா | ண் | ம் | பு | ஐ |
| வி | லை | ப் | ந் | மு | டி | வ |
| து | ஒ | கி | ற | ய் | தா | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 10 இன் விடைகள்

01. ஒழுக்கம்.
02. சுத்தம்.

01. கிளி.
02. காகம்.
03. புறா.

## சொற்சிலம்பம் - 10 இன் பரிசுக்குரியவர்

சு.பிரணவி,
வேலணை மேற்கு
நடராஜா வித்தியாலயம்

## சொற்சிலம்பம் - 10 இன் பாராட்டுக்குரியவர்கள்

01.நா. உமேஸ்,
நட்டாங்கண்டல்,
மாங்குளம்.

02. இ.கீதன்,
கிளி/கிளிநொச்சி
மகா வித்தியாலயம்.

03. சு.பால்ராஜ்,
8ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

04. செ.கானப்பிரியா,
79,யோகபுரம்,
மல்லாவி.

05. கு.நந்தகோபன்,
கிளி/இந்துக்கல்லூரி,
கிளிநொச்சி.

06. சௌ.சர்மிலா,
6ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

01. வாகனங்கள் மூன்று?
01) ..............................
02) ..............................
03) ..............................

02. மாதங்கள் இரண்டு?
01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................

*சொற்சிலம்பம் -12*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

## அன்னையே...

அம்மா...
"பாசம்" என்ற
சொல்லுக்காய்
"பரிவு" என்ற
சொல்லுக்காய்
அர்த்தம் தேடி
அகராதியைப் புரட்டினேன்,
என்ன ஆச்சரியம்
அதிலெல்லாம் உன்பெயர்
அன்னையே!
உன் அன்புக்கு
எல்லைதான் உண்டா?

**ம.கொன்சன்**

## பொன் மொழிகள்

01. தன்னலத்தை அறவே வென்றவனும்.... சாந்தியை அடைந்தவனும், மெய்ப்பொருள் கண்டவனும் ஆனந்தமாய் இருப்பார்கள்...!

02. நாலே நாள் பழகினாலும் நல்லவன் நல்லதையே செய்வான்... நாற்பது வருடம் பழகியிருந்தாலும் கெட்டவன் கெட்டதையே செய்வான்.....!


03. நீங்கள் செய்யக்கூடாத செயலை நாளை என்று தினமும் தள்ளிப் போடுங்கள்... உங்கள் வாழ்வு நிஜமாக அமையும்....!

04. பலவற்றை ஒன்றாக்குவது அன்பின் குணம்... ஒன்றை பலதாக்குவது பகையின் குணம்...

05. உன் உள்ளம் எப்படியோ... அப்படியே உலகமும்...!

சு.ஷாழினி,
நெளுக்குளம்,வவுனியா.

## நகைச்சுவை



**ஆசிரியர்** :- "கண்ணன் வேகமாக ஓடுகிறான்" இது என்ன காலம்?

**மாணவன்:-** நிகழ்காலம் சேர்?

**ஆசிரியர்** :- கண்ணன் வழுக்கி வீழ்ந்தான். இது என்ன காலம்?

**மாணவன்** :- கஸ்டகாலம் சேர்.

**சு.கௌரீஷன்,**

## நகைச்சுவைக் கதை

# சொல்ல மறந்த கனவு

தெருப்பாலத்தில் நிறையப் பேர் இருந்து நாட்டு நடப்புப் பற்றி பேசுவது வழக்கம். அப்போது இங்கு இருந்த காசி அண்ணனும் தானும் பேச வேண்டு மென்பதற்காக தனது பேச்சை ஆரமபித்தார். நேற்றைய சம்பவத்தை நினைக்க எனக்கு ஒரே பயமாக வுள்ளது. "என்ன அப்படி" என்று ஒருவர் வினாவ. பேச்சைத் தொடர்ந்தார் காசி அண்ணன் "ஒரு முப்பது வயது மதிக்கக்கூடிய ஒரு பெண், நல்ல நகைகள் அணிந்துகொண்டு தனியாகப் போனால், நான் அவளைப் பின் தொடர்ந்து, காட்டுப்பாதை வந்ததும் நான் அவளை கொலை செய்து விட்டு அவள் அணிந்திருந்த அனைத்து நகைகளையும் எடுத்துச் சென்று விட்டேன். அந்தச் சம்பவத்த நினைக்க நினைக்க ஒரே பயமாகவுள்ளது" என்று கூறி பேச்சை முடித்தார். அதைக் கேட்ட அனைவருக்கும் வியப்பாக இருந்தது "என்ன! காசி அண்ணனா இப்படிச் செய்தார்" என்று தங்களது மனதிற்குள் குழம்பிக் கொண்டனர். ஆனால், எவருக்கும் அந்தக் கொலையை எப்படிச் செய்ய மனம் வந்தது என்று காசி அண்ணனிடம் கேட்கத் தோன்றவில்லை. மாலைக் கதிரவன் மறையவே கூட்டம் கலைந்தது. அன்று இரவு 10.00மணி இருக்கும் காசி அண்ணனின் வீட்டை பொலிஸ் சுற்றி வளைத்தது. நாய் குலைக்கும் சத்தம் கேட்டு வெளியில் வந்தார் காசி அண்ணன். உடனே எந்த விதக் கேள்வியுமின்றி காசி அண்ணனை பொலிஸார் பிடித்துச் சென்றனர். பின் அடியுடன் கூடிய விசாரணை நடந்தது. அப்போது தான் அவருக்கும் புரிந்தது, தான் தெருப் பாலத்தில் கூறிய கதையை 'கனவு' என்று சொல்ல மறந்து விட்டேன் என்று.

**வி.மாவரசன்**






# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா -

தன் முகத்தில இருந்த வியர்வையைத் துடைத்து விட்டு ஓய்வெடுக்க முனைந்த ஆசிரியர் சாய், திடீரென கைக்கூலிப்படையினர் தங்களை நோக்கி ஓடி வருவதை கண்டுகொண்டார். இரும்பனை தன் முதுகின் மீது ஏற்றிக்கொண்டு அங்கிருந்து வேகமாகச் செல்லத்தொடங்கினார்.

“நில்! அல்லது சுடுவோம்!” என்று ஒரு கைக்கூலிப் படையினன் கத்தினான்.


ஒருமுறை றைபிள் வெடித்துஓய்ந்தது. ஆனால் வெடியோ எதிர்வளமாக, கைக்கூலிப்படையினரை குறி வைத்துச்சுடப்பட்டிருந்தது, மேலும் இரண்டு வெடிப் பொலிகள் கேட்டன.

ஆசிரியர்சாய் நிமிர்ந்து பார்த்தபொழுது, பயந்து நடுங்கிக்கொண்டிருந்த கைக் கூலிப் படையினரை நோக்கி றைபிளை நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு மனிதனைக்கண்டார்.



“எட்டாவது வழியினர் கிழக்கு குன்றின்மேல் இருக்கிறார்கள் அவர்களை போய் கொல்வோம்” என்று கத்திய கைக்கூலிப்படையினர் அந்த மனிதன் நின்ற திசையைநோக்கி ஓடத்தொடங்கினார்கள். அதே வேளை ஆசிரியர் சாயும் இரும்பனும் பறக்கும் குதிரைமலையை நோக்கிச் சென்றுவிட்டார்கள்.

இரும்பனுடைய பேரனும், கிராமத்தலைவருமான கூ, குன்றின் மேலிருந்த பாறையொன்றில் நின்றபடி அவர்களை கவனித்துக் கொண்டிருந்தார். அடர்த்தியான அவரது வெண் தாடி காற்றில் அலைபாய்ந்துகொண்டிருந்தது. அவரது றைபிள் அவரது தோளில் மாட்டப்பட்டிருந்தது. அந்த வயது முதிர்ந்தவரை நெருங்கிச் சென்ற ஆசிரியர் சாய், “நீங்கள் தான் அந்தச் சூடுகளைச் சுட்டிருக்கவேண்டும்” என்றார்.



‘‘நான் உங்களை தொடக்கத்திலிருந்தே அவதானித்துக்கொண்டிருந்தேன்” என்று மனம் விட்டுச் சிரித்தபடி கூ தாத்தா பதிலளித்தார்.

நான் உங்களை நோக்கி குரல்கொடுத்தால் அவர் கள என்னைக் கண்டு விடுவார் கள் என்பதால் உங்களை நோக்கி குரல்கொடுக்கவில்லை. அவர்களை திசைதிருப்பவென்றே கிழக்கு குன்றுகளிலிருந்து சுட்டேன்” என்றார் அவர்.

அன்று மாலை, மண்ணெண்ணை விளக்கு ஒன்றின் ஒளியிலே இரும்பன் தன்னுடைய புதிய பாடப்பொத்தகத்திலுள்ள முதலாவது பாடத்தை வாசிக்க முயற்சிசெய்தான்.

“அம்மா, உங்களால் இதை வாசிக்க முடியுமா?'' என்று கேட்டான். அந்தப் பக்கத்தில் இருந்த வார்த்தைகளை அவனது தாயார் பார்த்தாலும், அவளால் அதில் ஒரு வார்த்தையைக் கூட வாசிக்கமுடியவில்லை. தன் தாயாரின் கழுத்தை கைகளால் வளைத்துக்கொண்ட இரும்பன் அம்மா! நாளைக்குக் காலை, எங்களுடன் பள்ளிக்கு வரவிருப்பமா?” என்று பெருமையுடன் கேட்டான்.

“வளர்ந்த எங்களுக்கென்று வேறான வகுப்புகள் இருக்கின்றன” என்று அதேயளவு பெருமையுடன் சொன்ன அவள், தொடர்ந்து, “பெண்களுக்கான கல்வி யூட்டல் வகுப்பு நாளை மாலை தொடங்குகிறது” என்றாள்.

விரைந்து வந்த காலடியோசைகள், அவர்களது உரையாடலை தடுத்து விட்டன. ஜப்பானிய எதிர்ப்பு இளைஞர் தேசிய மீட்பு பின்னணி காப்புக் கோவில் இணைந்திருந்த, தகப்பனார், ஒரு கூட்டத்துக்குப் பின் இரவுணவுக்காக வந்திருந்தார்.

“அப்பா! இந்தப் பொத்தகத்தை எனக்கு வாசித்துக் காட்டுவீர்களா” என்று இரும்பன் கேட்டான்.

அவனது தந்தை பாடசாலைக்கு ஒரு போதும் போயிருக்காவிட்டாலும், பின்னணிக் காப்பு கோவில் இருந்த தன் தோழர்களிடமிருந்து சில வார்த்தைகளைக கற்றுக்கொண்டிருந்தார்.

பொத்தகத்தின் மேல் குனிந்த அவர் ஒரு வரியின் மீது தன் கண்களைப் பதித்துக்கொண்டு தட்டுத்தடுமாறி ஆனால் தெளிவாக வாசித்தார்:

“சீன கொம்யூ'னிஸ்ற் கட்சியும் தலைவர் மா ஓவும் தான் சீன மக்களின் மீட்பர்கள்”

(முற்றும்)

தமிழில்
வி.பி.யோசப்

---

# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

கண்டற்காடுகள யாழ் குடாநாட்டின் முக்கியமான வளங்களில் ஒன்று.

உயிரியல் ரீதியிலும், சூழல்ரீதியாகவும் முதன்மை பெறும் இக்காடுகள் பொருளாதார ரீதியிலும் தனித்தன்மைவாய்ந்தது. தொண்டமனாறு தொடக்கம் மண்டலாய் வரைக்கும் சிறுபற்றைகளாகவும், பெருமரங்களாகவும் காணப்பட்ட இவை முன்னைய காலங்களில் அழிக்கப்பட்டு இப்போது மிகக் குறுகிய இடப்பகுதியில் மாத்திரமே உள்ளது. வடமராட்சி கடனீரேரிப் பகுதியைத் தவிர சேற்றுப்பகுதியான சுண்டிக்குளம், கிளாலி, கேரதீவு, மண்டைதீவு, ஆனையிறவுக் கடனீரேரிப் பகுதிகளிலும் இக்காடுகள் கணிசமான அளவு இருந்ததாக / இருக்கின்றதாக சொல்லப்படுகின்றது.



1990களில் சிங்கள அரசால் ஏற்படுத்தப்பட்ட பொருண்மிய எரிபொருள்தடை காரணமாக இவற்றுக்கு ஆபத்து வந்தது. விறகுக்காக இக்காடு வேட்டையாடப்பட்டது.

பொங்கி எழும் அலைகளினால் எமது மண்வளம் கடலினுள் அரித்தெடுத்து செல்லப்படுவது, இக்காடுகளாலேயே தடுக்கப்படுகின்றது என்பதில் இருந்து இதன் முக்கியத்துவத்தை உணரமுடியும்.

பொருண்மிய நிறுவனம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் இக்காடு விறகுக்காக வெட்டப்படுவது கணிசமான அளவு தடுக்கப்பட்டது.

உறுதியானதும், பூச்சிகளின் தாக்கத்தை எதிர்க்கக் கூடியதுமான இம்மரங்களில் இருந்து தீராந்தி, மரங்கள், மீன்பிடிக்கம்புகள், வளையங்கள், கப்பல்கட்டும் பலகைகள் போன்றன தயாரிக்கப்பட்டன.

பறவைகளின் இயற்கையான சரணாலயமாக பாவிக்கப்படக்கூடிய இக்காட்டுப்பகுதி, இதை விட பல்வேறு காரணங்களாலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

## சூழல் பாதுகாப்பும் பொருண்மிய மதியுரையகத்தின் பங்களிப்பும்

சூழல் என்பது மண்,நீர், வளிமண்டலம், காலநிலை, ஓசை மாற்றங்கள் அத்துடன் ஒவ்வொரு விலங்கினதும், தாவரங்களினதும், உயிரினவியல் சார்காரணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றாடல்களின் பௌதீகவியலின் காரணிகளாகும்.

இன்று வரையறையறற மனிதத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வளங்களே பயன்படுத்தப் படுகின்றன. வளங்கள் பயன்படுத்தப் படுவதால் அவை குறைவடைந்து நாளடைவில் முற்றாக அழிந்துபோகும் அபாயம் உண்டு.

தேவையொன்றிற்காக ஒரு வளத்தைப் பெற்றுக்கொள்ளும்போது அதனால் ஏற்படும் பக்க விளைவுகள் பல. கட்டடங்கள் கட்டுவதற்கு மண் அகழ்வு நடைபெறுகிறது.

இதன்போது அந்த இடத்தில் நீர் புகுந்து மண்ணரிப்பு ஏற்பட்டு அருகில் உள்ள மரங்கள் விழுந்து விடுகின்றன. மண்கொண்டு செல்வதற்கு காடுகளுக்கிடையே பாதைகள் அமைத்து வளத்தை அழிக்கின்றனர்.

சூழலில் முக்கியமாக மண்ணை எடுத்துக்கொண்டால் உடைந்த பிளாஸ்ரிக் கழிவுகள், பொலித்தீன் பைகள், மண்ணிலே புதைந்து விடுவதால் அவை உக்காது மண்வாழ் நுண்ணுயிர்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. விவசாயத்தின்போது உச்ச விளைவை பெறுவதற்கு அளவுக்கதிகமான இரசாயனப் பசளைப் பிரயோகம் பொலித்தீன் பாவனை என்பன மிகவும் மோசமாக சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன. இவற்றைவிட சவர்க்காரம், சம்பூ வகைகள் வாகனங்களில் இருந்து கழிக்கப்படும் எரிபொருட் கழிவுகள், சுத்திகரிப்புக் கழிவுகள் என்பவற்றாலும் எமது சுற்றுச்சூழல் மாசடைகின்றது.

அடுத்து முக்கியமானதொன்று காடழிப்பு. எந்த வளர்முக நாடாக இருந்தாலும் முக்கியமாக வளத்தைப் பாதுகாக்கவேண்டும். காடுகள் நிலத்துக்கு போர்வையாகவும், எமக்குத்தேவையான ஒட்சிசனை உற்பத்திசெய்யும் நிலையங்களாகவும் காணப்படுகின்றன. காடுகள் மூலமே எமக்கு மழை வீழ்ச்சி கிடைக்கிறது. இத்தகைய வளத்தை பல்வேறு தேவைகளுக்காக அழிப்பதால் எமது சூழல் பெரிதும் பாதிப்படைகிறது.

மரம்தறித்தால் மரம் நட வேண்டும். ஆனால் யாருமே பிரதியீடாக மரங்களை நடுவதில்லை. தங்கள் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டால்போதும் என்றே எண்ணுகிறார்கள்.



சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படாவிடடால் நாம் நோயுற்றவர்களாகவே வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறோம். வீதியால் செல்லும் வாகனத்தின் சத்தத்தினால், அது விடுகின்ற புகையினாலும் நரம்புத் தளர்ச்சி, தோல்வியாதி போன்றவையும் சுவாசக் குழாய் நோய்களும், சலரோகம் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

இந்தவகையில் எமது நிறுவனமான பொருண்மிய மதியுரையகம் கிளி மாவட்டம், முல்லை மாவட்டம், யாழ் மாவட்டம், மன்னார் மாவட்டம், என பல்வேறு இடங்களில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டுவந்துள்ளது. சுற்றாடல் பாதுகாப்புச் சம்பந்தமான கருத்தரங்குகள் பனம்விதை மீள் நடுகை மற்றும் தென்னை நாற்று, பயன் தரும் மரங்கள் வழங்கல், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனைக்கட்டுப்பாடும் அதற்குப் பிரதியீடான உள்நாட்டுப் பொருட்களின் பயன்பாடும் பற்றிய விளக்கம் அளித்தல் என்பன அவற்றில் சிலவாகும். பிளாஸ்ரிக் பாவனை, பொலித்தீன் பாவனை பாவிப்பது தவிர்ப்பதற்காக கற்பகச்சோலை பனம் பொருள் விற்பனை நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களுக்கிடையே சூழல் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

சட்ட விரோத காடழிப்பு, பனை தறிப்புக்குத்தடை விதித்தல் மீள்வனமாக்கல் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. மணல் அகழ்வுகளைப் பாரிய அளவில் மேற்கொள்ளாது மணல் படிவுகளை இனங்கண்டு, சூழல் தாக்கமுறாத வண்ணம் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல், பாத்தீனியம் களை அழித்தல், உவர் நீர்த்தடுப்பு அணைகள் அமைத்தல், மழை நீரைத்தேக்கி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் செயற்பாடுகள் போன்றனவும் செயற்படுத்தப்படுகின்றன. அழிக்கப்பட்ட பனை, தென்னை, பயன் தருமரங்கள் போன்ற வற்றின் இழப்பை ஈடுசெய் வதற்காகவும், மீள்வனமாக்கல் மேற்கொள்வதற்காகவும் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இராணுவ அனர்த்தத்தால் அழிக்கப்பட்ட பனை. தென்னைகளுக்கு பிரதியீடாக கிராமங்கள் தோறும் பொருண்மிய மதியுரையகம் தீவிர பனை நடுகையை மேற்கொண்டு வருகிறது.

சிவகமலா

ஆத்திரமும், துவேஷமுமே, ஆள்கின்றன உலகை - நியாயம் என்பதன் பெயரால். - ஜான் வெஸ்லி




## ஒளி...!

தீபமே உன்னை
ஏற்றமாட்டேன்
உன்னை உருக்கி
ஒளி தருகிறாய்
என்பதற்காகவல்ல!
இருகரம் கொண்டு
ஏற்ற நினைக்கின்றேன்
எனினும்
என் இன்னொரு கரமாய்
இருப்பவள்
கரம் கொடுக்க
மறுப்பதால்
விட்டு விடுகின்றேன்!

எஸ்.வசந்தி

---

விழிகளிரண்டை
விடியலின் திசை தேடி
பூவாக இருக்கையில்
புயலென வந்த
ஆதிக்கன்
அடிக்கையிலும்
அடாது மழையின்
விடாது நடைபோல்
விழிகளிரண்டில்
விளக்கெண்ணெயுடன்
வறுமையினும்
விடிவை நோக்கி
செல்லும் பாதை.

சி.மகேந்திரகுமார்

---

மொட்டவிழ்ந்த பூக்களாய் - நாம்
மோகனம் சிந்தியிருக்க...
வண்டுகள் எங்களைச் சுற்றி வந்தன
அகிலத்தை மறக்கும்
ஆசை வார்த்தைகளுடன்...
அள்ளிக் கொள்ள நினைத்தன
அன்புக்கு மட்டும் முதல்
அடைக்கலம் அறிந்தபோது.
அடுத்த மலரைத் தேடின
புதிதாய் மலரும் பூக்கள்
தேடி அதே வண்டுகள்!
மீண்டும் சுற்றி...சுற்றி....!

மா.யேசுராணி

---

## மலராதா - பூ

பூமியில் ஆயிரம் பூக்கள்
தினமும் பூக்கின்றன.
காலையில் வானதில்
ஒரு பூ பூக்கின்றது
அது சூரியப் பூ
பௌர்ணமியில் நிலவு கூட
வானத்தில் பூத்து
காட்சி தரும்.
எம் வாழ்வு மலர
சமாதானப் பூ மலராதா.

என்.உத்தமன்

---

தாய் தன்னை வருத்தித் தான்
உன்னைப் பெற்றாள்
தந்தை தன்னை வருத்தித்தான்
உன்னை வளர்த்தார்.
அண்ணன் தான் பட்டவற்றை
எண்ணித் தான் உனக்கு
அறிவுரை விடுத்தான்
ஆசிரியர் நற் சமுதாயத்திற்காகத் தான்
உன்னை உருவாக்க எண்ணுகிறார்
இவற்றையெல்லாம் நீ அறிவாயா?

எம். நிதர்சா

---

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

எனக்கு மதி என்றொரு நண்பி இருந்தாள். அவள் எப்போதும் கலகலப்பாக பேசுவாள். அதாவது அவள் ஒரு உல்லாசமான பேர்வழி.

அதனால் அவள் சில நேரங்களில் மாலை நேர வகுப்புகளுக்கு வராமல் 'கட்' அடித்து விடுவாள்.

அதனால் நாம் அவளை மாலை நேரங்களில் நடைபெறும் வகுப்புகளுக்கு வர்ராமல் எங்காவது வேறு நண்பிகளின் வீடுகளில் நடைபெறும விசேசங்களுக்குச் சென்று விட்டாலும், நாம் அவள் அன்று வகுப்புக்கு வந்ததாகவே கூறி விடுவோம்.

இல்லையேல் அவளிடமிருந்து தப்பிப்பது மிகக் கடினம். இதனால் நாம் எப்போதும் அவளுக்கு பிரியமானவர்கள்.

இப்படித்தான் ஒருநாள் அவள் ரியூசனில் நடைபெற்ற பரீட்சைக்கு வரவில்லை. ஒரு நண்பியின் வீட்டிற்கு சென்று விட்டாள். ஆனால் ஆசிரியரோ நண்பியின்வீட்டிற்குச் சென்று ஏன் வகுப்பிற்கு வரவில்லை என விசாரித்திருக்கிறார்.

இந்த விடயம் எங்களுக்கு ஒருவாறு தெரிய வந்துவிட்டது. நாம் எல்லோருமே சேர்ந்து அன்று இன்னுமொரு நண்பிக்கு வருத்தம் வந்ததுபோல் நடிக்கச்சொல்லி அவளையும் வகுப்பிற்கு வராமல்ச் செய்துவிட்டோம்.

அந்த நண்பியின் வீட்டிற்குச் சென்றபோது ஏன் வகுப்புக்குச் செல்லவில்லை எனக் கேட்டதற்கு தயாராக வைத்திருந்த பொய்யை அவிழ்த்துவிட்டோம்.

இது தான் பொய். நண்பிக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டுவிட்டதால் அவளை வைத்தியசாலைக்கு மதி அழைத்து சென்றதால் அவளால் வகுப்புக்கு வர முடியவில்லை என எல்லோரும் ஒருமித்துச் சொன்னோம்.

கஜனி

---

# ஊக்கமாத்திரை

## ஆசையை மனதிலே வளர்ப்பது தவறா...?

ஆசை என்ற வார்த்தைக்கு அவா. விருப்பு. பற்று. ஈர்ப்பு என பல கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்; சொல்வார்கள். இவ்வாசையானது சிறியவர்கள் முதல் பெரியோர்கள் வரை எல்லோரது மனதையும் ஆட்டிப் படைக்கும் அதீத சக்தி கொண்டது. ஆசையானது ஒவ்வொருவரது மனதிலும் தோன்றும் அல்லது ஏற்படும் விதத்தைப் பொறுத்து அதற்கான வடிவம் வெவ்வேறு பெயர்களால் வரையறுக்கப்படுகின்றன.

பொருட்கள் மீது. இயற்கை மீது. விலங்குகள் மீது. கற்கை நெறிகள் மீது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் ஆசை அல்லது விருப்பு ஏற்படுகின்றது. அப்படி ஒரு துளி ஆசைகூட இல்லாத மனிதன் இந்த உலகில் இருக்கின்றானா? ஒவ்வொருவரது மனதிலும் ஆசை சிகரங்களாக வலுப்பெற்று மறைந்து இருக்கின்றனவே தவிர ஆசையில்லையென்று யாரும் மறுக்க முடியாது. இதுதான் உண்மை நிலையும் கூட.

ஒரு பொருள் மீது ஆசை ஏற்படுகின்றதென்றால் அது அழகு. கவர்ச்சி. பயன் நிறைந்த ஏதோ ஒரு காரணமாகத்தான் இருக்கச் செய்கின்றது. இயற்றை மீது ஆசை எழுகிறது என்றால். ஏதோ ஒரு வகையில் மனிதனது மனதிற்கு புத்துணர்ச்சி அளித்து இன்பமடையச் செய்கின்றது. விலங்குகள் மீது மனிதன் உயிரையே வைத்திருப்பான். இது ஆசைக்கு அப்பாற்பட்ட அதிக விருப்பத்தால் தோன்றும் உணர்வு. காரணம் அவை மனிதனுக்கு சந்தோசத்தைக் கொடுப்பதுடன் பாதுகாப்பையும் கொடுத்து;



ஆறறிவு மனிதனுக்கு நல்ல அறிவுரைகளை செயலால் செய்து காட்டும் அற்புத இயல்பு கொண்டவை. சிலர் மீது ஒரு சிலருக்கு அதிக விருப்பும் அதிக வெறுப்பும் ஏற்படுவதுண்டு. அதாவது எல்லோருமல்ல. ஏனென்றால் அந்த நபரது நல்ல நடத்தை. நல்ல உரையாடல். அணுகுமுறை இப்படி ஏதோ மற்றவர்களைக் கவரும் தன்மையைக் கொண்டிருக்கலாம். இதுவே அவர் மீதான விருப்பை அதிகரிக்க வைத்திருக்கலாம். இத்தன்மைகளின் மறுபக்கத்தால் வெறுக்கும் நிலமை தோன்றலாம். கற்றுக்கொண்டிருப்பவர்கள் கல்வி மீதான ஆசையை என்றுமே தளர்வடைய விடக்கூடாது எனச் சொல்லப்படுகின்றது.


ஆசைகளை மனதிலே வரித்துக்கொள்வதில் எந்தத் தவறுமே இல்லை. அதனை யாரும் தவறாகவும் கருதக்கூடாது. அதாவது மருத்துவ பீடத்தில் கல்வி பயிலும் ஒருவர் பெரிய வைத்திய நிபுணராக வந்து மக்களை காப்பாற்ற வேண்டும் என ஆசை கொள்வது தவறில்லையே. ஏனென்றால் அவரது அறிவியல் பயணவழி அதைச் சார்ந்ததாக இருக்கிறது. அதற்காக அவர் முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டும் இருப்பவர். கல்வி கற்கின்ற மாணவர்கள். ஆசிரியர். வைத்தியர். ஆய்வாளர். அறிஞர். கவிஞர் இப்படி ஏதாவது ஒரு தகுதி உடையவராக வரவேண்டும் என்று ஆசைப்படுவது சரிதான். ஆனால் கனவோடான ஆசையாக இருக்காமல். அதற்காக கடுமையான முயற்சி. உழைப்பு. சகிப்புத் தன்மை. விட்டுக் கொடுப்பு. புரிந்துணர்வு அதிகமாகத் தேவை. அப்போது தான் ஆசைகளை நிறைவேற்ற உங்களால் முடியும்.

நாங்கள் கற்பனையால் சில வினாடிகளே சந்தோசத்தைப் பெறலாம். ஆனால். நிஜவாழ்க்கையில் சந்தோசத்தை அனுபவிக்க வேண்டுமென விரும்பினால் அல்லது உங்களது ஆசைகளை வெற்றியடையச் செய்ய வேண்டுமாயின் அதற்கான வழிகள். வாய்ப்புகள். வசதிகள் உங்களுக்கேற்றவாறு அமைவாக இருந்தால் ஆசை கொள்வது பிழையில்லை. உங்களால் அடைய முடியும் அல்லது பெறமுடியும் அல்லது சாதிக்கமுடியும் அல்லது அதற்கான தகுதி அல்லது ஆற்றல் அல்லது அறிவு அல்லது திறமை உண்டு. நம்பிக்கை உண்டு என்று உங்கள் மனமே; உங்களுக்கு உற்சாகம் கொடுத்தால் ஆசை கொண்டு முயற் சியுங்கள். பலன் விரைவாகவே உங்களுக்குக் கிடைக்கும். சுருக்கமாகவும். முடிவாகவும் பார்த்தால் அல்லது கருதினால் அல்லது நோக்கினால் சரியானவை மீது ஆசைப்பட்டால் வெற்றியுண்டு. கிடைக்காது. பெறமுடியாது எனத்தெரிந்தும் ஆசை களை விருட்சமாக மனதிலே வளர்ப்பதுதான் குற்றம். ஆசை வையுங்கள். முயற்சியெடுங்கள். நம்பிக்கையுடன் செயற்படுங்கள். அதுவே நியாயமான உங்கள் ஆசைகளை நிறைவேற்றி வைக்கும்.

**வி.பாணு.**

---

## குறுக்கெழுத்துப்போட்டி - 47



### இடமிருந்து வலம்

01. கார்த்திகை 27.
10. தாமரையின் வகைகளில் ஒன்று.
18. அரசன்.
22. பட்டினம் குழம்பி உள்ளது.
27. குதிரை.
30. புன்சிரிப்பு.
36. காசு.
40. மயக்கும் பெண்.

### மேலிருந்து கீழ்

01. பொய்த் தோற்றம்.
02. வாத்தியக் கருவிகளில் ஒன்று.
10. போர்க்களம்.
22. தோழன்.
41. முதியவள் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
42. மாதங்களில் ஒன்று தலை கீழாக உள்ளது
46. அஞ்சனம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.45 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அகிம்சை.
10. சூரியன்.
17. காத்தல்.
32. மரணம்.
43. ஒத்திகை.
48. பலா.

**மேலிருந்து கீழ்**

01. அடையாளம்.
02. கிழக்கு.
03. ஆகாரம்.
06. வயல்.
11. சித்திரம்.
19. தருமன்.
28. பணயம்.
38. திதி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.47
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.45 இன் பரிசுக்குரியவர்**

**பா. சயந்தினி,**
**இல:39,கட்சன் வீதி,**
**வட்டக்கச்சி.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.45 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

01. ம.அன்ரன் ஜெயதாஸ், ஆரோபணம் இளைஞர் இல்லம், கிளிநொச்சி.
02. சே. தேவநேசன், தருமபுரம், கிளிநொச்சி.
03. கு.பரமநாதன், திருநகர், கிளிநொச்சி,
04. ந. நவநீதன், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
05. மு.கலைச்செல்வன், பல்லவராயன் கட்டு, பூநகரி.
06. செ. தரணிகா, கூமாங்குளம், வவுனியா.

---

ஒரு நாட்டின் அருகதைக்கு ஏற்ப, அதன் ஆட்சி அமைகிறது. - ஜொஸெஃப் தெ மேஸ்த்ர

# இலக்கியப்பகிர்வு

## ரஞ்சகுமார், உமாவரதராஜன்

**சிதம்பரன்**

ரஞ்சகுமார் போலவே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இன்னுமொருவர் உமாவரதராஜன். 1988ல் வெளிவந்த அவரது "உள்மன யாத்திரை" குறிப்பிடத்தக்க ஒரு தொகுப்பு.

எனினும் இந்தியா ருடே இலக்கிய மலர் (1994 - 1995) இவ் வெளியான "அரசனின் வருகை" ஒரு திருப்பமான சிறுகதை. உள்ளடக்கத்திலும், உருவத்திலும் புதிய எல்லைகளைத் தொட்ட படைப்பு.

ரஞ்சகுமாரும், உமாவரதராஜனும் அவர்களுக்கு முற்பட்ட காலத்து கோட்பாடு/சித்தாந்த வழித்தடங்களின் சிக்கல்களுக்கு ஆட்படாமல் தனித்துவமாக வெளிப்பட்டவர்கள்.

அவர்களது எல்லாப்படைப்புகளும் அவ்வாறான தன்மை கொண்டவை அல்ல. ரஞ்சகுமாரின் கணிசமான படைப்புக்கள் (கோசலை, காலம் உனக்கு ஒரு பாட்டெழுதும், கோளறு பதிகம், கபரக்கொய்யாக்கள்) உருவம் உள்ளடக்கத்தில் சிறப்பானவை.

உமா வரதராஜனின் "அரசனின் வருகை" மாத்திரம் முதன்மையானது. அவரது உள்மன யாத்திரை தொகுப்பு உருவத்தில் சிறப்படைந்ததே தவிர உள்ளடக்கத்தில் சோம்பலானது.

மு.பொன்னம்பலம் அவர்கள் எழுதிய உள்மன யாத்திரை தொடர்பான விமர்சனக் கட்டுரையின் சில பகுதிகளை இங்கு பார்ப்பது பொருத்தமானது.

அவரது கதைகளை எடுத்துக்கொண்டால் சில கதைகளில் இவர் சமூக யதார்த்தவாதியாகவும், சில கதைகளில் இவர் ஆழமற்ற சமூக யதார்த்தப் போலியாகவும் மாறி மாறி நிற்பதையே காணக் கூடியதாக உள்ளது.

அவரது சமூக யதார்த்தக் கதைகளாக "ஜெனி" "உயர" "முகங்கள்" "அப்பா இல்லாத ஊரில்" "எலியம்" போன்ற கதைகளைக் கொள்ளலாம். 'உயர' என்ற கதையில் தன் முகத்தைத் தொலைத்ததை உணர்கிறான் கதாநாயகன். மற்றவர்களும் தம் முகங்களைத் தொலைத்தவர்களே. ஆனால் மற்றவர்களுக்கு இது பற்றிய பிரக்ஞை இல்லை. இந்தப் பிரக்ஞை இருப்பதுதான் இக்கதைக் கதாநாயகனுக்கு கலையூட்டும் விடுதலை அம்சம். இக்கதையை சமூக யதார்த்தமாக்குவது இப்பண்பே. ஆனால் அதன் காரண



காரியங்களை உணர்ந்துதான் தொலைத்ததை மீளப்பெறுவதற்கான எதிர்த்தாக்குதல் எதுவும் இதில் இல்லை. அப்படிச் செய்யவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. இவ்வாறே 'ஜெனி' 'முகங்கள்' 'அசோக வனங்கள்' 'அப்பா இல்லாத ஊரில்' வரும் பாத்திரங்களும் தம் முனைப்புகளையும், வேட்கைகளையும் செயல்படுத்த முடியாத நிலையில், சமூக வரையறைகளின் கைதிகளாகி அவ்வறையறைகளுக்குள் அழுன்றபோதும் அவை தம் 'கைதி நிலையின்' பிரக்ஞை கொண்டவர்கள். இதுவே இப்பாத்திரங்களுக்கு சமூக யதார்த்தப் பண்பினை ஏற்றுவது.

அதே நேரத்தில் அவரது வேறு கதைகள் இவற்றிலிருந்து வேறுபட்டு, சமூக யதார்த்தப் போலிகளுக்கு உதாரணமாக நிற்கின்றன. அத்தகையவற்றுக்கு உதாரணமாக 'தொலைவில் தெரியும் ஒற்றை நட்சத்திரம்' 'சின்னஞ்சிறிய சிறகுகள்' 'மாலைசூட்டிகள்' போன்றவற்றைக் காட்டலாம். இதை விளக்குவதற்கு இக்கதைகளில் ஒன்றான 'மாலை சூட்டிகளை' நாம் ஆய்வுக்கெடுப்போம்.

அவ்வூர்ப்பக்கம் அரசாங்கத்துக்குச் சார்பான ஓர் அரசியல்வாதி ஊர்வலமாக விரவிருக்கிறார். அவரை மாலையிட்டு வரவேற்பதற்கான ஒழுங்குகள் அப்பகுதி வீடுகளில் நடைபெறுகின்றன. செங்கா என்ற கதாபாத்திரத்துக்கும் அவனது வீட்டார் அவ்வேலையை ஒப்படைக்கின்றனர். ஆனால் அவனோ அதை விரும்பவில்லை. இதை நேரடியாக எதிர்க்கத் துணிவற்று, நசிந்து நசிந்து ஒதுங்கும் அவன், கடைசியில் அந்த இக்கட்டான நிலையிலிருந்து தான் தப்புவதற்கு தனது தம்பியைக் கொண்டு மாலை சூட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து விட்டுத் தான் தப்பிவிடுகிறான். கடைசியில் கதை முடியும் போது, செங்காவின் ஏற்பாட்டினால் மாலை சூடிய தம்பியையும் சேர்த்துக் கேலிபண்ணும் பாணியில் 'மாலை சூட்டிகள்' என்று கதைக்குத் தலைப்பிடப்படுகிறது.

இக் கதையின் ஆசிரியர் எந்தவிதச் சமூகப் பிரக்ஞையுமற்ற ஓர் கையாலாகாதவனையே, தெரியாத்தனமாக வீரனாகக் காட்ட முயலும் ஒரு போலி யதார்த்த வேலையில் ஈடுபடுகிறார்.

தனக்குப் பிடிக்காத வேலையென்றால் ஒருவன் இந்தச் சமூகத்தைத் திருத்தக் கிளம்ப வேண்டியதில்லை. கடைசி தன் குடும்பத்தையாவது அந்தப் பிழையைச் செய்யாது பார்த்துக்கொள்ளும் அற்ப ஆளுமையாவது இருக்கவேண்டும். சரி, அதுதான் இல்லையென்றால், தன் தம்பியை இதற்குள் இழுத்து விடாது, 'தொலைவில் தெரியும் ஒற்றை நட்சத்திரத்தில்' வரும் பாத்திரம்போல் ஊரைவிட்டு எங்காவது ஓடியிருக்கலாம். இவை ஒன்றையும் செய்யமுடியாது தனது 'ஈகோ'வைக் (Ego) காப்பாற்றிக் கொள்வதற்காக தனது தம்பியை பலிக்கடாவாக்கி செங்கா, இறுதியில் ஏதோ புரட்சி செய்துவிட்ட வீரன் மாதிரி கதையில் தோற்றுவிக்கப்படுகிறான். அதை உறுதிப்படுத்துவது போலவே செங்காவின் செய்கைக்குப் பலிக்கடாவான அவன் தம்பியையும் சேர்த்துக் கதாநாயகன் கேலிபண்ணும் தொனி எழ, "மாலைசூட்டிகள்" என்று கதாசிரியர் கதைக்குப் பெயர் சூட்டியுள்ளார்!"

எனினும் அரசனின் வருகை மேற்படி தொகுப்பில் இருந்து வேறுபட்டது. உமாவரதராஜனின் படைப்பு எழுச்சியை காட்டி நின்றது.

ரஞ்சகுமாரின் கணிசமான படைப்புகள் வெற்றிகரமாக அமைந்தமைக்கான காரணத்தை அவரது 'மோக வாசல்' இரண்டாவது பதிப்புக்கு (1995ல்) பின்னுரை எழுதிய பேராசிரியர் சா.சிவத்தம்பி பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

"சிறுகதைத் துறையில் 1983இல் ஏற்பட்ட புதிய உணர்முறையைச் சித்தரித்த புதிய தலைமுறையினருள் ரஞ்சகுமாருக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

ஈழத்து தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் ரஞ்சகுமார் பெறும் முக்கியத்துவத்துக்கான காரணம், அவர் இலங்கையில் 1983 உடனும் அதன் பின்னும் வரும். அனுபவங்களுக்கு வழக்கில் உள்ள இலக்கிய அமைவு ஆகும். இந்த இலக்கிய அமைவினுள் ஒரு புதிய தலைமுறையின் உணர்முறைமை, நோக்கு முறைமை ஆகியன பளிச்சிட்டு நிற்கின்றன.

பலர் எழுதத் தொடங்குவதும், சிலர் பிரச்சார வாடைப்பட எழுதுவதுமான இளைஞர் தீவிரவாத எழுச்சியை ரஞ்சகுமார் இலக்கியமாக்கியுள்ள முறைமை அற்புதமானது. இங்கு "ஆக்கியுள்ள முறைமை நன்கு" என்று கூறுவதே பொருத்தமற்ற சொற்தேர்வு ஆகும். உண்மையில் அது "இளைஞர் தீவிரவாதம் ரஞ்சகுமார் என்ற இளம் எழுத்தாளனின் புலப்பதிவுகள் வழியாக வெளிப்படும் முறைமை "என்றே எழுதப்படல் வேண்டும்."

"ரஞ்சகுமாரின் சாதனைகள் இரண்டு என்று கருதுகின்றேன். ஒன்று இளைஞர் இயக்கங்களின் எழுச்சியை, ஆரம்பகால செயற்பாடுகளை சமூக உறவுகளின் உணர்ச்சிப் பின்புலத்தில் தருவது; மற்றது இவ்வாறு சமூக உறவுகளை உணர்ச்சிப் பின்புலத்திலே 'தரும்' பொழுது, அவற்றை நம் பண்பாட்டுக் குறியீடுகள் மூலம் அந்தக் குறியீடுகளினூடாக தெரியவைப்பது. திறமையுள்ள எழுத்தாளன் முதலாவதைச் செய்வது சுலபம். ஆனால் இரண்டாவதைச் சாதிப்பதற்கு அசாதாரண திறமை வேண்டும். அந்தப் பண்பாட்டினுள்ளே நின்று அதனைச் சித்தரித்தல் வேண்டும். இதற்கு அகப் - புறப்பார்வைச் செம்மை வேண்டும்." என்கிறார் பேராசிரியர்.

எமது சிறுகதை வரலாற்றுத் தடத்தில் தொடச்சியாக பல மாற்றங்கள் நடந்தாலும் அவற்றைப் பலர் செய்தாலும் ரஞ்சகுமார், உமாவரதராஜன் வருகை முக்கியமானது.

அந்த முக்கியத்துவத்துக்கு பிரதானமான காரணம் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவது போல எமது மண்வாசனை, எமது பண்பாட்டுச் சூழலில் எமது படைப்புகளை வெளிப்படுத்துவது.

ரஞ்சகுமார், உமாவரதராஜன் போன்றவர்களால் கொண்டு வரப்பட்ட மாற்றம் அவர்களால் மாத்திரம் ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் எழுதத் தொடங்குவதற்கு முன்னர் எழுத ஆரம்பித்த பலராலும் ஏற்படுத்தப்பட்டதுதான். எனினும் சடுதியான மாற்றத்தை ரஞ்சகுமார். உமாவரதராஜன் தான் ஏற்படுத்தினார்கள்.

1960களில், 1970களில், 1980 களில் எழுதத்தொடங்கிய பலர் மேற்குறித்த மாற்றங்களுக்கு உட்பட்டு எழுதிக் கொண்டு உள்ளனர். 1990களில் 2000களில் பல புதியவர்கள் எழுத ஆரம்பித்துள்ளனர்.

எனினும் இந்த மாற்றத்தின் முன்னோடிகளான ரஞ்சகுமாரும், உமாவரதராஜனும் இப்போது படைப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் புறந்தள்ளப்பட்டு இருப்பது ஏன் என்று தெரியவில்லை. ●

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"
நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்
NORTHERN TECHNOLOGY(PVT)LTD
NORTHERN TECHNOLOGY
- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

(சி-8539)
"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

39ஆம் மாத நினைவலைகளுடன்
கிட்டு பீரங்கிப்படை/மோட்டார் படையணி
மேஜர் சாரங்கன்/ அழகன்
(மயில்வாகனம் அரவிந்தன்)
யாழ் மாவட்டம்
தாயின் மடியில்
12 - 01 - 1976
தாயக மண்ணில்
29 - 08 - 2000



ஆயுதமே அழகென்று
வீரத்தின் சின்னமதை
விரும்பித் தரித்த அழகா!
சாகா வரம் உனக்கு
சங்கரன் தர மறுத்ததேனோ சாரங்கா......?
அவன் மறந்தாலும்..... இங்கு ஒரு
தமிழுலகம் உனை என்றும்
மரணமெனும் துயில் கலைத்து
காண்கிறது மாவீரனாய்!
தமிழினவிடிவே
கனவெனச் சுமந்த உனக்கு
சுபச்செய்தி வருகுது விரைவில் - நீயும்
கலங்காது உறங்கிடுவாய்!
அன்றைய தினம் வீர காவியமான அனைத்துப் போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.
(3894)
குடும்பத்தினர்

# சிறிலங்காவின் சாபக்கேடு: பண்டாரநாயக்காக்கள் - II

தற்போது உயிரோடு அரசியல் அரங்கில் இருக்கும் பண்டாரநாயக்காக்கள் அனுரா, சந்திரிகா இருவரும் தங்கள் தாய்வழி தந்தை இரண்டிலும் துரோகிகளின் வம்சாவளிகளின் வரிசையில் வந்தவர்களாகும்.

ஒருமுறை தனது வகை மாதிரி பொய் கூறும் பாணியில் 900 ஆண்டுகளாக



தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமாக அத்தனகல்லவிலும் பலாங்கொடையிலும் இருப்பதாக உரிமை கோரிய பிரமாண்டமான அளவிலான ஏக்கர்கள், இலங்கை சுதந்திர போராட்ட வீரர்களுக்கு எதிரான தமது சமர்களுக்கு வழங்கிய வழங்கல் ஆதரவுகளுக்கு கைமாறாக வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் வழங்கப்பட்டதாகும். இதற்கிடையே பண்டாரநாயக்க குடும்பத்துக்கு 900 வருட வரலாறு கிடையாது. 1500ம் ஆண்டளவில் தென்னிந்தியாவில் இருந்து நீலப்பெருமாள் வந்து சேர்ந்ததுடன்தான் அவர்களது வரலாறு ஆரம்பமாகிறது.

திருமதி.B. யின் தாயார் மஹாவலத்ன்ன குடும்ப வாரிசாகும். மஹாவலதன்ன என்பவர் ஒருதேசத்துரோகியாகும். துரோகி, மஹாவலதன்ன மொஹொத்தலா ஆளுநர் பிறவுண்றிக்கின் அடிவருடியாகும். ஊவாவில் பளட்டுபனவில் இருந்து மாட்டு வண்டிகள் மூலம் உப்பைக்கொண்டு செல்லவேண்டும். இதற்கென ''கொணாபத்த'' என்ற பெயரில் ஒரு கால்நடைப்பிரிவு இருந்தது. இந்தப்பிரிவின் தலைவராக மஹாவலதன்னவை ஆளுநர் பிறவுண்றிக் நியமித்தார்.

பிரித்தானிய போர் வீரர்களுக்கு மாட்டிறைச்சி பெருமளவில் தேவைப்பட்டது. இறைச்சிக்கு அடிப்பதற்கென தங்கள் கால்நடைகளை சிங்களவர்கள் மறுத்தார்கள். சப்பிரகமுவில் இருந்து மாடுகளை வழங்க மஹாவலதன்ன பொறுப்பேற்றார்.

சப்பிரகமுவில் நிகழ்ந்த பிரித்தானிய ஆதரவு பிரச்சாரத்தில் இந்த மஹாவலதன்ன முக்கிய பங்கை வகித்தார்.

பிரித்தானியரை விரட்ட சிங்கள பிரதானிகள் போராடிக்கொண்டிருந்த ஊவா நோக்கி, ஒரு இராணுவ டிவிசனை நகர்த்துவதற்கு காலியில் இருந்த கலெக்டருடன் சேர்ந்து இந்த மஹாவலதன்ன உதவினார்.

பட்டுகெதரவில் ஒரு வழங்கல் களஞ்சியம் இவரால் அமைக்கப்பட்டு களுத்துறையிலிருந்து வழங்கல் பொருட்கள் அங்கே நகர்த்தப்பட்டன.

இந்த மஹாவலதன்ன நாட்டுக்குச் செய்த துரோகங்களுக்குக் கைமாறாக பலாங்கொடையில் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட பெருமளவிலான ஏக்கர்கள் அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மத்தியவங்கியின் முன்னாள் ஆளுநராக கலாநிதி H.N.S கருணாதிலக அண்மையில் எழுதிய நூலில் இலங்கை கண்ட மாபெரும் துரோகி மஹாவலதன்னதான் என்று குறிப்பிட்டிருக்கிறார். (இதைமறுக்கும் சிலர் அந்த புகழ் JR இன் மூதாதையரான தம்பி முதியான் சேக்கு உரியதென்று வாதிடுகிறார்கள். அது வேறு கதை)

சந்திரிகாவின் தந்தை வழி மூதாதையரும் ஒன்றும் குறைந்தவர்களில்லை. அவர்களுடைய நேரடி மூதாதையராக தென்னிந்தியாவிலிருந்து 16ஆம் நூற்றாண்டின் முன் பகுதிகளில் இங்கு வந்த நீலப்பெருமாள் என்ற தமிழரே இருக்கிறார். நவகமுக தேவாலயத்தில் அவர் கப்புறாள (பூசாரி) ஆக ஆனார். பண்டாரநாயக்காக்களின் ஆரம்பகால குடும்பப்பெயராக களுகப்புகே (கறுத்தபூசாரி) என்பதே இருந்தது. பின்னர் அவர்கள் பண்டாரநாயக்கா என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார்கள். இந்தப் பெயர் தேவாலய முதல்வர்கள் வகித்த பதவியாகவே இருந்தது.

1760ம் ஆண்டிலே முதலியார்களாக பதவி வகித்தவர்கள் டச்சுக்காரருக்கு எதிராக கண்டி மன்னனுடன் இணைந்து கொண்டபோது பண்டாரநாயக்காக்கள் முன்னணிக்கு வந்தார்கள்.

டொண் பிரான்ஸ்சிஸ்கோ டயஸ் விஜயதுங்க பண்டாரநாயக்கா, டச்சுக்காரருக்கு ஊழியம் செய்ய தானாக முன்வந்ததையடுத்து நான்கு பற்றுகளின் முதலியாராக அவர் ஆக்கப்பட்டார்.



டொண் பிரான்ஸ்சிஸ்கோவின் 5வது மகனான டானியல் சியன கோறளையும் முதலியாராக ஆனார். டானியலின் மகள் டொண் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா சியன கோறளையின் முதலியாராக ஆனார். இவர் தனது எசமானர்களுக்கு உச்சரிக்க இலகுவாக பண்டாரநாயக்கா என்று இருந்த பெயரை பண்டாரநாயக்கே என்று மாற்றிக்கொண்டார்.

அப்போதிலிருந்து குடும்பப் பெயர் பண்டாரநாயக்கே ஆகியது.

இந்தப் பண்டார நாயக்கேக்குத் தான் சியன கோறளையின் மக்களிடமிருந்து பிரித்தானியரால் பறிக்கப்பட்ட 180 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. 1818 இல் கெப்பிட்டிபொல நடத்திய கிளர்ச்சியின்போது பிரித்தானிய படை வரிசைகளுக்கு வழங்கல்களை கொண்டு செல்ல மாட்டு வண்டில்களை வழங்கியமைக்கு கைமாறாகவே இந்த நிலங்கள்



வழங்கப்பட்டன.

இந்த பண்டாரநாயக்கேயின் பேரனான சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கே, தான் ஒரு ஆங்கிலேய கனவான் என்ற மாயையினால் பீடிக்கப்பட்டிருந்தார். இவர் தான் S.W.R.D யின் தந்தை. இவர் ஒரு கிறிஸ்தவராக பிறந்தார். கிறிஸ்தவராகவே வளர்க்கப்பட்டார். இவர் மரணப்படுக்கையில் இருந்தபோது இறுதிக்கிரியைகளுக்கென, கிறிஸ்தவ குரு ஒருவரை அழைத்துக் கொண்டவர். ஆனால் அவர் அரசியலில் இருந்த காலங்களில் அவர் ஒரு பௌத்தராக ஆனார். பிரதமராவதற்கான முக்கிய படிக்கட்டாக அவர் அதை நினைத்தார். அவரது பதவிக்காலத்தில் அவர் கைக்கொண்ட கொள்கைகளின் பயனாக நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக பல இனக்கலவரங்கள், அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டது முதலியவை நிகழ்ந்தன.

அவரது விதவையான சிறிமாவோக்கு என்ன நடக்கிறது என்று தெரியாவிட்டாலும் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் உதவியுடன் செயற்திறனான ஆட்சியாளர் என்ற பெயரைப் பெற்றார். தனது இடதுசாரி அமைச்சர்களை திருப்தி செய்ய கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தேசியமயப்படுத்தினார். பாடசாலைகளில் வரலாறு கற்பிக்கப்படுவதை தடைசெய்தார். இதன்மூலம் உலகிலேயே, தமது நாட்டின் வரலாற்றை அறியமுடியாது தடுக்கப்பட்ட பிள்ளைகளாக எமது பிள்ளைகள் ஆக்கப்பட்டனர். பிள்ளைகளை படிக்கவென வெளிநாடு அனுப்புவது தடைசெய்யப்பட்டது. ஆனால் அவரது மூன்று பிள்ளைகளுக்கும் இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டது.

U.N.P. ஆட்சி மீது நாட்டு மக்கள் வெறுப்புற்றிருந்தவேளை சந்திரிகா ஆட்சிக்கு வந்தார். நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கப் போவதாகவும், சுயாதீன ஊடகத்துறையை பெற்றுத்தரப்போவதாகவும் வாக்களித்து பதவிக்கு வந்த சந்திரிகா, சிறைப்பட்டிருந்த ஊடகத்துறையையும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி பதவியையும் தாம் விரும்புபவற்றைச் செய்யப் பயன்படுத்தினார்.

சனாதிபதி மாளிகையில் குடியேறாமல் அலரிமாளிகையில் குடியேறினார். அவரது பாதுகாப்புக்கென டுப்ளி கேஷன் வீதி, காலி வீதி ஆகிய முக்கிய வீதிகள் மூடப்பட்டன. பொதுமக்களுக்கு இதனால் ஏற்பட்ட அசௌகரியங்கள் பற்றி அவர் எந்தக் கவலையும் படவில்லை.

அனுருத்த ரத்வத்தையை காசில் வீதி சந்தியில் வைத்து படுகொலை செய்ய புலிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்று, ரத்வத்த உயிர் தப்பிக்கொண்டார். வேலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த பலர் கொல்லப்பட்டனர். அன்று மாலை கொல்லப்பட்ட அலுவலக ஊழியர்களின் துயருற்ற குடும்பங்களுக்கு ஆறுதலாக அனுதாப செய்தியைத்தானும் விடுக்காத சந்திரிகா, அனுருத்த தப்பியதை கொண்டாட விடிய விடிய "பைலா" விருந்து ஒன்றை நடத்தினார்.

எமது தேசிய விமான நிறுவனமான எயா லங்காவை, வெளிநாட்டவர்களுக்குப் பிச்சைக்காசுக்கு விற்றார். (தனது கலாச்சார ரீதியான தாயகமான) பிரான்சிலிருந்து கொள்வனவு செய்தார். ஓய்வுபெற்ற பிரதம நீதியரசரினதும் வேறு பலரினதும் ஆலோசனைகளை மீறி, பல



சிவில் வழக்குகளை எதிர்கொண்டிருந்த சரத் N சில்வாவை பிரதம நீதியரசராக நியமித்தார். (முன்னெப்போதும் இல்லாத விதத்தில்) கடற்படைத் தளபதிக்கு மூன்று வருடகால பதவி நீடிப்பைக் கொடுத்தார். ஜெனரல் பலகல்லவின் பதவிக் காலத்தையும் ஒரு வருடம் நீடித்தார். இந்த இரண்டு நீடிப்புகளும், நல்ல சேவை வரலாறுகளைக் கொண்ட பல அதிகாரிகளின் எதிர்காலத்தை நாசமாக்கி விட்டது.

தான் தனது இலக்குகளை எட்டுவதில் மற்றவர்களுக்கு ஏற்படும் தீமைகள் பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

சந்திரிகா ஒரு மகா பொய்யர் என்று உலகளாவிய ரீதியாகப் பெயரெடுத்துள்ளார். அவர் அண்மைக்காலத்தில் சொன்ன ஒரு பெரும் பொய்யாக தனது தந்தையும், கணவரும் ரணிலின் நண்பர் ஒருவரால் கொல்லப்பட்டதாகக் கூறியது இருக்கிறது.

"நம்ப முடியாத அளவு சதைப் பிண்டமான" அனுராவுக்கோ 'குடி'ப்பிரச்சினை. அவர் பகிரங்கக் கூற்றுக்களால் கோமாளியாகத் தன்னை ஆக்கிக்கொண்டுள்ளார். ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குத் தாவும் அனுரா, தன்னோடு கூடவே துர்ப்பேறுகளை அக் கட்சிகளுக்குக்கொண்டு செல்கிறார். இப்பொழுது அவர் ஒரு JVP காரனைப்போல் தோன்றுகிறார். அதுவும் "ஒருவகையில்" ஆறுதல் தருவதாகத்தான் இருக்கிறது.

அனுர(ANURA) என்ற வார்த்தைக்கு ஒக்ஸ்போட் அல்லது சேர்பர்ஸ் அகராதிகளிலே "வால் இல்லாத ஈருடகப் பிராணி - தவளை" என்றுதான் அர்த்தம் போட்டிருக்கிறது. அவருடைய தந்தையான பண்டாரநாயக்கா ஒரு கல்விமான். தனது மகனுக்கு இப்பெயரைச் சூட்ட முடிவு செய்தபோது இந்த அர்த்தத்தை அவர் அறிந்திருக்கவில்லை என்று கூறமுடியாது.

ஆங்கிலத்தில் :- பிறத்தியான் (த.சண்டே லீடர்)
தமிழில் : வின்சென்ற் புளோரன்ஸ்

திருடாதே, தொழிலில் வெற்றி பெறுவதற்கு வழியல்ல அது, ஏமாற்று. - ஆம்ப்ரோஸ் பியர்ஸ்

# ஊடகங்கள் விடும் தவறுகள் நேரடியாக மக்களைப் பாதிக்கும்

**ஊடகங்கள்** பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்ற தவறும்போது, அந்த ஊடகம் சார்ந்த மக்கள் குழப்பத்திற்குள்ளாக வேண்டிய நிலை உருவாகும். இது மிகவும் சாதாரணமாக பல இடங்களில் சரியானதென ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். இருந்தும் செய்திகளை முந்தித் தெரியப்படுத்துவது, பரபரப்பாக தங்களது ஊடகம் பற்றி பேசவேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றமையினாலும் ஏனைய செய்தி நிறுவனங்களை நம்பி என்ன விளைவு ஏற்படுகின்றது? செய்திகள் பொய்யானவை என சொல்ல வேண்டியதாக நிலமை மாறுகின்றது. பொறுப்புணர்வுடன் நடக்கவேண்டிய ஊடகங்கள் விடும் தவறு நேரடியாக மக்களைத் தாக்கியது. இதனை நாங்கள் 02-11-2003 அன்று நேரடியாக அனுபவித்தோம்.

இன்றைய அரசியல் சூழ்நிலை மிகவும் நிதானமாக நோக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், விடுதலைப்புலிகள் எழுத்து மூலமாக முதல் தடவையாக இடைக் கால நிர்வாகம் ஒன்றிற்கான திட்ட வரைபு ஒன்றினை கொடுத்திருக்கும் நிலையில்.... அது பற்றி சிறிலங்காவின் அமைச்சர்கள், வவுனியாவில் சமாதான செயலகத்தின் விடுதலைப்புலிகளின் பணிப்பாளர் புலித்தேவனு டன் பேசினார்கள்..... பிரதமரின் விசேட பணிப்பின் பேரில் சென்று இந்த பேச்சு நடைபெற்றதென சிறுபிள்ளைத்தனமாக பொறுப்பற்று பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன..... இதில் உள்நாட்டு , வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் முந்திச் செய்தி தரும் முண்டியடிப்பைத் தவிர வேறு எதுவும் கிடையாது. அதன் காரணமாக தமது செய்தியாளர்களிற்கு தகவல் தரும் வல்லவர்களுடன் தொடர்பில்லை அப்படிதொடர்பை வைத்திருக்கும் வலுவும் இல்லை. என முடிவெடுத்து ஊடகங்களை நம்பி ஊடகங்கள் மண் கவ்வும் நிலைக்குத் தள்ளப்பட்டதாகவே சொல்ல வேண்டியுள்ளது.

முந்திச் செய்தி சொல்லும் ஊடகங்களின் தவறான உண்மையில்லாத செய்திகளினால் மக்களிற்கும் குழப்பம் ஏற்படுகின்றது. சம்மந்தப்பட்ட செய்தியுடன் தொடர்புடையவர்களிடமிருந்தும் குழப்பங்கள், சிக்கல்கள் ஏற்படுகின்றன...

இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்ட வரைபை உள்ளடக்கிய பேச்சுக்களை நோர்வேயின் நடுநிலமையுடன் தான் விடுதலைப்புலிகள் பேசுவார்கள் என்பது சாதாரண விளக்கமுடைய ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளக் கூடியது. இதனை ஊடகங்கள் புரிந்து கொள்ளாது செய்தியாக்கியது ஊடகங்களிற்கு தலைகுனிவாகவே அமைந்து விட்டது. சிறிய செய்திகளில் தவறுகள் ஏற்படுவதை முட்டையில் மயிர் பிடுங்குவது போல குற்றம் காண்பதல்ல இதை எழுதுவதன் நோக்கம். இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்ட வரைபை உலகில் சில நாடுகளில் வைத்து ஆராய்ந்து இணைக்க வேண்டியதை இணைத்து தவிர்க்க வேண்டியதை தவிர்த்து பொறுப்புடன் உருவாக்கப்பட்டது. இதனை துளியெனவும் கவனத்திலெடுக்காமல் பொறுப்பற்று நடப்பதைச் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

வரைபை நோர்வேயூடாக அரசிடம் கையளித்த பின்னர் விடுதலைப்புலிகள் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார்கள்.... இதன் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களை கேட்டுக்கொண்ட ஒரு விடயத்தை மீளவும் பார்ப்பது கூட பொருத்தமுடையதாகவே தெரிகின்றது. நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலைத்து நிரந்தர தீர்வொன்று ஏற்பட வேண்டுமெனின் அதற்கான செயற்பாடுகளில் ஊடகங்களும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென கேட்டார். ஊடகங்களிற்கு அதற்கான கடமை நிறையவே உள்ளதென வலியுறுத்தினார். அது உண்மையானது. அதனை ஏன் ஊடகங்கள் கவனத்தில் எடுக்கவில்லை..... கடமை தவறிவிட்டார்களே..... அமைதி, சமாதானம், நிரந்தரத் தீர்வு என்பனவற்றை ஊடகங்களாலேயே குழப்பிவிடுவார்கள் என நோக்கியதால் தானோ என்னவோ அரசியல் துறைப் பொறுப்பாளர் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகங்களின் கடமையினை நினைவூட்டியுள்ளார்.

ஊடகங்கள் கடமை தவறினார்கள், ஆகவே உடனடியாகவே ஊடகங்களில் வெளியான செய்தி பொய்யானது, இவ்வாறான செய்திகளை வெளியிட்டதை கண்டிக்கின்றோம் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினர் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட்டுள்ளனர். இனியாவது இது போன்ற பொறுப்பற்ற வேலைகளை ஊடகங்களே செய்யாதீர்கள் என்பதே ஆகும்.

அமைச்சர்கள் வவுனியாவிற்கு வந்தது பற்றி பார்ப்போமானால் 02-11-2003 வவுனியாவிற்கு வந்தவர்கள் 03-11-2003 அன்று மகாறம்பைக்குளத்தில் வீதியொன்று (சிறுபுனரமைப்பு செய்யப்பட்டது) திறந்து வைக்கப்பட்டது, காமினி மகாவித்தியாலயத்தில் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்விலும் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஈரற் பெரிய குளத்தில் சிங்கள மக்களைச் சந்தித்து சில அபிவிருத்திப் பணிகள் பற்றியும் பேசப்பட்டன. அமைச்சர்களின் வருகை பற்றி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தாம் தான் அழைத்தோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா கிளையைச் சேர்ந்த இருவர் போட்டி போட்டு விளம்பரம் செய்தார்கள்.



தேர்தலில் வேட்பாளராக வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட மகேஸ் தவச்செல்வன், முந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த புஞ்சிகாவே ஆகியோருக்கிடையில் விளம்பரப்போட்டி. அலங்காரங்கள் செய்து அவரவர் பகுதிக்கு அழைப்பதற்கு போட்டி என என்னென்னவோ எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்க.... ஊடகங்கள் மொட்டந்தலைக்கும் முழங்காலிற்கும் முடிச்சுப் போட்டன.

காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் ஒரு அரச பணிக்கே விழாக்களிற்கு செய்திருக்கும் அலங்காரம் போல தோரணம், மாவிலை கட்டி அலங்கரித்து காலை 8.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணி வரை மக்கள் வீதியோரம் காத்துக்கிடந்தார்கள்.

அரச செயலக பணியாளர்களை வைத்து காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் ஒரு சாதாரண விடயத்தை அமைச்சர்களை அழைத்து விழா எடுப்பது ஒரு மக்களின் பிரதிநிதி என்று சொல்லப்படுபவரை கௌரவக் குறைவிற்கு உள்ளாக்குவதும், அவர் அப்படி உள்ளாகுவதையுமே எடுத்துக்காட்டுகின்றது. அமைச்சர்களால் இது தான் முடியுமென அவர்கள் எங்கோ ஒரு சிறு வட்டத்துள் நிற்க அதனைக் கவனித்து வெளிப்படுத்த இயலாதவர்கள் அமைச்சர்களின் தொண்டர்கள் செய்வது போல... விளம்பரப்படுத்தும் அரும்பணியைக் கூட பெரும் பணியாக செய்து முடித்துள்ளனர்.

• ஊடகங்கள் இது போன்ற பெரும் தவறை கைவிட வேண்டும். எமது மண்ணில் போராளிகளும், பொதுமக்களுமாக ஏறத்தாள ஒரு லட்சம் உயிர்களை அர்ப்பணித்துள்ளனர். அந்த உயிர்த் தியாகத்தை மதிக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு நிறையவே உள்ளன. எங்கள் தவறுகளை நாம் நியாயப்படுத்துவோமாக இருந்தால் எங்கள் தலையில் நாமே மண் போடுகின்றோம் என்பதையும் ஒரு புறம் ஆழமாகப் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அற்ப சொற்ப சலுகைகளிற்காக நாம் பெரும் தியாகங்களைச் செய்யவில்லை. விலை போகும் படியாக குழப்பங்களை ஏற்படுத்தும் எவற்றிற்கும் நாம் துணையாக இருக்கக் கூடாது.

இன்று எமது மண்ணை பல ஊடகங்கள் ஊடறுத்து வருகின்றன. அவை செய்யும் ஏராளமான செயல்கள் எமது இனத்தின் அடையாளங்களையே அழிப்பவையாகவுள்ளன. மொழி, கலாச்சாரம், பண்பாடு பற்றி எள்ளளவும் கவலை கொள்ளாது மேதாவித்தனத்துடன் எம்மைக் கேட்காமலே எமது இல்லங்களிற்குள் புகுந்து விடுகின்றன. இதனைச் சரியான முறையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களின் மீதான அக்கறை, பாதுகாப்பு என வந்தவர்களே என்ன செய்கின்றனர் என்பது எமக்குத் தெரியும். அதுபோலவே திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஊடகங்களும்.

ஈழவிடுதலைப் போராட்டம் நீண்ட தமிழரின் தியாகம் கொண்டது.மோசமானவர்கள் எவராவது எதையும் சொல்லிவிட்டுப் போகட்டும் என நாமிருக்க முடியாது.

கொழும்பில் நடைபெற்ற சிங்கள - தமிழ் கலைக்கூடலை பொங்கு தமிழ் எனச் சொன்ன ஊடகங்கள், ஏன் தமிழினத்தையே பயங்கரவாதிகள் எனச் சொன்னவர்கள், சொல்லிக் கொண்டிருப்பவர்கள். அதற்குத் துணைபோகும் ஊடகங்கள் பற்றி நாம் அவதானமாக இருப்போம். பொய்யான தகவலை வெளியிடுவோரினை தமிழரின் அரசியல் நலன் சார்ந்து தமிழினமே ஒன்று சேர்ந்து கண்டிக்க வேண்டும்.

கனகரவி

# சமுதாய வாழ்வில் தனி மனிதனின் பங்கு



**மனிதன்** ஒரு சமூகப் பிராணி. இன்றைய சூழலில் அவனால் தனித்து வாழ முடியாது. ஏதோ ஒரு தேவையின் நிமிர்த்தமோ... அல்லது உறவின் காரணமாகவோ அவன் சமுதாய விருட்சத்துள், தன்னை முடக்கிக்கொள்ள வேண்டியவனாகின்றான். காலத்திற்குக் காலம் மனித சமுதாயம் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்ட போதிலும், அவற்றின் அறுவடைகள் நீண்ட பொக்கிஷங்களாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறந்த அம்சங்களாக, அவற்றின் முடிச்சின் உயர்ச்சிகளாக, ஆணி வேர்களாக திகழ்பவை மொழி,பண்பாடு, சமயம், கலைகள்... என்பவையாகும். இவற்றினடிப்படையில் வளர்ந்து வரும் சமுதாயத்தில், தனி மனித சுதந்திரம் எத்தகையது...? சமுதாயப் பொறுப்புக்கள் அம்மனிதனிடம் எவ்வாறு துலங்குகின்றன...? போன்ற வினாக்களுக்கு நாம் விடையளிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

## சமுதாயம் வேண்டி நிற்கும் மனிதன்.

சமுதாயம் என்பது, ஒரு நாட்டின் முதுகெலும்பாகின்றது பொருளாதார ரீதியிலும், சமூகவியல் ரீதியிலும், மனவியல் ரீதியிலும் அதன் வளர்ச்சிப் பரிமானங்கள் எண்ணிலடங்காதவை. ஒரு நாடு அபிவிருத்தியில் துரிதகதி அடையவேண்டுமாயின் அங்குள்ள சமூக மக்களுக்கிடையே புரிந்துணர்வுடன் கூடிய சிறந்த தொடர்பாடல்கள் அவசியமாகின்றன. ஒருவரைப் புரிந்துகொள்ளவும், அதன் நிமித்தம் உதவிகளை மேற்கொள்ளவும், மேலாக உயரிய பெறுமானங்களைப் பெற்று, ஒரு நிலையான அபிவிருத்தியைப் பெறுவதுமான, இலட்சிய நோக்குடையதாக சமுதாயம் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய சமுதாயத்தின் கூட்டு முயற்சியில், மனிதனது பங்கு எத்தகைய தாக்கவலுவை ஏற்படுத்துகின்றது என்பது இன்று எல்லோர் மனதிலும் எழுந்து நிற்கும் கேள்வியா கின்றது. சமுதாயம் ஒன்று சிறப்படைந்து வருவதற்கும், சீரழிந்து போவதற்கும் அடிப்படையாகத் திகழும் ஏதுவாக 'மனிதன்.' திகழ்கின்றான். தனிமனிதர்களது சேவையை அல்லது அவர்தம் அர்ப்பணிப்பை அடிப்படையாகக்கொண்டு. நற்சமுதாயம் துளிர்விட்டுப் பிரகாசிக்கின்றது. தூரநோக்குச் சிந்தனையில்லாத மனிதர்களால், நற்சமுதாயத்தை உருவாக்க முடியாது. மாறாக, அவற்றைச் சிதைக்கவே முடியும்.

தூய்மையான உள்ளத்துடனும், பிறர் நலம் கருதிய சிந்தனையுடனும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து, வாழ்வில் ஒளியேற்றலை நோக்காக் கொண்டு, சமுதாய மேம்பாட்டை எட்ட வேண்டிய தேவை, ஒவ்வொரு மனிதனதும் இன்றியமையாத கடப்பாடகின்றது.

## ஆக்க சிந்தனை

மனிதர்கள் பொதுவாக, பல்வேறு தேவைகளின் நிமிர்த்தம் தம்மை செப்பனிட்டுக் கொள்கின்றார்கள். அதன்பேறாக, வாழ்வை சௌகரியங்களாக்கி, புதுக்கற்பனையுலகில் வாழத் தலைப்படுகின்றனர். அந்தக் கணத்தில் அவன் அனுபவித்தவை புதிய பரிமானம் பெற்று, புதிய உந்தலின் விளைவாக, பிறர் போசிக்கத்தக்கதாக, சிறந்த படைப்புக்களாக வெளிவிடப்படுகின்றன. புதியது புனைவது ஆக்கத்திறன் எனப்படும். இவை சமுதாயக் கூட்டொப்பந்தத்துடன் மேற்கொள்வது மிகப் பயனுடையதொன்றாகும். அத்தகைய அரிய முயற்சிகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் சமுதாயம் மேலும் வளம் பெறுகின்றது. அதனடிப்படையில் நாடு - நாட்டின் முற்போக்கான செயற்பாடுகள் அனைத்தும் நவீன உலகத்தரங்களுக்கேற்ப விஸ்தரிக்கப்பட்டு செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே. எந்தவொரு இலட்சிய சமுதாயத்தினதும் முன்னேற்றப் பாதைக்கு தனிமனிதனது பங்கு மிக இன்றியமையாததொன்றாகும் அனைவரும் முயற்சியுடன் அவற்றை வரவேற்போம்.

வ.சசிகுமார்

# தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 2003ம் ஆண்டு மாவீரர் நாள் உரை

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலையிற் சென்ற ஆண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் எமது இயக்கத்தை ஓரம்கட்டிவிட்டு, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய மாநாடு ஒன்று வாஷிங்டனிற் கூட்டப்பட்டது. பேச்சுவார்த் தையில் முக்கிய தரப்பாகவும் சமபங்காளி என்ற தகைமையுடனும் பங்கு பற்றி வந்த எமது இயக்கம் இவ்விதம் சிறுமைப் படுத்தப்பட்டமை எமக்கு ஏமாற்றத்தையும் கவலை யையும் தந்தது. இப்படி யான நிலைமைகள் காரண மாகவே பேச்சுக்களைத் தற்காலிகமாக இடை



நிறுத்தி வைத்துச் சமாதான வழிமுறையின் பல்வேறு பரிமாணங்களையும் மறுபரிசீலனை செய்ய நாம் தீர்மானித்தோம்.

## மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கு உடனடிப் பரிகாரம் தேவை

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பது என்பது உடனடியாக, குறுகிய காலத்திற் சாத்தியப்படப் போவதில்லை. அது நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் எமது மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அவசரமானவை. நீண்ட காலத்திற்குப் பின்போட முடியாதவை. அத்தியாவசியமான மனிதாபிமானத் தேவைகள் ஒரு புறமும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற பிரச்சினைகள் மறுபுறமுமாக எமது மக்கள் எதிர்கொள்ளும் சிக்கலான, பாரிய இடர்களுக்கு உடனடியாகப் பரிகாரம் தேவை. இதுபற்றி ஆழமாகப் பரிசீலனை செய்து பார்த்தபொழுதுதான் வடகிழக்கில் ஓர் இடைக்கால அதிகார சபை நிறுவப்படுவது அவசியமென உணர்ந்தோம். போரினாற் பேரழிவுகளுக்கு இலக்காகி, ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத் தலுக்கும் ஆளாகி நிற்கும் தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை தோற்றுவிக்கவும் இடம்பெயர்ந்தோரைக் குடி யேற்றவும் புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளைச் செம்மையாகவும் துரிதமாகவும் நிறைவேற்றக் கூடிய செயற்றிறன்மிக்கதாக இந்த இடைக்கால ஆட்சியதிகார சபை அமையவேண்டுமெனக் கருதினோம். இதன் அடிப்படையிற் கணிசமான அதிகாரங்களைக் கொண்டதான ஓர் இடைக்கால அரசியல் நிர்வாக ஆட்சியமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்கான ஒரு திட்டவரைவை முன் வைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தோம். ஓர் உருப்படியான திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு நாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தோம். கடந்த மே மாதம் 15ம் திகதி நோர்வே வெளிவிவ கார அமைச்சர் திரு. பீட்டர்சன் அவர்களை நான் சந்தித்தபோதும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினேன். இருபது ஆண்டு காலமாக நீடித்த போரினால் அழிந்து போன எமது தேசத்தையும் எமது மக்களின் சிதைந்து போன வாழ்க்கையையும் மீளக் கட்டியமைப்பதற்கு இத்த கையதொரு ஆட்சியமைப்புத் தேவையென்பதையும் விளக்கினேன்.

## அரசின் இடைக்கால திட்டவரைவு போதிய அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை

எமது கோரிக்கைக்கு இணங்க, இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக, ஒன்றன் பின் ஒன்றாக, இரு திட்ட வரைவு களை அரசாங்கம் எமக்கு அனுப்பி வைத்தது. இத் திட்ட வரைவுகளிற் குறிப்பிடப்பட்ட நிர்வாகசபை, நாம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக அமையவில்லை. அத்துடன் எமது இயக்கத் தின் பங்கும் தெளிவானதாக வரையறுக்கப்படவில்லை. மிகவும் குறுகிய அதிகாரங்களுடன் அபிவிருத்தி வேலைகளை மட்டும் கையாளும் ஒரு நிர்வாக அமைப்பையே இவ் வரைவுகள் பரிந்துரைத்தன. இதனால் இத் திட்ட வரைவுகளை ஏற்க முடியாதென நாம் நிராகரித்தோம். இதனையடுத்து, இடைக் கால நிர்வாகஞ் சம்பந்தமாகப் புதிய யோசனைகள் அடங்கிய மூன்றாவது வரைவு ஒன்றை அரசாங்கம் எமது பரிசீலனைக்கு அனுப்பிவைத்தது. இத் திட்டம் எமக்குத் திருப்தி அளிக்காத போதும் நாம் அதனை நிராகரித்துவிடவில்லை.

## நடைமுறைச் சாத்தியமான எமது திட்டவரைபை முன்வைத்தோம்

எமது இயக்கம் எதிர்பார்த்தது போலவும் எமது மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையிலும் ஒரு திட்டவட்டமான இடைக்கால ஆட்சியமைப்பை முன் வைக்க அரசாங்கம் தயங்குகின்றது என்பது எமக்குத் தெளி வாகியது. ஆயினும், ரணிலின் ஆட்சி பீடம் ஏதோ புதியபுதிய யோசனைகளை முன்வைக்க விடுதலைப் புலிகள் இயக்கம் அவற்றைத் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது போன்ற ஒரு தப்பபிப்பிராயம் எழக்கூடுமென நினைத்தோம். ஆகவேதான், அரசாங்கத்தின் இறுதி வரைவை எடுத்த எடுப்பில் நிராகரிக் காமல், அதற்கு மாற்றுத் திட்டமாக எமது யோசனைகள் அடங்கிய ஒரு திண்ணியமான, உருப்படியான இடைக்கால ஆட்சியதிகாரக் கட்டமைப்பை வரைந்து, அதனை அரசாங் கத்திடம் கையளிக்க நாம் முடிவெடுத்தோம். எமது திட்ட வரைவைத் தயாரிக்கும் விடயத்தில் நாம் அவசரப்படவில்லை. கால அவகாசம் ஏற்பட்டாலும் நாம் முதன்முதலாக எழுத்தில் வரைந்து கொடுக்கும் திட்டம், ஒரு இடைக்கால ஒழுங்காக அமைந்தபோதும் அது செம்மையானதாக, புதுமையானதாக, நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கவேண்டுமென விரும்பினோம். அத்தோடு, பல்வேறு பரிமா ணங்களைக் கொண்ட எமது மக்களின் சிக்கலான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடிக்கொடுக்கும் வழிமுறைகளைக் கொண்டதாகவும் அது அமையவேண்டும் எனவும் எண்ணினோம். ஆகவேதான், எமது திட்ட வரைவைப் பரந்த அளவில், பல்வேறு மட்டங்களிற் பல்வேறு தரப்பினரதும் ஆலோசனையைப் பெற்றுத் தயாரித்தோம். பரந்துபட்ட ரீதியில் தமிழீழ மக்களையும் வெளிநாடுகளில் வதியும் எமது சட்ட, யாப்பு அறிஞர்களையும் சர்வதேச நிபுணர்களையும் கலந்தாலோசித்தே இத் திட்ட வரைவு உருவாக்கப்பட்டது.

## எமது இடைக்கால யோசனைக்கு எழுந்த ஆதரவும் எதிர்ப்பும்

அரசாங்கத்திடம் நாம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் பற்றி நான் இங்கு விபரமாக விளக்கிக் கூறுவது அவசியமில்லை. இத் திட்டவரைவு ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக எல்லோரதும் பார்வைக்கும் ஆய்வுக்குமாக வெளியிடப்பட்டுள்ளது. எமது திட்டயோசனைகள் பலரகமான சர்ச்சையையும் குழப்பத்தையும் கிளப்பியபோதும் சமாதானத் தீர்வை நோக்கி நாம் எடுத்த முயற்சியை உலக நாடுகள் பல வரவேற்றுள்ளன. எமது யோசனைகளை விபரமாகவும் தெளிவாகவும் முதற் தடவையாக எழுத்தில் முன்வைத்ததையும் சில வெளிநாடுகள் வரவேற்றுள்ளன. ரணிலின் அரசு எமது திட்ட வரைவை நிராகரிக்காது, அதன் அடிப்படையில் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்தது. அதே வேளை, எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதேபோன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சிகளின் சார்பாகத் திரு.கதிர் காமர் விடுத்த நீண்ட அறிக் கையில் எமது திட்ட வரை வைப் படுமோசமாக விமர்ச் சித்து, தனியரசு உருவாக் கத்திற்கான அம்சங்கள் அதிற் பொதிந்து இருப்பதால் இலங் கையின் இறைமைக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரித்தார்.

எமக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்த விடயம் என்னவென்றால் எமது இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு வெளியான சில தினங்களிலேயே சந்திரிகா அம்மையார் திடீரென ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியதி காரத்தின் கீழிருந்த மூன்று முக்கிய அமைச்சுகளைப் பறித்தெடுத்தமையாகும். அவர் என்னதான் காரணங்களைக் கற்பித்தாலும் எமது திட்ட வரைவின் உடனடி எதிர்வினையாகவே இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்தார் என்பது இன்று உலகறிந்த உண்மையாகிவிட்டது. சந்திரிகாவின் இத் திடீர்த் தலையீட்டினால் ரணிலின் ஆட்சிபீடம் அதிகாரமிழந்து முடங்கிக் கிடப்பது மட்டுமன்றி சமாதான வழிமுறைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.



## தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் புயல் இனவாத அசிங்க முகம் அம்பலத்திற்கு

எமது இயக்கம் முன்வைத்த இடைக்கால அதிகார சபை, தமிழீழத் தனியரசை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகவும் தனியரசுக்கான படிக்கற்களைக கொண்டி ருப்பதாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. நாம் தெரிவித்த யோசனைகள் எமது தேசியப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கான இறுதித் திட்ட மன்று. எமது திட்ட வரைவு ஓர் இடைக்கால ஒழுங்கு பற்றியது. நாம் பரிந்துரைத்த நிர்வாக சபை கணிசமான தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதென்பது உண்மை. உருப்படியான நிர்வாக அதிகாரங்கள் இல்லாமற் போரினாற் பாதிக்கப்பட்ட பல லட்சம் மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங் களை முன்னெடுப்பதும் சாத்தியமில்லை. அத்துடன் சட்டம் - ஒழுங்கு, நீதி நிர்வாகம், நிதி ஒதுக்கீடுகள், காணிப் பகிர்வுகள் போன்ற பிராந்திய நிர்வாகத்தையும் செம்மையாகச் செயற் படுத்த முடியாது. இங்கு இன்னொரு முக்கிய விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அதாவது, வடகிழக்கிலுள்ள பெரும் பகுதி ஏற்கனவே எமது ஆட்சியதிகாரத்தின் கீழ் நேர்த்தியாக நிர்வகிக்கப்பட்டு வருகின் றது என்ற யதார்த்த உண்மையையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடகிழக்கில் இன்று நிலவும் கொடூரமான யதார்த்தப் புறநிலைகள், தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, ஆயுதப் படைகளின் அனர்த்தங்கள், இயல்புநிலை தோன்றாத அவல நிலை, எமது மக்கள் எதிர்கொள்ளும் அவசர மனிதாபிமானத் தேவைகள் மற்றும் பல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் நீதி யான, நியாயமான, உடனடியான பரிகாரம் காணும் நோக்கு டனேயே ஓர் உருப்படியான திட்டமாக எமது யோசனைகளை முன் வைத்தோம். இத் திட்டத்தில் முற்போக்கான, புதுமையான, ஆக்கபூர்வமான அம்சங்கள் பலவுண்டு. வடகிழக்கிற் பெரும்பான்மையினராக வாழும் தமிழரும் மற்றும் முஸ்லிம், சிங்கள மக்களும் தமிழீழ மண்ணில் தமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வை மேம்படுத்தும் வகையில் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமைகிறது. இந்தச் சுயாட்சிக்கான அம்சங்களை மிகைப் படுத்தி, அவற்றைத் தனியரசுக்கான திட்டமாகத் திரிபுபடுத்தி எமது சமாதான முயற்சிக்குக் களங்கம் ஏற்படுத்தச் சில சக்திகள் முனைவது எமக்குக் கவலையைத் தருகிறது. இந்த இடைக்கால அதிகார சபைத் திட்டம் அரசாங்கத்தின் யோசனைகளுக்கு மாற்றீடாக, பேச்சுக்களுக்கு அடிப்படையாக முன்வைக்கப் பட்டதாகும். நேர்மையுடனும், சமாதான வழிமுறையில் உறுதியான பற்றுடனும் நாம் மேற்கொண்ட இம் முன்முயற்சி தென்னிலங்கையில் ஓர் அரசியற் புயலைக் கிளப்பியிருக்கிறது. சிங்கள இனவாத சக்திகள் எமக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளன. சிங்கள தேசத்தின் இரு பெரும் கட்சிகளுக் கும் அதன் தலைவர்களுக்கும் மத்தியில் எழுந்த அதிகாரப் போட்டியால் அரச கட்டமைப்பே ஆட்டம் கண்டு நிற்கிறது. காலங்காலமாகத் தமிழருக்கு உரிமையை மறுத்துவரும் சிங்கள இனவாதத்தின் முகமூடி கிழிந்து விட்டதால் அதன் உண் மையான, அசிங்கமான முகத்தை உலகம் காணக்கூடியதாக இருக்கிறது.

## கதையின் நாயகர்கள் மாறினாலும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை

முடிவில்லாத ஒரு துன்பியல் நாடகமாகத் தமிழரின் இனப் பிரச்சினை தொடர்கிறது. எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளும்கட்சி முயற்சிப்பதும் எதிர்க்கட்சி எதிர்ப்பதும் பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியிற் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகிறது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குனர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக்காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை. தற்போது கொழும்பில் உருவாகி யிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்த நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான்.

தமிழர்களைப் பகடைக் காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

எத்தனையோ பேச்சுவார்த்தைகள் முறிந்துபோயின. எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப் போயின. இதனால் தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கிறது.

## தனியரசு மார்க்கத்திற்கு தமிழர்களைத் தள்ளவேண்டாம்

சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குட் சிக்கித் தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்க முடியாது. வன்முறையைத் துறந்து, மென்முறைப் பாதையைத் தழுவி சமரசத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எம்மால் முடிந்தளவு நாம் முயற்சித்து வருகின்றோம். இதனை உலக நாடுகளனைத்தும் நன்கறியும். ஆனால், சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து, ஒடுக்குமுறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் பிரிந்து சென்று தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதி மார்க்கத்திற்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிடவேண்டாமென நாம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி, இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சத்தியாலும் அசைத்துவிட முடியாது. இந்த உண்மையை இன்றைய புனித நாளில், தமிழீழத்திலும் உலகெங்கும் எமது தியாகிகளை நினைவுகூரும் இந் நன் நாளில், எமது இதயங்களிற் பதித்து, விடுதலை என்ற எமது சத்திய இலட்சியத்தில் நாம் உறுதி கொள்வோமாக.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.


# ஈழநாதம் பணிமனை

# பணிநிலை வெற்றிடம்

### ஈழநாதம் நிறுவனத்தில் பணியாற்ற கீழ்காணும்தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### பணிநிலை – 01

பதவி 01 :- கணக்காளர்
தகைமை :- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்காளர் அல்லது கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதிவாளராக 05 வருடத்திற்கு குறையாமல் கடமையாற்றிய அனுபவம்.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
வயது :- 21-65

பதவி 02 :- கணக்குப்பதிவாளர்
தகைமை :- க.பொ.த உயர்தரத்தில் கணக்கீட்டில் Bதரச் சித்தி உட்பட 3பாடங்களில் சித்தி
சம்பளம் :- தகுதிக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது :- 21-65

### பணிநிலை – 02

பதவி 01 :- கணினி தட்டெழுத்தாளர், பக்க வடிவமைப்பாளர்
தகைமை :-கணினித் துறையில் D.T.P கற்கைநெறி முடித்திருத்தல், பத்திரிகை நிறுவனம், கணினி நிலையங்களில் பணி புரிந்தமைக்கான சான்றிதழ் பத்திரம்.
சம்பளம் :-திறமைக்கும் அனுபவத்திற்குமேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது :- 20-50

பதவி 02 :- கணினி தட்டெழுத்தாளர்
தகைமை :-க.பொ.த சாதாதரணதரத்தில் தமிழ்மொழியில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி, கணினியில் M.S Word, வேகம் கவனத்தில் எடுக்கப்படும்
சம்பளம் :-திறமைக்கும் அனுபவத்திற்குமேற்ப நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது :- 20-50

### பணிநிலை – 03

பதவி 01 :-ஒப்பு நோக்குநர்
தகைமை :-க.பொ.த. சாதாரணதரம் தமிழ்மொழியில் திறமைச் சித்தி உட்பட க.பொ.த. உயர்தரத்தில் சித்தி அடைந்திருத்தல், ஓய்வூதியம் பெறுபவர்களும் உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் :-தகைமைக்கேற்ப நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
வயது :-25-65

### பணிநிலை – 04

பதவி 01 :- பத்திரிகையாளர்
தகைமை :- க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ் மொழியில் திறமைச்சித்தி உட்பட க.பொ.த. உயர்தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். பத்திரிகைத் துறையில் அனுபவம் அல்லது ஆர்வம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
வயது :- 20-50

**மேற்படி பணிகளுக்குத் தகைமையுடையவர்கள் எதிர்வரும் 05.12.2003 வெள்ளி காலை 10.00 மணிக்கு யாழ்.சாலை, கிளிநொச்சியில அமைந்துள்ள ஈழநாதம் தொடர்பகத்துக்கு நேரில் சமுகம் தரவும்.**

**நிர்வாகம்.**


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –45

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



### படத்திற்கு மெருகூட்டுங்கள் –45

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –44



**இ.உமாகரன்,**
**இல: 279,**
**சிவசுந்தரம் வீதி,**
**வட்டக்கச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

போரரக்கி மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டு
சமாதானத்தின் தூதுவர்களை ஒதுக்குவதால்
கயவர்கள் காலடி வருமென எண்ணி
கனரகத்துடன் எங்கள் காவலன்.

### பாராட்டுக்குரிய வரிகள்

*காவல் அரணில் நானிருந்து*
*கயவர் படை அழிப்பேன்*
*ஈழம் விடியும் என்றோ - அதற்காய்*
*என்னை நான் அளிப்பேன்.*

யாழவன் (ரதன்),
புதுக்குடியிருப்பு.

*கன்னங்கள் தாங்கிடும் காலங்கள் தானிதுவா!*
*சன்னங்கள் தான்பட்டு மடிந்த மாவீரர் நாளல்லவா!*
*வண்ண வண்ணக் கனவுகள் கண்டு மாண்டாரே....!*
*அண்ணன் வியூகத்தின் எண்ணத்தையே நீ தாங்குகிறாய்.*

V.உதயசாந்தா,
புதுக்குடியிருப்பு.

*சமகாலத்தை நம்பி*
*சலிக்காது நிற்கும் புலி வீரனே!*
*கைதனில் கருவி இருப்பது*
*கட்டாயம் உதவுமடா தம்பி.*

வ.சுதன்,
புளியங்குளம்..

*தப்பியோடியும் பலர் வருவர்*
*தரவெடுக்கவும் சிலர் புகுவர் - ஆயினும்*
*காப்பரணில் நீ இருப்பதால்*
*நிம்மதியாய்த் தூங்குமே இப்பிஞ்சுகள்.*

இ. தில்லை,
நெடுங்கேணி.

*இமைக்காது இலக்கை எதிர்பார்த்து ஏங்கும்*
*இளம் மலரே....*
*சண்டைக்காலத்தில்தான் கண் விழித்தாய்*
*என்றால் - சமாதானக் காலத்திலுமா இப்படி??*

இரா.மாலா,
றெட்பானா.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

நம் தவறுகள் நமக்கு மட்டும் தெரிந்திருக்கும் போது, அவற்றை நாம் மறந்து விடுகிறோம். – லா ரோஷ்ஃபுக்கோ



# தகவல் தொழில்நுட்பத் துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற BTEC HND தகைமையை IIS நிறுவனம் வழங்குகிறது.

**கணனித்துறையில் பட்டப்படிப்பு**

நீங்கள் ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? எனில் இச்சந்தர்ப்பத்தை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். *Edexcel* International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.sc(Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்...

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Hiher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப்பயிற்சி நெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் *Edexcel* இன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். *Edexcel* என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப்பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத்தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்ரேலியா, ஐக்கியஅமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.sc(Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதார ரீதியாக நீங்கள் பெரும் நன்மை அடையமுடியும்.

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு 021-222 2831/021-222 6933 அல்லது இல.100 மணிக்கூட்டுக்கோபுர வீதியில் அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

கல்வியாண்டு 2004 க்குரிய பிரிவு I ஜனவரி மாதம் 23 ம்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிப்படுவார்கள். ( வார இறுதி நாட்களில் தனித்தனியே பிரிவுகள் ஆரம்பிக்கப்படும்)
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

## INSTITUTE OF INFORMATICS STUDIES
An *Edexcel* approved HND Centre

100, clock Tower Road, Jaffna. Call as @ 021-222 2831/021-222 6933

(சி-8815)




# YAMAHA

இதோ!
யாழ்ப்பாணத்திலும்
உங்களுக்காக....!

- அதி நவீன தொழில் நுட்பங்கள்
- மிக உயர்ந்த தரம்
- மிகச் சிறந்த பாதுகாப்பு
- வியக்க வைக்கும் சொகுசு
- மிகக் குறைந்த எரிபொருள் பாவனை
- கவர்ச்சிகரமான அமைப்பு

2 வருட உத்தரவாதம்




மோட்டார் சைக்கிள் வாங்குபவர்களுக்கு
ஒரு "CASTROL" OIL CAN
கவர்ச்சியான ஸ்டிக்கர்
ஒரு சோடி கிளவுஸ்
3 சேர்விஸ்கள்
இலவசம்



Visit our Web Page :
yamahaplaza.com

சகல விதமான யமஹா உதிரிப்பாகங்களையும் இம்போட்டட் ஹெல்மெட், ஜக்கெட் வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## YAMAHA PLAZA
யமஹா பிளாஸா

298, K.K.S. Road, Jaffna.
Tel: 0777 198000

(சி-8814)



## ExpoAir
*your friend in the skies*

எக்ஸ்போ எயார்



யாழ்-கொழும்பு பயணத்தின் போது ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் - 021-2223891, 021-2226297, 074 512666, 011-2360291, 0712-348888, 0712-349999, 011-2360290,

e-mail- jaffna@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

(சி-8840)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.